# எழுவான்
Ezhuvaan

சிறப்புமலர்



பிரதேச கலாசார விழா – 2018

மண்முனை தென் எருவில் பற்று - பிரதேச கலாசாரப் பேரவை

பிரதேச செயலகம், களுவாஞ்சிகுடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுவான்

## சிறப்புமலர்

DIVISIONAL SECRETARIAT
05 NOV 2018
KALMUNAI TAMIL DIVISION

## பிரதேச கலாசார விழா - 2018

வெளியீடு

**பிரதேச கலாசாரப் பேரவை**

**பிரதேச செயலகம்,**

**மண்முனை தென் எருவில் பற்று**

**களுவாஞ்சிகுடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுவான்
## சிறப்புமலர்

# Ezhuvaan
## Special Publication to express the Cultural Day -2018


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | எழுவான் |
| வெளியீடு | : | கலாசாரப் பேரவை,<br>பிரதேச செயலகம்,<br>மண்முனை தென் எருவில்பற்று,<br>களுவாஞ்சிகுடி |
| அட்டைப்படம் | : | திரு. எல். நந்தீஸ்வரன்<br>திரு. க.சுந்தரலிங்கம் |
| பக்கங்கள் | : | 80 |
| கணினி வடிவமைப்பு | : | சங்கர் |
| அச்சுப்பதிப்பு | : | வணசிங்கா அச்சகம்,<br>மட்டக்களப்பு. |



**மலர் வெளியீட்டுக் குழு**

1. திருமதி. சத்தியகௌரி தரணிதரன்
2. தேனுூரான் க. தருமரெத்தினம்
3. திரு க.ரவிந்திரன்
4. கலாநிதி நா. நாகேந்திரன்
5. திரு க.கயல்வேந்தன்
6. திருமதி றூத்சந்திரிக்கா சுரேஷ்
7. திருமதி ராதிகா கருணாகரன்
8. திருமதி டிமாலினி நிராஜ்

**ஆலோசகர்**

திருமதி சிவப்பிரியா வில்வரத்னம்
பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவைத் தலைவரும்.
பிரதேச செயலகம், மண்முனை தென் எருவில்பற்று,
களுவாஞ்சிகுடி.



**Conducted by Cultural Federation**
Divisional Secretariat
Manmunai South Eruvil pattu
Kaluwanchikudy



**Editorial Board**


1. Mrs. Sathyagowry Tharanitharan
2. Thenuraan K. Tharumaretnam
3. Mr. K.Ravindran
4. Dr. N. Nagendran
5. Mr. K. Kayalventhan
6. Mrs. Rooth Chandrika Suresh
7. Mrs. Rathika Karunakaran
8. Mrs. Dimalini Niraj

**Advisor**
Mrs Shivapiriya Vilvaratnam
Divisional Secretary
Manmunai South Eruvil pattu
Kaluwanchikudy



**Published By**
Divisional Secretariat
Manmunai South Eruvil pattu
Kaluwanchikudy


இம் மலரில் இடம்பெறும் ஆக்கங்கள்
அனைத்திற்கும் ஆக்கியவரே பொறுப்பாகும்



# ஆசிச்செய்தி

கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு நகரின் தென்பகுதியில் தனித் தமிழரும், தமிழர் பண்பாடும், கலாசாரமும், சைவ விழுமியங்களும் செறிந்து வாழும் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம் தனது பிரதேசத்தில் அருகிவரும் பாரம்பரிய கலை வடிவங்களை வளர்த்தெடுக்கும் நோக்கில் பிரதேச கலாசாரப் பேரவை வருடாவருடம் நடாத்தும் பிரதேச கலாசார விழா மற்றும் "எழுவான்" சிறப்பு மலர் வெளியீடு என்பவற்றுக்கு ஆசியுரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். மலர்க் குழுவினரையும் பாராட்டுக்கின்றேன். இத்தகைய நிகழ்வுகள் பிரதேச மக்களின் கலை கலாசார பண்பாட்டுக் கோலங்களை பறைசாற்றுவனவாக அமைகின்றன.

கலை என்பது, மனித முயற்சியால் உருவாக்கப்படுகின்ற அழகியல் அம்சத்தை தன்னகத்தே கொண்டதான உணர்வினை வெளிப்படுத்தக் கூடியதாக அல்லது தூண்டக் கூடியதாக அமைகின்ற படைப்புக்கள் கலைப் படைப்புக்களாகும். இவ்வாறான அரிய அம்சங்களைக் கொண்ட கலைகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் எட்டுத் திக்கும் பரவிக்கிடந்தன என்பதனை "மட்டுநகர் அழகான மேடையம்மா இங்கு எட்டுத் திக்கும் கலையின் வாடையம்மா" என உணர்ச்சி பெருக கவிஞர் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் இன்றைய காலகட்டங்களில் மனித குலமானது தனது அடையாளங்களை இழந்து, மறந்து வரட்டு கௌரவங்களாலும் நாகரீக மோகத்தாலும் பல அரியவகை கலைகளை இழந்து நிற்கின்றது. சில கலைகள் அழிவடைந்து போகும் தறுவாயிலும் உள்ளன.

'தேசியக் கப்பலில் - நம் சமூகமாகிய அக்கப்பலில் ஓட்டைகள் இருந்தாலும் நாம் அதன் பிள்ளைகள் அல்லவா? அந்த ஓட்டைகளை அடைப்போம்" என்கிறார் சுவாமி விவேகானந்தர். சுவாமி விவேகானந்தரின் பொன் மொழிக்கேற்ப இவ்வாறான காலகட்டத்தில் தென் எருவில்பற்று பிரதேச செயலகம் இவ்வருடமும் "எழுவான்" சிறப்பு மலர் வெளியிடுவதானது, மீண்டும் இப்பிரதேசத்திற்குரிய கலைவடிவங்கள் துளிர்விடுவதற்கான ஓர் உந்துசக்தியாக அமையும் அத்துடன் இந் நிகழ்வில் துறைசார் கலைஞர்கள் பலர் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளதானது அருகிவரும் கலைவடிவங்களுக்கு உயிரூட்டுவதாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மண்முனை தென் எருவில்பற்று பிரதேசமானது குருக்கள்மடம் தொடக்கம் துறைநீலாவணை வரை 45 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட ஓர் பிரதேசமாகும். இங்கு பாரம்பரிய கலைவடிவங்கள் இன்னும் பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்வரிய முயற்சியில் தங்களை ஈடுபடுத்திச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பிரதேச செயலாளர், பிரதேச கலாசாரப் பேரவை, மலர்க் குழுவினர் அனைவருக்கும் இறைவன் அருள்பாலிக்க வேண்டுமென இறைவனை வேண்டி, மேலும் இவர்களது செயற்பாடுகளும் பணிகளும் சிறக்க தெய்வத் திருமூவரின் நல்லாசிகளையும் வேண்டி என் நல்லாசிகளையும் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுவாமி பிரபுபிரேமானந்தா**

தலைவர், இராமகிருஷ்ணமிஷன், மட்டக்களப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்ட செயலாளரின்

# வாழ்த்துச்செய்தி



மண்முனை தென் எருவில் பிரதேச கலாசாரப் பேரவையினால் வருடாவருடம் நடாத்தப்படும் கலாசார விழாவினை முன்னிட்டு வெளியிடப்படவிருக்கும் 'எழுவான்' சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒவ்வொரு வருடமும் பிரதேச செயலக மட்டத்தில் நடைபெற்று வரும் கலை நிகழ்வுகள் குறித்த பிரதேசத்தில் சமூக அமைப்பினையும் அதன் உயிரோட்டமான கலாசார ஒழுக்கப் பெறுமதிகளையும் மேம்படுத்தி சமூக ஒழுங்கினைப் பேணுவதில் காத்திரமான பங்கினை வகித்து வருகின்றது. பிரதேசத்தின் கலைஞர்களின் கலை உணர்வுகள், பாடசாலை சிறார்களின் கலைப்படைப்புகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் களமாக இக்கலாசார விழா அமையும் என்பது தெளிவு.

பகலவன் எழுந்துவரும் எழுவான் கரையை குறிப்பாக 'எழுவான்' மலரானது பிரதேச வாழ் பண்டிதர், பாமரர், சிறுவர், பெரியோர், கலைஞர்கள், அறிஞர்கள் ஆகிய பலதரப்பட்ட மக்களின் ஆற்றல்களையும் உள்ளக்கிடக்கைகளையும் வெளிக்கொணரும் ஆவணமாக திகழும் என்பதில் ஐயமில்லை. அது இப்பிரதேசத்தின் கலைஞர்களின் கலை ஆர்வலர்களின் எழுச்சியையும் சுட்டுவதுடன், எமது கலை கலாசார மரபுகளை எதிர்கால சந்ததியினருக்கு 'எழுதுவான்' என்ற கருத்தையும் தருகிறது.

இந்நூல் சிறப்புற ஒத்துழைப்பு வழங்கிய பிரதேச செயலாளர், கலாசாரப்பேரவை உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகிய யாவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மா. உதயகுமார்**
அரசாங்க அதிபரும்,
மாவட்ட செயலாளரும்
மட்டக்களப்பு மாவட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாண பணிப்பாளரின்

# வாழ்த்துச்செய்தி



இன்றைய நவீன யுகத்தின் இயந்திரமயமான வாழ்வியலில் இருந்து மாந்தருக்கு ஏற்படும் உளநெருக்கடியை நீக்கி உளச்சமநிலையை ஏற்படுத்துவதில் கலை, இலக்கிய செயற்பாடுகளின் வகிபாகம் மிகமுக்கியமானதாகும். ஒரு இனக்குழுமத்தின் தனித்துவத்தையும் அவர்களின் வாழ்வியல் முறையையும், வரலாற்றையும் அறிந்து கொள்வதற்குமான சான்றாதாரங்களாகவும் கலை இலக்கியத்துறைசார் ஆக்கமுயற்சிகள் ஏற்றுக்கொள்ளப்படுவதனை நாம் காணலாம்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் கலை இலக்கிய போட்டிகளை நடாத்தி அதில் வெற்றி பெற்றவர்களை கௌரவப்படுத்துவதுடன் பிரதேச கலை இலக்கிய செயற்பாடுகளில் காத்திரமான பங்களிப்புக்களை வழங்கி வரும் கலைஞர்களை பாராட்டியும், மூத்தகலைஞர்களை கௌரவப்படுத்தியும் வருகின்றமை பாராட்டுக்குரியதாகும். இத்தகைய காத்திரமான செயற்பாடுகளினால் பிரதேசத்தில் வாழ்கின்ற கலைஞர்கள், சுவைஞர்கள் பெரும் பயனை பெறுவதுடன் கலை இலக்கிய செயற்பாடுகளில் அவர்களின் வீரியம்மிகு பங்களிப்பை பெற்றுக்கொள்ளலாம்.

இந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று, களுவாஞ்சி குடி பிரதேசமானது தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசம் ஆகும். புதிய பிரதேச செயலாளரது வருகையுடன், 2013ஆம் ஆண்டின் பின்னர் தற்போது 2018ஆம் ஆண்டுக்கான பிரதேச கலாசார விழாவினை நடாத்துவதுடன், விழா ஞாபகார்த்தமாக 'எழுவான்' என்னும் மலரையும் வெளியிடவுள்ளமை பாராட்டப்பட வேண்டிய பணியாகும். இம் மலரில் பிரதேசத்தில் முத்திரை பதித்த மூத்தகலைஞர் கௌரவிப்பு, இளங்கலைஞர் பாராட்டு என்பவற்றுடன் பிரதேச கலை இலக்கிய முயற்சிகள் தொடர்பான ஆவணங்கள், ஆக்கங்கள் பதிவுகளாக உள்ளடங்கியிருப்பது சிறப்பான அம்சமாகும்.

மண்முனை தென் எருவில் பற்று, களுவாஞ்சி குடி பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படும் பிரதேச இலக்கிய விழா சிறப்புடன் நடைபெறவும், விழா ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் 'எழுவான்' ஞாபகார்த்த மலருக்கு வாழ்த்து தெரிவிப்பதுடன் இத்தகைய வரலாற்று கடமையில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட பிரதேச செயலாளர், மற்றும் விழாக்குழு, மலர்க்குழு உட்பட்ட சகலருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. வளர்மதி ரவீந்திரன்**
மாகாணப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.

# அணிந்துரை



ஆதவன் தன் கதிர்களை எழுப்பி அழகுபடுத்தும் அழகான பிரதேசம் மண்முனை தென்எருவில் பற்று. இப்பிரதேசம் மண் வளத்தாலும் நீர் வளத்தாலும் தன்னை மென்மேலும் அழகுபடுத்தி செழிப்பாக மிளிர்கின்றது. பண்பாடு, மரபு வழி, பாரம்பரியம், மனித விழுமியம் என்பன போற்றப்படும் அளவுக்கு இப்பிரதேச மாந்தர்கள் தம்மை வழிப்படுத்தி இருப்பதுடன் கல்வியிலும் மேம்பட்டு பரிணமிக்கின்றனர்.

இப்பிரதேச கலைஞர்களுக்கு களம் அமைக்கவும், பிரதேசத்தின் பாரம்பரிய மற்றும் பிரபல்யமான கலைகளை பாதுகாத்து வளர்க்கவும் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச கலாசாரப் பேரவை கலாசார விழாவினை முன்னெடுக்கின்றது. அதன் ஓர் அம்சமாக 'எழுவான்' சஞ்சிகையையும் வெளியிட்டு வருகின்றது.

கலாசார பேரவையின் காலத்தால் நிலைத்திருக்கும் ஆவண முயற்சியான 'எழுவான்' சிறப்பு மலருக்கு அணிந்துரை வழங்குவதில் உவகை அடைகின்றேன். இம்மலர் வெளியீட்டுக்கும், பிரதேசத்தின் பெருமை பறைசாற்றவும் வழிசமைத்த கலாசார பேரவை உறுப்பினர்கள், பிரதேசத்தின் கலைஞர்கள், பக்கபலமாக நின்று செயற்பட்ட செயற்பாட்டாளர்கள் ஆக்கங்களால் மலருக்கு அணி சேர்த்த எழுத்தாளர்கள், கலாசார உத்தியோகத்தர் மற்றும் விழாவிற்காக அர்ப்பணிப்புடன் அயராது உழைத்த எமது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவரையும் மனதார பாராட்டுகிறேன்.

கலாசார விழா - 2018ம் மலர் வெளியீடும் சற்றே கால இடைவெளியில் 2013ம் ஆண்டின் பின்னர் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. தனித்துவமான கலை இலக்கிய பாரம்பரிய பண்பாட்டு அம்சங்களை தாங்கி வெளிவரும் இம்மலர் தொடர்ந்தும் மலர்ந்து மணம் வீச பிரார்த்திக்கின்றேன்.


**திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்**
பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவைத் தலைவரும்,
பிரதேச செயலகம், மண்முனை தென் எருவில்பற்று,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வெளியீட்டுரை

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் வருடாவருடம் நடாத்தப்படும் கலாசாரவிழாவை முன்னிட்டு எழுவான் சிறப்பு மலர் வெளியிடப்படுகிறது. இம்மலரானது பிரதேச மக்களின் கலாசாரப் பாரம்பரியங்களை பாதுகாத்து ஊக்குவித்து அவற்றினை ஆவணப்படுத்தும் ஓர் ஏடாக திகழ்கின்றது. இம்மலரில் இடம்பெறும் ஆக்கங்கள் அனைத்தும் பிரதேச எழுத்தாளர்களினால் எழுதப்பட்டவை.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேசமானது தமக்கென தனித்துவம் கொண்ட மக்கள் வாழ்ந்துவரும் ஒரு பிரதேசம் இங்குள்ள மக்களின் கலை, கலாசாரங்கள் இலக்கிய பாரம்பரியங்களை எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் பொறுப்பில் "எழுவான்" சிறப்பு மலரானது காத்திரமான பங்களிப்பினை வழங்கிவருகின்றது.

இக் கலாசார விழாவின் ஓர் அம்சமாக ஒவ்வொரு வருடமும் பிரதேச மட்டத்தில் கலைஞர்கள் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்காக கௌரவிக்கப்படுகின்றனர். அவ்வகையில் இவ்வருடமும் இவ்விழாவில் மூத்தகலைஞர்களுடன் இளங்கலைஞர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

எழுவான் சிறப்பு மலர் வெளியீட்டுக்கு அனைத்து உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கிய பிரதேச செயலாளர் அவர்களுக்கும் மற்றும் இம் மலர் வெளியீட்டிற்காக அர்ப்பணிப்புடன் உழைத்த கலாசார உத்தியோகத்தர் திருமதி. ராதிகா கருணாகரன், மலர் வெளியீட்டிற்கான ஆக்கங்களை வழங்கிய பிரதேச கலைஞர்களுக்கும், கலாசார விழா போட்டியில் மாணவர்களை பங்குபற்ற ஊக்கமளித்த, ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்

**திருமதி. சத்தியகௌரி தரணிதரன்**
உதவிப் பிரதேச செயலாளர்
மண்முனை தென் எருவில் பற்று
களுவாஞ்சிகுடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்முனை தென் எருவில் பற்று
# பிரதேச கலாசார கீதம்

மண்முனை தென் எருவில் பற்று
மக்கள் சுற்றம் தொழில் வளம்
எண்முனையுஞ் சூழ்கவென்று
இறைவணக்கம் செய்திடுவோம்
கண்நிறை கலை வளம்
பொன்வளம் புகழ்வளம்
விண்வரை நிரந்தரம்
வீங்கி வாழ வேண்டுவோம்.....

குருக்கள்மடம் எருவில் செட்டி
பாளையம் களுதாவளை
குருமண்வெளி களுவாஞ்சி
குடி மகிழூர் ஓந்தாச்சி
மடத்துடன் மாங்காடு
துறைநீலாவணை கல்லாறு
செழுத்த தேற்றாத்தீவுப்
பிரதேசம் ஒன்றாய் வாழ்கவே....

பொங்கு தங்க மண் விளைந்த
துங்க நெண்மணிக் கதிர்
எங்கு மெங்கள் கொடைகளென்று
ஏந்தி நிற்கும் வயல் வளம்
தங்கு மெழில் மண்முனை தென்
எருவில் பற்றிலங்கையின்
மங்கிடாத கண்ணொளியாய்
வளரவேண்டும் வாழ்கவே...
வாழ்கவே... வாழ்கவே

வானுயர்ந்த தென்னை மரத்
தோப்பு வாழை பலவினம்
தேனிறைந்த மாவினம்
தித்திக்கும் பலாவினம்
பானிறைந்த கால் நடைப்
பட்டி கோழிப் பண்ணைகள்
ஊண் விளைந்த வளங்களாக
ஓங்கிப் பரவி வளர்கவே

செஞ்செழிப்பு வதனமும்
சிவந்த இகழ்ப் பதனமும்
தந்து நிற்கும் வெற்றிலைத்
தோட்டம் இங்கு தனிக்கொடை
வந்தவரை வாழவைக்கும்
மரக்கறி வகைத் தோட்டமும்
கொண்ட எங்கள் மண்வளம்
குறைவிலாது வாழ்கவே
வாழ்கவே... வாழ்கவே...

ஊரி பாட நண்டு நடனம்
ஆடி மகிழும் கடல் வளம்
சேர வாழும் வலைஞர் வெள்ளை
நீறு தரும் விளைஞர்கள் வெள்ளை
காரியக்காண் பார்வையுள்ள
கருணையின் பொற்கொல்லர்கள்
சீரிய சிற் றூழியர்கள்
சிறந்து விளங்க வாழ்கவே

ஆசிரியச் சேவகர் நெல்
ஆலை கல்விச் சாலைகள்
அருமை நெசவுச்சாலை பல
கருமம் உயர் கழகங்கள்
மாசில் மேசன் தச்சன் மேலும்
வகை வகை தொழிலாளர்கள்
தேசம் போற்ற நன்மை பெற்றுத்
திகழ வேணும் வாழ்கவே.
வாழ்கவே... வாழ்கவே....

கருமம் ஓங்கத் தருமம் ஓங்கக்
காரியங்கள் ஆற்றிடும்
பிரியமான பிரதேசச்
செயலகமும் ஓங்கவே
கருணையுள்ளம் கடவுளுள்ளம்
திறமைச் சேவை நலவுளம்
பெருமையோடு எங்கள் மண்ணில்
பெருக என்று வாழ்கவே...

தண்டமிழும் சகல மதப்
பண்பழகும் கொண்ட நம்
பண்டையோர் வரன் முறையை
அண்டி யடி ஒற்றியே
என்றுமுள இன்பநிலை
நின்று பொருள் கொண்டு நல்
ஏற்ற வாழ்வில் இனிமை நிலவ
இறைவனருள் வேண்டுவோம்...
வேண்டுவோம்... வேண்டுவோம்....

மண்முனை தென் எருவில் பற்று
மக்கள் சுற்றம் தொழில் வளம்
எண்முனையுஞ் சூழ்கவென்று
இறைவணக்கம் செய்திடுவோம்
கண்நிறை கலைவளம்
பொன்வளம் புகழ்வளம்
விண்வரை நிரந்தரம்
வீங்கி வாழ வேண்டுவோம்

ஆக்கம் : **எஸ். இளையதம்பி** பெரியகல்லாறு.


noolaham.org | aavanaham.org

கலாசாரப் பேரவை

## உறுப்பினர்கள் விபரம்

| | | |
|---|---|---|
| **தலைவர்** | :- | திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்<br>பிரதேச செயலாளர் |
| **உப தலைவர்** | :- | திருமதி. சத்தியகௌரி தரணிதரன்<br>உதவிப் பிரதேச செயலாளர் |
| **செயலாளர்** | :- | திருமதி. ராதிகா கருணாகரன்<br>கலாசார உத்தியோகத்தர் |
| **பொருளாளர்** | :- | திரு. க. கயல்வேந்தன்<br>கவிஞர் |
| **கணக்காய்வாளர்** | :- | திரு. எஸ். கார்த்திகேஸ்<br>கணக்காளர் |

**உறுப்பினர்கள் :-**

| | | |
|---|---|---|
| திரு க. தருமரெத்தினம் | :- | அண்ணாவியார் |
| திரு வீ. இராசமாணிக்கம் | :- | அண்ணாவியார் |
| திரு க. ரவீந்திரன் | :- | எழுத்தாளர் |
| கலாநிதி நா. நாகேந்திரன் | :- | பிரதி அதிபர் மட்/பட்டிருப்பு தேசிய பாடசாலை |
| திரு க. சுந்தரலிங்கம் | :- | உதவிக் கல்விப் பணிப்பாளர் (சித்திரம்) |
| திருமதி வனிதா தனசேகரன் | :- | ஆசிரிய ஆலோசகர் (நடனம்) |
| திரு க. ருத்ராகணேஷன் | :- | கிராம நிருவாக உத்தியோகத்தர் |
| திரு ஆர். கிருபாகரன் | :- | சமூகசேவை உத்தியோகத்தர் |
| திருமதி அருந்ததி சிவரெத்தினம் | :- | முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி சந்திரசோதி ஜெகதீஸ்வரன் | :- | மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு இ. விவேகானந்தராஜா | :- | திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு இ. ரமேஸ் | :- | குடியேற்ற உத்தியோகத்தர் |
| திரு எம். குகதாசன் | :- | திட்டமிடல் உதவியாளர் (கரையாரம் பேணல்) |
| திரு க. ஜெயசூரியன் | :- | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி டிமாலினி நிராஜ் | :- | கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி குமுதினி பரமசிவம் | :- | இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. செ. ஞானசிறி | :- | கிராம சேவை உத்தியோகத்தர் |
| திரு மு. கங்காதரன் | :- | கிராம சேவை உத்தியோகத்தர் |
| திரு தெ. உதயசுதன் | :- | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோத்தர் |
| திரு ம. புவிதரன் | :- | திருவருள் நுண்கலை மன்றம் |
| திருமதி றூத் சந்திரிக்கா சுரேஷ் | :- | எழுத்தாளர் |
| திரு ச. செல்வப்பிரகாஷ் | :- | தேனுகா கலைக் கழகம் |
| திரு செ. ஸிந்தூரன் | :- | தேனுகா கலைக்கழகம் |

## எழுவானின் உள்ளே....


| | | |
|---|---|---|
| 1. | ஆசிச் செய்தி | 3 |
| 2. | வாழ்த்துச் செய்திகள் | 4 |
| 3. | அணிந்துரை | 6 |
| 4. | வெளியீட்டுரை | 7 |
| 5. | கலாசார கீதம் | 8 |
| 6. | கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் | 9 |
| 7. | மக்கள் மனதில் தென் எருவில் பற்று | 11 |
| 8. | மாண்புறு மண்முனை இராச்சியம் | 12 |
| 9. | பழைய பாரம்பரிய கூத்தின் தனித்துவம் | 19 |
| 10. | வெற்றிலையும் களுதாவளையும் - கவிதை | 23 |
| 11. | கிராமத்து புலவர்களின் வாய்மொழி நடை இலக்கியம் | 24 |
| 12. | பரத யோக முத்திரைகள் மூலம் ஆரோக்கியம் பெறலாம் | 28 |
| 13. | சிநேகிதனே சமூக சிற்பியாக சிந்தி - கவிதை | 30 |
| 14. | கோலம் போடுதல் | 32 |
| 15. | மாண்புறு மண்முனை தென் எருவில் பற்று - கவிதை | 33 |
| 16. | மறைந்துபோகும் பிரதேச பாரம்பரிய விளையாட்டுக்கள் | 34 |
| 17. | நாயிகா பாவ இசை உருப்படிகளுக்கு வித்திட்டது ஸ்ரீ ஆண்டாள் பாசுரங்களே | 36 |
| 18. | நல்லிணக்கம் வீசட்டும் - கவிதை | 37 |
| 19. | மீண்டும் கிடைத்த பரிசு - சிறுகதை | 38 |
| 20. | இது என்ன சாபம் - சிறுகதை | 40 |
| 21. | சமகால வாழ்வின் பிரதிபலிப்பாக புதியதொரு வீடு நாடகம் அனுபவப் பகிர்வு | 44 |
| 22. | தமிழே தர்மமே தாயே - கவிதை | 48 |
| 23. | ஓவியமும் வர்ணங்களும் | 49 |
| 24. | இந்து மதம் கூறும் விஞ்ஞான உண்மைகள் | 56 |
| 25. | தற்கொலை என்பது அழுத்தத்தின் வெடிப்பு | 58 |
| 26. | மண்முனை தென் எருவில் பறறு பிரதேசத்தில் சோதிடக்கலையின் பங்களிப்பு | 61 |
| 27. | வைகுந்த அம்மானை பாடுவது ஒரு மரபுவழிப் பண்பாடு | 63 |
| 28. | பாரம்பரிய உணவின் முக்கியத்துவம் | 65 |
| 29. | கலைஞர் கௌரவிப்பு | 67 |
| 30. | பிரதேச கலாசார விழா போட்டி முடிவுகள் - 2018 | 72 |
| 31. | ஓவியப்போட்டி முடிவுகள். | 73 |
| 32. | பிரதேச மட்ட இலக்கிய விழா போட்டி முடிவுகள் - 2018 | 74 |
| 33. | அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான போட்டி முடிவுகள் - 2018 | 75 |
| 34. | திறந்த பிரிவில் நடாத்தப்பட்ட ஓவியப்போட்டி ஓவியங்கள் | 78 |
| 35. | நன்றி நவிலல் | 79 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்கள் மனதில் தென் எருவில் பற்று



ஆக்கம்: **கல்லாறு நீதி**

மட்டுமா நகரின் தென்புறத்தே
மண்முனை தென் எருவில் நிலையாய்
விண்போல் உயர்ந்து காட்சி தரும்
கண்போல காத்துமே கதைகள் சொல்லும் - மட்டு


பார்க்குமிடமெல்லாம் பழ மரங்கள்
கேட்டிடுமே கங்குல் குயிலினிசை
நாட்டம் கொள்ளும் நற்பறவையினம்
கூட்டமாய் பறந்து குதூகலிக்கும்

கிழக்கே கடலலை எழுந்து வரும்
மேற்கே அழகுறு வயல் நிலமும்
தெற்கே தென்னை பனஞ்சோலைகளும்
வடக்கே வளைந்த நீள் சாலையுமே

ஆலயம் எங்கும் செழிப்படையும்
ஆவினம் ஆடொடு சேர்ந்து மேயும்
பூவினம் எங்கும் பூத்திருக்கும்
புகழ் தரும் இட மது தென் எருவில்

கல்விக் கூடம் அதிகமம்மா களனியும் இங்கே விளையுதம்மா
கலைகளும் இங்கே வளருதம்மா கண்ணகிக்கும் விழா பெருகுதம்மா!
நிலையிலும் உயர்ந்தவர் அதிகமம்மா நிம்மதி இங்கே நிலைக்குதம்மா
நீண்ட உறவுகள் நிலைத்திடவே நிமலன் பாதம் தொழுவோமம்மா

துறைநீலாவணை பெரியகல்லாறு கோட்டைக்கல்லாறு ஓந்தாச்சிமடம்
மகிழூரும் மகிழூர்முனையும் குருமண்வெளியுடன் எருவிலும்
பட்டிருப்பு களுவாஞ்சிகுடி களுதாவளையுடன் தேற்றாத்தீவு
மாங்காடு செட்டிபாளையமும் குருக்கள் மடமும் எருவில் பற்றே



கிராம உயர்ச்சிக்கு கிராம சேவையாளர்
கிரமமாய் வாழ்ந்திட சமுர்த்தியதும்
பிரதேசம் உயர்ந்திட செயலகமும்
பின்னிப் பிணையும் எருவில் பற்று

பிரதேச சபையின் உயர் சேவை
பிறர்மனம் வாழ்த்த காண்கின்றோம்
துயரற நாங்கள் வாழ்கின்றோம்
துன்பமில்லை எங்கள் வாழ்வினிலே

விவசாயத்தில் பல விற்பன்னர்கள்
விளையாட்டில் புகழ் பெறு வீரர்கள்
மீன்பிடியில் உயர் வல்லுனர்கள்
கைத்தொழிலும் நிறை எருவில் பற்று

சுற்றிவர பல நீரோடை
சுனைகளும் அழகினைத் தந்திடுமே
கற்றிடுவர் உயர் கல்விதனை
பெற்றிடுவர் நற் பேறுகளும்

கனிவுடன் பேசும் எருவில் பற்றார்
பணிவுடன் பாசம் கொள் எருவில் பற்றார்
துணிவுடன் செயல் கொள்வோர் எருவில் பற்றார்
துன்பமறியார் தென் எருவில் பற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாண்புறு மண்முனை இராச்சியம்

இலங்கையில் மேகவர்ணன் (கி.பி.303 - 328) ஆட்சிக்காலத்தில் கலிங்க ஒரிசாவில் குகசேனன் ஆட்சி செய்தான். அக்காலத்தில் கலிங்கத்துக்கும் ஈழத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பும் சமய சமரசமும் இருந்ததையும் அறியமுடிகின்றது.

விஷ்ணுவின் அவதாரம் தான் புத்தர் என்ற ஒரு கோட்பாடும் இருந்தது. கலிங்கத்தில் பௌத்தம் வேரூன்றிய அக்காலத்தில் புத்தரின் உடல் குஷி நகராவில் தகனம் செய்யப்பட்ட பின் மீந்திருந்த எலும்பு, பல் முதலிய புனித சின்னங்கள் ஏழு பங்காகப் பிரிக்கப்பட்டு இந்தியாவிலுள்ள முக்கிய நகரங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கங்கு தாது கோபுரங்களில் அடக்கம் செய்யப்பட்டன.

புத்தரின் புனித தந்தம் ஒன்றை அவரது சீடரான 'கேமா' என்பவர் கலிங்கமன்னன் பிரமதத்தனுக்குக் கொடுத்தான். அதனை கலிங்கத்தின் வட கிழக்கு எல்லையில் மகாநதிக்கரையில் பூரிஜெகநாதர் ஆலயத்தின் அருகில் கோயில் கட்டி விலை மதிப்பற்ற பேழையில் வைத்துப் பிரதிஷ்ட்டை செய்தார்.

அதன் பின் கலிங்கத்தில் குகசேனன் ஆட்சிக்காலத்தில் புத்ததந்தத்தைக் கவர்ந்து செல்லப் பலர் முயற்சி செய்தனர். குகசேனனின் நண்பன் மேகவர்ணன் இலங்கையில் விஜய துவீபத்தில் ஆட்சி செய்துகொண்டிருந்ததால் புத்ததந்தத்தைப் பாதுகாப்பதற்காகத் தன் மகள் உலகநாச்சியையும் மகன் உலகநாதனையும் ஒரு வர்த்தகக் கப்பலில் பாதுகாப்பாக அனுப்பி வைத்தான் குகசேனன்!

உலக நாச்சி புத்தரின் தசனத்தை தனது நெடும் கூந்தலில் மறைத்து வைத்துக் கொண்டு குக வம்சத்தார் கைலயங்கிரியில் வைத்திருந்த சுயம்பு லிங்கத்தையும் எடுத்துக் கொண்டு வந்தாள். உலக நாச்சியும், தம்பி உலக நாதனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் வாழ்ந்த கலிங்க வம்சத்தைக் கருத்தில் கொண்டுதான் வந்தனர்.

உலகநாச்சி மணிபுரத்தில் (யாழ்ப்பாணத்தில்) இறங்கி விஜயதுவீபத்துக்கு வந்து மேகவர்ணனைக் கண்டு தன் குலம் கோத்திரம் என்பவற்றைக் கூறி புத்தருடைய தசனத்தை மேகவர்ணனிடம் கொடுத்தாள்.

மேகவர்ணன் இனிப் பௌத்த சமயத்திற்கு எந்த அபாயமுமில்லையென்று மிகச் சந்தோஷம் கொண்டு உலக நாச்சியை நோக்கி உமக்கு வேண்டியதைக் கேளும் என்றான். உலக நாச்சி, அரசே! இந்த இலங்கையில் காடு செறிந்து குடிவாழ்வில்லாத கிராமம் ஒன்றை எனக்குத் தாருங்கள்! எனக் கேட்டாள். அவ்வுரை கேட்ட மேகவர்ணன் மட்டக்களப்பை அரசு புரியும் தனது நண்பன் குகசிங்கனுக்கு ஒரு திருமுகம் எழுதி அதில் 'உனது மட்டக்களப்பு, உன்னரசுகிரி இவைகளில் காடு செறிந்த ஒரு பிரதேசத்தை உலக நாச்சிக்குக் கைலஞ்சமாக ஈந்து விடுமாறு' கேட்டு உலக நாச்சிக்கு உபகாரப் பொருட்களையும் இரத்தின மாலைகளையும் கொடுத்து மட்டக்களப்புக்குக் குணசிங்கனிடம் அனுப்பி வைத்தான்.

உலகநாச்சியும், தம்பியும் கொங்குகாசி அம்பன் பிட்டி வழியாகவந்து மட்டக்களப்பில் குணசிங்க மன்னன் கையில் திருமுகத்தைக் கொடுத்தனர். குணசிங்கன் திருமுகத்தை வாசித்து சந்ததி முறைமை பாராட்டி மட்டக்களப்பின் வடபாகமாகவுள்ள அம்பிளாந்துறைக்கப் பால் மண்ணேறிமுனை வளர்ந்து காடுசெறிந்த குடிவாழ்வற்ற பகுதியை உலகநாச்சிக்கு நிந்தகமாய் ஈந்து குடிகளை அனுப்பி காடுகளை வெட்டிச் சுத்தப் படுத்தி மாளிகையுண்டாக்கி உலக நாச்சிக்கு கொடுக்க உலகநாச்சி குடிவாழ்ந்து சிலகாலத்தின் பின் தன் தம்பி உலக நாதனைத் தம் தந்தையிடம் அனுப்பிக் குகக்குடும்பம் நூற்றி ஆறும், சிறைக்குடும்பம் முப்பதும் (பணியாளர்கள்) வரவழைத்துக் குகக் குடும்பங்களைத் தனக்கு அருகாமையில் அமர்த்தி அந்த இடத்தில் ஆலயமியற்றி சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து வணங்கி வந்தனர். இக்கோயில் கோயில்குளத்தில் கட்டப்பட்டது. இன்னும் ஒரிசா மாநிலத்திலிருந்து அநேக குடும்பங்களை அழைப்பித்துக் காப்புமுனைக் காட்டை அழித்து அப்பகுதியில் குடியிருத்தி அரசியாகி 'மண்முனை இராச்சியம்' என நாமம் சூட்டினாள். காப்புமுனைக்குத் தென்பால் உள்ளகாட்டை அழிக்கும் போது வேடுவ இனத்தைச் சேர்ந்த திடகன் என்பவன் கொக்கட்டி மரத்தை வெட்ட உதிரம் பாய்ந்தது. அதைக் கண்ட திடகன் தனது உடைத்துணியினால் வெட்டுவாயைக் கட்டிவிட்டு உலகநாச்சியிடம் வந்து சொன்னான்.

உலகநாச்சி சென்று பார்த்த போது கொக்கட்டி மரத்தடியில் ஒரு சிவலிங்கம் இருந்தது. உலகநாச்சி வனத்தை அழிப்பித்துத் துப்பரவு செய்து முதலில் சிறு ஆலயமியற்றி வடநாட்டுக் கொல்லடத்திலிருந்து மூன்று பட்டர்களை அழைப்பித்து பூசை செய்யும்படி திட்டம் செய்தாள்.

அதிக காணிகள் திருத்தி குணசிங்கனுடன் பிறந்தவனான கிரசரன் என்பவனை மணந்து ஒரு புத்திரனையும் ஒரு புத்திரியையும் பெற்று வாழ்ந்து வருங்காலம் தத்த புரத்திலிருந்து ஆரம் தொடுக்கும் குடிகள் பதின்மரையும் அழைத்து தனது குடிகளுக்கு ஆதாரமாக இருத்திப் பத்தன் என்பவனை அவர்களுக்குத் துணையாக வைத்தாள் உலகநாச்சி.

உலகநாச்சி மண்முனைப் பிரதேசத்தை ஆட்சி செய்த போது சுயம்புலிங்கம் தோன்ற ஒரு சிறுகோயில மைத்திருந்தாள். பின்னர் ஒரு பெரிய கோயில் கட்டிச் சுயம்புலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தாள். மேற்படி உலகநாச்சி கொண்டுவந்த படிகலிங்கத்தைக் கோயில் குளம் என்னும் கிராமத்தில் பெரிய கற்கோயில் - கோபுரக்கோயில் கட்டிப் பிரதிஷ்டை செய்தாள். ஆரம் தொடுக்கும் குடிகள் கோயில் குளத்தில் அமைக்கப்பட்ட கோயிலிலும் கொக்கட்டிச்சோலை கோயிலுக்கும் நியமிக்கப்பட்டவாறு வடநாட்டுக் கொல்லடத்திலிருந்து வந்த மூன்று பட்டர்களையும் இரு கோயில்களிலும் பூசை செய்யவும் திட்டம் செய்தார்.

கோயில் குளத்தில் கற்கோயில் உலக நாச்சியால் அமைக்கப்பட்டது பற்றி இங்கு குறிப்பிடவேண்டும். கோயில் குளம் மண்முனை இராச்சியத்தின் ஒரு ஊர்! உலக நாச்சி இலங்கைக்கு வந்த காலம் இந்தியாவில்

**“உலகநாச்சி குடிவாழ்ந்து சிலகாலத்தின் பின் தன் தம்பி உலக நாதனைத் தம் தந்தையிடம் அனுப்பிக் குகக்குடும்பம் நூற்றி ஆறும் சிறைக்குடும்பம் முப்பதும் (பணியாளர்கள்) வரவழைத்துக் குகக் குடும்பங்களைத் தனக்கு அருகாமையில் அமர்த்தி அந்த இடத்தில் ஆலயமியற்றி சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து வணங்கி வந்தனர். இக்கோயில் கோயில்குளத்தில் கட்டப்பட்டது. இன்னும் ஒரிசா மாநிலத்திலிருந்து அநேக குடும்பங்களை அழைப்பித்துக் காப்புமுனைக் காட்டை அழித்து அப்பகுதியில் குடியிருத்தி அரசியாகி “மண்முனை இராச்சியம்” என நாமம் சூட்டினாள்.”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்கற்கோயில்கள் உருவான காலம்! எனவே உலகநாச்சி கற்கோயில் கட்டியது ஆச்சரியமில்லை.

இது மலைகளோ குன்றுகளோ இல்லாத பிரதேசம். எவ்வாறு கருங்கல் கோயில் அமைந்தது என்பது சிந்தனைக் குரியது. மாண்புறு மட்டக்களப்பின் மண்முனைப் பிரதேசம் அம்பிளாந்துறை, காப்புமுனை, முனைக்காடு, கொங்குகாசி, அம்பன்புட்டி முதலிய இடங்களை உள்ளடக்கியது. தாந்தாமலை, கொத்தனார் துறை முதலிய இடங்களையும் உள்ளடக்கியது. இவ்விடங்களில் கற்பாறை கள் மலைகள் அதிகமுண்டு. கோயிற்குளம் கோபுரக் கோயில் அமைப்பதற்குரிய கற்தூண்கள், பாறாங்கற்கள் இங்கிருந்து தான் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

தற்போது தாந்தாமலை என்னும் இடம் தாண்டவமலை எனவும் அங்கு தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் பொக்கிஷங்கள் மறைத்துவைக்கப்பட்டதால் பொக்கிஷமலை எனவும் அழைக்கப்பட்டது. இவ்விடங் களில் குறிப்பாக கொத்தனார் துறை என்னும் கொத்தியா புலையிலே கற்றூண்களைப் பொழியும் கொத்தனார் என்றும் 'கற்தச்சர்கள்', 'மேஸ்திரிகள்' இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்டவர்கள் இங்குதான் இருந்து கோயிற்குளம் கோயிலுக்கு கற்தூண்களைப் பொழிந்து கொடுத்தமைக்கு ஆதாரங்களுண்டு.

இவ்வாறு அமைக்கப்பட்ட காசிலிங்கக் கோயி லுக்குச் சமனான கோயில் அமைந்தமை மாண்புறு மண்முனை இராச்சியத்தின் மேன்மை எனலாம். கி.பி. 1505ல் போத்துக்கேயர் இலங்கைக்கு வந்து கரையோர மாகாணங்களைக் கைப்பற்றியதால், சைவக்கோயில்கள் அழிவுக்குள்ளாயின. 1626ல் போத்துக்கேயர் மட்டக் களப்பு புளியந்தீவில் கோட்டைகட்டியதால் 1627ல் போர்த்துக்கேயத் தளபதி அசவிடோ என்பவனால் சைவக்கோயில்கள் அழிக்கப்பட்டது போல கோயில் குளம் ஆலயமும் அழிக்கப்பட்டது. ஏனைய கோயில்கள் பின்பு புனருத்தாரணம் செய்யப்பட்ட போதும் கோயில் குளம் கோயில் புனருத்தாரணம் செய்யப்படாதிருப்பது துர்ப்பாக்கியமே! எனலாம்.

### மண்முனை இராச்சியமும் மண்முனை மேற்குப் பிரதேசமும்:-

தற்காலம் மண்முனை மேற்கு மண்முனை தென்மேற்கு என அழைக்கப்படும் பிரதேசங்களே! அக் காலத்தில் மட்டக்களப்பின் பூர்வீகபகுதிகளாக விருந்தன. 'மண்முனைப்பற்று' எனப்படும் பிரதேசம் பண்டைய மண்முனை இராச்சியமாகும். கலிங்க இளவரசி உலகநாச்சியின் அரண்மனை இடிபாடுகள் இங்கு காணப் படுகின்றன. கோயிற்குளம் கற்கோயில் முக்கியமாகும். தாழங்குடாவில் மாளிகையடி என்று ஒரு இடம் உண்டு. அதனால் இங்கு உலகநாச்சியின் அரண்மனை இருந்திருக் கலாம் என எண்ணலாம். படுவான்கரைப் பகுதியை உள்ளடக்கிய பிரதேசம் மண்முனை இராச்சியமாக இருந்தது.

அக்காலத்தில் போரதீவு, மண்டூர், பழுகாமம் என்னும் இடங்களும் மண்முனை இராச்சியத்துள் அடங்கியிருந்தன. அங்கு கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களும் நாணயங்களும் மட்டக்களப்பு மான்மியமும் சான்று கூறுகின்றன.

### மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தின் அமைப்பும், எல்லையும்:-

இன்றும் மட்டக்களப்பின் நிருவாகப் பிரிவுகள், உலகநாச்சியாலும், மாமன்னன் மாகோனாலும் வகுக்கப் பட்டவைகளாக இருப்பதை அறியமுடிகின்றது. இன்றைய மண்முனை மேற்குப் பிரதேசம் வடக்கே மட்டக்களப்பு வாவியையும், தெற்கே ஒதியங்குடா, அடைச்சகல்க்குளம் முதலிய இடங்களையும் கிழக்கே பன்சேனை முதலிய ஊர்களையும் மேற்கே கெழுத்திமடு, உன்னிச்சைக்குளம் முதலியவைகள் எல்லைகளாகவுள்ளது. இன்று மண்முனை மேற்குப் பிரதேசத்தில் காணப்படும் குடியிருப் புக்கள் தற்கால மனிதவாழ்க்கையை நினைவூட்டுவனவாக வுள்ளன. மேற்குப் பிரதேசத்தை உள்ளடக்கிய உன்னிச்சை, சிப்பிமடு, பழங்குடியிருப்புமடு முதலிய இடங்கள் பூர்வீக ஆதிக்குடிகள் வேடர்வாழும் இடங்களாகவுள்ளன.

தற்போது மண்முனை தென்மேற்கு, மண்முனை மேற்குப் பிரதேசம் நிருவாக வசதிக்காக மண்முனை மேற்கு, மண்முனை தென்மேற்கு எனப் பிரிக்கப் பட்டுள்ளன. மண்முனை தென்மேற்கு இன்றைய பட்டிப் பளைப் பிரதேசத்தைக் குறிக்கின்றது. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் அதைச் சூழ்ந்த ஊர்களும் இதில் அடங்கும். சில மைல் தொலைவிலுள்ள தாந்தாமலையும் அதற்கப்பாலுள்ள உழகல்மலை, வழகல்குளம், திவுலான, நாதன, புழுகுநாவி, முதலிய பிரதேசங்களும் பழமை வாய்ந்தன. நவகிரி, திக்கோடை வம்மியடி ஊற்று முதலியனவும் பழம்பெரும் கிராமங்களே! இவையும் மண்முனை மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த கிராமங்களேயாகும்!

### கிழக்கிலங்கையில் மாமன்னன் மாகோன்:-

கிழக்கிலங்கை என்பது வடக்கே இராஜரட்டையில் அடங்கும் திருகோணமலை தொடக்கம் தெற்கே உறுகுணையில் அடங்கும் திருகோணமலை வரை நீண்டு பரந்துள்ள கிழக்குக் கரையோரப்பகுதி எனலாம்!

திருகோணமலைப் பிரதேசத்தில் திருக் கோணேஸ்வர ஆலயப்பகுதி பிரபல்யம் பெற்றுத் திகழ்வது போலவே மட்டக்களப்புப் பிரதேசத்தில் தான்தோன்றீஸ் வரத்தைச் சேர்ந்த மண்முனை இராச்சியப் பகுதியும் முக்கியம் பெற்றது. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் திருகோணமலைக் கோணேஸ்வரம் ஆகிய இரு கோயில்களிலும் மாகோனின் திருப்பணிகள் இடம்பெற்றுள்ளன. வன்னிமைகளும் வகுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட பல்வேறு மக்கள் குடியமர்த்தப்பட்டனர். விவசாய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு வன்னியரும் ஐந்நூறு ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்விப்பவராக இருந்தனர். கோயில்களுக்கு மாகோன் நிவந்தகங்களை அளித்தான் இவ்வாறு கிழக்கிலங்கையில் தெற்கு எல்லையில் அமைந்த திருக்கோயில் ஆலயத்திலும் மாகோனின் திருப்பணிகள் நடைபெற்றன. எனவே மண்முனை இராச்சியமும், திருகோணமலையும், திருக்கோயிலும் மாகோனின் ஆட்சிக்காலத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களாகத் திகழ்ந்தன.

மண்முனை என்பது ஒரு பண்டைய இராசதானி! இதை உருவாக்கியவர் கலிங்க இளவரசி உலகநாச்சி என மட்டக்களப்பு மான்மியம் சான்று பகர்கின்றது. மட்டக்களப்புக்குத் தெற்கே எட்டுமைல் தொலைவில் வாவியின் மேற்கிலே வயல் வெளிகள் செறிந்த (களனிகள்) நிறைந்த ஒரு அழகிய கிராமம் மண்முனை நகரமாகத் திகழ்ந்தது. இம்மண்முனை இராச்சியத்தில், கி.பி. 1215 - 1255 மகாமன்னன் மாகோனால் அமைக்கப்பட்டு சுகதிரன் என்னும் கலிங்க மன்னனுக்குக் கொடுக்கப்பட்ட இராசதானியாகும். புலியமாறன் என்பவன் உப அரசனாக இருந்த புளியந்தீவுப் பிரதேசமே இன்றைய மட்டக்களப்பு. இது மட்டக்களப்பு மாகாண சபையின் நிருவாகக் கூறுகளுள் ஒன்றாகத் திகழும் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவாகவுள்ளது. இதை மட்டக்களப்பு மான்மியம் 54ம் பக்கத்தில் நாம் அறியலாம்.

மாகோன் திருக்கோணேஸ்வரம், மட்டக்களப்பு முதலிய இடங்கள் போல திருக்கோயில், மண்டூர் முருகன் ஆலயங்களிலும் திருப்பணி செய்தமை, வன்னிமை வகுத்தமை, மக்களைக் குடியமர்த்தியமை, நிவந்தகம் வழங்கியமையையும் நாம் காணலாம்.

மாகோன் அரனூழியம் வகுத்தமை பற்றிய குளிக்கல் வெட்டுப்பாடல்
(மட்டக்களப்பு மான்மியம் 70 ம் பக்கம்)

**கண்டனொடு சருகுபில்லி கட்டப்பந்தன்**
**கவுதரிய கவுத்தனு மத்தியாயன்**
**மண்டபத்தில் பொன்னாச்சி வயித்தியென்று**
**கோவசியர் மக்களிலே வருணமாக்கிப்**
**பண்டு முறை தவறாமல் ஏழுகுடியாய்ப்**
**அண்டர் தமைச் சாட்சியாய் வைத்துத் தத்தம் வாங்கி**
**அரகணத்து ஊழியராய் அமைத்துச் சொல்வார்.**

கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரத்திலும் மகோன் வகுத்த வன்னிமையே இன்றும் நிலைத்து நிலை பெற்றுள்ளதையும் நாம் குறிப்பிடலாம். இவ்வாலயத்தில் தொண்டு செய்வதற்காக காளிகட்டம், காரைக்கால், மருங்கூர் போன்ற இடங்களில் இருந்து வன்னியரைக் கொண்டுவந்து குடியமர்த்தியமையைப் பின்வரும் பாடல் குறிப்பிடுகின்றது.

**அரியகலமிடு முதலி மீகான்கோட்டை**
**அஹூாளை மேலைச்சேனை பள்ளச்சேனை**
**பெரிய கல்மடு முதலிமூவாங்கல்லு - பேர்கழேழே**
**புத்தூர் மருங்கூர் வீரச்சோலை புகழ்**
**காரைக்காட்டாரும் கொங்கைந்தும்**
**வித்தகமாய் மேழி தொழில் செய்யுமென்றார்.**

இங்கு காணப்படும் குடிகளாவன:-

உலகிப்போடிகுடி, படையாட்சிகுடி, பணிக்கனாகுடி, தனஞ்சனாகுடி, கச்சிலாகுடி, போன்ற குடிமுறைமைகளை கலிங்கமாகன் என்னும் தமிழ் மன்னன் வகுத்ததாகும்.

கலிங்கர் குடி கலிங்கர் ஆட்சியின் பயனாக ஏற்பட்டது. படையாட்சிகுடி படைப்பிரிவிலிருந்து தோன்றியது. முக்குலத்தார், முத்தரையர் போன்று வன்னியரும் ஒருவகுப்பினரே! இவர்கள் வீரம் மிக்கவர்கள்! தமிழ் நாட்டில் ஆறு மாவட்டங்களில் ஒரு கோடிக்கு மேற் பட்டவர்கள் படையாட்சி என அழைக்கப் பட்டவர்கள். இவர்கள் வீரம்மிக்கவர்கள்! மாகோன் காலத்திலேயே தமிழ்நாட்டின் தெற்கே பாண்டிய மண்டலம், கிழக்கே சோழமண்டலம், மேற்கே தொண்டை மண்டலம் ஆகிய இடங்களில் இவர்கள் இருந்தனர்.

மாகோன் காலத்தில் இவர்கள் ஈழத்தில் மட்டக்களப்பில் குடியேறினர். இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட மக்கள் எத்தகைய பணிகளில் இருந்தனர் என்றும் இதனால் சமூகக் கட்டமைப்பு எப்படி? இருந்தது என்றும் அறியமுடிகின்றது

கோயில் போரதீவு சித்திர வேலாயுத சுவாமி ஆலயமும், ஏனைய ஆலயங்களைப் போல மாகோனால் அல்லது அவனுடைய உபராசனான குளக்கோட்டனால் புனருத்தாரணம் செய்யப்பட்டிருக்க வேண்டும். போர்முனை நாடு எனச் சிறப்புப் பெற்ற போரதீவு சித்திரவேலாயுதசுவாமி கோயில் பாண்டியரின் கட்டிடக் கலையுடையது. அக்காலம் சோழரின் ஆட்சிமுடிவடைந்த காலம். மாகோனின் பின் அவனின் மகன் மாருதசேனன் ஆட்சி செய்தான். அவனின் பின் அவனின் மகன் எதிர்மன்னசிங்கன் தோப்பாவை என்னும் பொலநறுவை, மட்டக்களப்பு, உன்னரனகிரி, கோறளை, இவைகளை கலியுதித்து 4640ம் ஆண்டில் பட்டம் கட்டினான்


**"தென்னிந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட பல்வேறு மக்கள் குடியமர்த்தப்பட்டனர். விவசாய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு வன்னியரும் ஐந்நூறு ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்விப்பவராக இருந்தனர். கோயில்களுக்கு மாகோன் நிவந்தகங்களை அளித்தான் இவ்வாறு கிழக்கிலங்கையில் தெற்கு எல்லையில் அமைந்த திருக்கோயில் ஆலயத்திலும் மாகோனின் திருப்பணிகள் நடைபெற்றன"**




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

என்பதை மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது.

மட்டக்களப்பு மான்மியத்தில் இடம்பெறும் கல்வெட்டுப்பாடல்களில் மண்முனை இராச்சியத்தில் மண்முனைப்பற்று என வழங்கப்பட்டுள்ளது. கொக்கட்டிச்சோலைக்கு மிகவும் முதன்மை கொடுக்கப் பட்டுள்ளது! இதிலே பங்குகூறும் கல்வெட்டு, சாதிக்கல் வெட்டு, தாதன் கல்வெட்டு, போடிகல்வெட்டு, 'முக்குகர் வன்னிமை' என்பன கொக்கட்டிச்சோலையோடு தொடர்புறும் கல்வெட்டுகளாகும். இவற்றுள் 'பங்கு கூறும் கல்வெட்டு பங்கு தடுக்கும் கல்வெட்டு' மாகோன் வகுத்த விதிகளைக் கூறுகின்றன.

பங்கு கூறும் கல்வெட்டுப் பாடலில் சிலவரிகளைக் இங்கு குறிப்பிடலாம்.

**குருவளர் கலிங்கன் செகதலம் புகழ**
**மருமலர் தேவ தொண்டரைவகுத்து**
**ஆலயமியற்றி அணிமணியமைத்துச்**
**சீலமோடானுரு செய்தாங்கிருத்தி**
**மறையோன் றன்னை வாவெனவழைத்து**
**முறையாய்ப் பூசை மூன்று நேரம்**
**உறுமன் குலத்தாய் மேவி ஆலயத்தில்**
**அறு கொடுதருப்பை ஆவின் பால்கனி**
**நறுநெய் பொங்கல் நல்லிளநீரொடு**
**சிறு தேன் சருக்கரை தேங்காய் கரும்பு**
**மற்பாரு மாங்கனி வருக்கன் தேங்காய்**
**அற்புதமுடனே அநேகவர்க்கமும்**
**சேர்த்து நீ படைத்துச் சிவனார்க்கூட்டச்**
**சூத்திரர் சாதி தொழுது உன்ஊழியம் புரிய**
**வகுப் பொடுவகுப்பாய் வழமை களறிந்து**
**செகத்தோர் துதிக்கத் திருவேட்டை சென்று**
**ஆடிப்பாடி ஆறியங்கிருந்து**
**கூடிக்குரைத்து குசவர் கைக்குடுக்கையில்**
**அமுதுகள் படைத்து அந்தணர் அளிக்கத்**
**தமது பிற்சூத்திர சாதிகளெழுந்து**
**மன்னா! மகிபா! மானிலத்தரசே!**
**அன்னாளந்தணன் அறம் பறித்திடுவன்**

..........................................................

மேற்குறித்த கல்வெட்டுக்களில் கோயில் கடமைகள் குறிக்கப்பட்டுள்ளன. இக்கல் வெட்டின் பிற்பகுதியில் பங்கு கூறல் இடம்பெறுகின்றது. ஆலய விழாக்களின் போது வரிசை வாங்குவோர் யார் யார் என்பது முன்னுரிமை அடிப்படையில் கூறப்படும்.

**ஆரார்க்கு முன் பின் அளிப்பது என்ன**
**திறலோன் கலிங்கன் செப்பினன்**
**பெரிய திருப்பதி வாசல்**
**அறமுயர் வேதம் நம்பியரி திருப்பாட்டுச்**
**சரிகை சன்னாசம் தார்வளர்**
**தேசம், வன்னிமை, வரிசையா**
**யுலகுறு வருகுருநாதர்**
**பூபால கோத்திரம் பூவசியன்**
**பாவலர் புகழும் பகுதி புன்னாலை**
**மண்முனை மட்டவாழ் வறுகளப்பு**
**பெண்பெறு நாடு பேர் பெறு நகரம்**
**கண்டி, கதிரை, கந்தானை, மாவலி**
**பண்டு முன்னயோத்தி பங்குகள் முதலாய்க்**
**கூ றெனக் கொற்றவன் கூறிய உழவர்**
**ஆறிய பின்பு அரசனை வணங்கி**

..........................................................

இதன் விளக்கம் பின்வருமாறு மட்டக்களப்பு மான்மியத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

பெரிய திருவாசல் என்பது கைலயங்கிரி, வேதம் என்பது பிரமன்; நம்பி என்பது விஷ்ணு; திருப் பாட்டென்பது சிவன் சரிகை; சாசனம் என்பது படையாட்சி உலககுருநாதன் என்பது குரு. ஆதிபூபால கோத்திரம் என்பது கலிங்கவேளாளர்; பூவசியன் என்பது வணிகன், புன்னாலை என்பது பணிக்கன்; வன்னிச்சி மண்முனை என்பது உலகிப்போடிகுடிகுலம்; மட்டக்களப்பு என்பது தனஞ்செனான்; நாடு என்பது கிராம நாட்டு வேடன் நகரம் என்பது வன்னியர் வெள்ளாளர். கண்டி என்பது நிலமை (நிலாமை) கதிரை என்பது வேடப்பெண்; கந்தளை என்பது மலையாள முக்குவர்; மாவலி என்பது இடையர் அயோத்தி என்பது மறவர் இது தகுதியுடையவர்களே! வரிசைவாங்கும்படி எங்கள் முதன்மையாகிய மகாவம்சக் கலிங்கராசன் மாகோன் இட்டமுறையென்று வன்னிபங்கள் விமலதர்மனிடம் கூறி முகமனும் பெற்றனர். இது நிகழ்ந்தது கி.பி. 4738 (கி.பி 1638) மட்டக்களப்பு மான்மியத்தில் கூறப்பட்டுள்ளது. (114ம் பக்கம்)

## முக்குகர் வன்னிமை

இக்கல்வெட்டுப்பாடல்களில் கொக்கட்டிச் சோலைப் பகுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட சாதிமுறைமை விளக்கப்பட்டுள்ளது. முக்குகரின் ஏழு குடிகளும் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளன.

**சீர்தங்கு வில்லவரும் பணிக்கனாரும்**
**சிறந்த சட்டிலான் தனஞ்செயன்றான்**
**கார்தங்கு மாளவன் சங்குபயத்தன் கச்சிலாகுடி**
**முக்குகர் இனமேழேகாண்!**
**வார்தங்குகுகன் வாளரசகண்டன்**
**வளர்மாசுகரத்தவன் போர்வீரகண்டன்**
**பார்தங்கு தண்டவாண முண்டன் பழமைசெறி.**

எனவே முக்குகரின் ஏழுகுடிகளும் வில்லவன்குடி, பணிக்கன்குடி, சட்டிலான்குடி தனஞ்செயன்குடி, மாளவன்குடி, சங்குபயத்தான்குடி, கச்சிலாகுடி, என ஏழு சொல்லப்படுகின்றது.

இவை தவிர சாதி அடிப்டையில் சிலகுடிகள் ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு சாதிக்கும் ஏழு ஏழு குடிகள் வகுத்தமைக்கப்பட்டுள்ளன. அக்குடிகள் விபரம், மட்டக்களப்பு மான்மியத்திலும் சில ஏட்டுப்பிரதிகளிலும் உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### சிங்களக் குடி

அரிய கலமிடு முதலி மீகான் கோடை
அவுறாளை மேலைச் சேனை பள்ளச்சேனை
பெரிய கல்மடு முதலி மூவாங்கல்லு பேர்களேழே!
புத்தூர் மருங்கூரர் வீரச்சோலை புகழ்
காரைக்காட்டாரும் கொங்கைந்தும்
வித்தகமாய் மேழிதொழில் செய்யுமென்றார்!

### வெள்ளாளர்குடி

விறல் கலிங்கன் படையாட்சி
இருவருந்தான்
முத்தகல்விவிருத்தி வைத்து
மாகோன் தானும் முதன்மை தரும் படையாட்சி
வன்னியைச்சேர்ந்து பெறும்
தோப்பாவையைக் கைவசப்படுத்திப்
படையாட்சிகுலத்தார்க்குப்
பகிர்ந்து ஈந்தான்.

குறிப்பு:- ஏழுகுடிகள் விபரம் இப்பாட்டில் கொடுக்கப் படவில்லை.

### செட்டிகுடி

செட்டி, மங்குச் செட்டி மாணிக்கன்
சங்குச் செட்டி, சதாசிவன் - சிங்கச்செட்டி
சின்னவன் பங்குச்செட்டி, பகுத்ததேழே
கொச்சி வயிற்றார் முதலைக்குடா குறித்த
தாழங்குடா ஒழுங்கு உச்சக்கரையார் ஆறுடனே
பாவாடை உவந்த சலவை
ஆறுடனே அச்சமின்றி அவரவர் அறிந்து
பார் நடத்துவரே!

### நாவிதர்

சாரியுறு மண்முனையதில் அறவுதங்கும்
மகிழடித்தீவு, சவளக்கடை
ஏரியுறு பாலைமுனை வழலவாயிலங்கு
சம்மாந்துறை யென்று மேழாய்
வாரியுறு மானிழலிலரசு செய்யும் மாகோனும்
இவர்குடியை வகுத்துவைத்தான்
தரணியறிந்தவர்கள் நாவிதனைத் தக்கபடி
வைத்துமுறை சாரலாமே!

### கரையார்

கரையூரார் கம்பளியாராறு காட்டி
கருது முதலித்தேவன் வயித்திவேலன்
தறை செறி வங்காளம் வீரமாணிக்கன் தான்
கரையார்குடி ஏழாய்த் தரித்தான் பாரில்!

### சீர்பாதர்

துரைபோர் வீரகண்டன் சீர்பாதம் துடர்
சிந்தாத்திரன்
கால்தேவன் காங்கேயன்
நரையாகி வெள்ளாகி முடவனென்னும்
நாடதனில் பொட்டப் பழைச்சிகுடியேழே
வரையாக இவர்களையும் வகுத்து வைத்து
மானிலத்திலொற்றுமையாய் வாழுமென்று
திரையகல் சூழ்புவி யரசன் வகுத்து
வைத்துச் சீர்பாதம் செட்டியென்று செப்பினாரே!

### பண்டாரப்பிள்ளைகள்

பண்டாரப்பிள்ளை தேசத்து எச்சிக்கல்லகற்றி
பறைதூக்கி, கொடிகட்டி, குருத்துக்கட்டி
விண்டாரும் வீதி அதிகாரம் திருவட்டி....

குடிகாட்டப்படவில்லை தொழில் காட்டப்பட்டுள்ளது.

### தட்டார்

களுவத்தபணிக்கன் வேலன் கறுத்தக்கண்ணி பத்திச்சி
கொளுங்க குப்பட்டி குசவன் பாலன்குட்டி வகைகளதாக்கி!

### கம்மாளர்

சூரிய அடப்பன் சும்மாடு கட்டாடிப் பதஞ்சலியார்
வீரிய வேளானாருள மொத்திக் காலமுறு வேலன்
ஆரிய ஆட்டுவள்ளி யானந்தி யாசாமி யேழு குடிகளாக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறையர்

**வள்ளுவம் தொட்டி, தோட்டி, வாஞ்சொலி சக்கிலியன்**
**துள்ளும் வெட்டி யானந்தனேழாய் சுகித்திட வகுத்தவாறே**
**பள்ளுடன் கலந்தாலுங்கள் வரன் முறை குறையுமென்று**
**வள்ளலார் காலிங்க மாகோனும் வகுத்திட்டாரே!**

(இவை மட்டக்களப்பு மான்மியத்தில உள்ளவாறும்) (வன்னிமைகள் விபரம் ஏட்டுப்பிரதிகளில் இருந்தும் தமிழ் மன்னன் 'மாகோனின் மகத்தான வரலாறு' க. தங்கேஸ்வரி அவர்கள் நூலில் இருந்ததும்)

## முக்குக வன்னிமைகள்:-

- **வாளரசு கண்ட வன்னியன்**
- **போர்வீரவெண்ட வன்னியன்**
- **தண்டவால் முண்ட வன்னியன்**
- **முரண்ட வன்னியன்**
- **அரசியலைக்காத்த வன்னியன்**
- **முண்டவன்னியன்**
- **இறைகாத்த வன்னியன்**

## வேளாள வன்னிமைகள்:-

- **கொங்குவேளாளர்**
- **வடுகவேளாளர்**
- **மேழிவேளாளர்**
- **காரைக் காட்டுவேளாளர்**
- **மருங்கூர் வேளாளர்**
- **புத்தூர் வேளாளர்**
- **வீரச்சோலை வேளாளர்**

## மாகோன் வகுத்த இக்குடிமுறை நிருவாகம்

இவற்றை ஆராயும் போது பின்வரும் வரலாற்றுத் தகவல்களைப் பெறமுடிகின்றது.

» இக்குடி முறைமைகள் அக்காலத்தில் குழுக்கள் குழுக்களாக வாழ்ந்த மக்கள் தம் தலைவன் பெயரிலே அழைக்கப்பட்டனர். அவர்கள் மேற்கொண்ட தொழில் ரீதியாகவே அமைந்தன. ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு தலைவன் இருந்தான்.

» சகல குழுக்களும், பிரதிநிதிகளும் நிருவாகத்தில் பங்குகொள்ளும் வாய்ப்பை மாகோன் ஏற்படுத்திக் கொடுத்தான். கடவுளின் பெயரால் சமூகக் கட்டுக் கோப்பு அக்காலத்தில் இருந்துள்ளது.

» இக்குடிமுறைமைகள் இற்றைவரையும் தொடர்ந்து வருவதாலும் இவை மக்களால் விரும்பி எற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஊர்களிலும் கோயில் பூசை, திருவிழாக்காலங்களிலும் இதைக் காண முடிகின்றது.

» இக்குடிமுறைமைகள் அவரவர்கள் மீது திணிக்கப் படவில்லை விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டவை எனலாம்.

விமலதருமன் (கி.பி. 1594 - 1604) ஆட்சிக் காலத்தில் மாமன்னன் மாகோன் வகுத்த இவ்வழி முறைகளை மக்கள் விமலதருமனிடம் எடுத்துக் கூற அவ்வாறே நீங்கள் கடைபிடித் தொழுக வேண்டுமென விமலதருமன் பணித்தான்.

## வன்னிமை இருந்த ஊர்கள்

» கற்பகப் பண்டார வன்னிமை- கோரைக்களப்பு
» செல்லப் பண்டார வன்னிமை - சிங்காரத் தோப்பு
» அருணாசலப் பண்டார வன்னிமை - மலுக்கம்புட்டி
» ஆனந்தப் பண்டார வன்னிமை - சம்மாந்துறை
» அம்பக்கப் பண்டார வன்னிமை - நாதனை
» கனகரெத்தினப் பண்டார வன்னிமை - விளாவட்டவான்
» அழகரெத்தினப் பண்டார வன்னிமை - மண்டபத்தடி

## தற்போதைய நடைமுறை

இக்குடிமுறைமைகள் பற்றி இப்போது நோக்கும் போது அவை அவ்வளவு முக்கிய மற்றவை போலத் தோன்றினாலும் கிழக்கிலங்கையில் மண்முனை இராச்சியத்தில் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் பங்கு கூறுதல், பங்குதடுத்தல், பங்கு பெறுதலும் மக்களால் மிகவும் விருப்பத்துடன், ஆர்வமாகப் பின்பற்றப்படுவதை நோக்கற்பாலதேயாகும்.

இம்முறை மாகோன் மாண்புறு மண்முனை இராச்சியத்தில் வகுத்த வன்னிமையின் அடிப்படையிலே அமைந்ததாகும். மாகோனுடைய சட்டதிட்டங்கள் எழுத்து வடிவில் யாப்பாக இல்லாவிட்டாலும் மக்கள் மனத்தில் மிக ஆழமாகவே பரம்பரை பரம்பரையாக வேரூன்றி யுள்ளது என்பதை அவதானிக்க முடிகின்றது!

'மண்முனை இராச்சியம்' முக்குவச்சட்டத்தினால் பரிபாலிக்கப்பட்டதையும் அறியமுடிகிறது. உலக நாச்சியினால் மண்முனை இராச்சியம் அமைக்கப்பட்டு கோயில்கள் எடுக்கப்பட்டுச் சமய சம்பிரதாயங்கள் ஏற்படுத்தப்பட்டமையை நாம் காணமுடிகின்றது. மாகோன் வகுத்த வன்னிமைகளும், சாசனங்களாலும் என்றும் அழியாநிலை பெற்றுள்ளமையை நாம் என்றும் மறந்து விட முடியாததன்றோ!

**கலாபூசணம்**
**முருகேசு - தம்பிப்பிள்ளை**
குருமண்வெளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய பாரம்பரியக் கூத்தின்
# தனித்துவம்

கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழர் மத்தியில் பறைமேளக் கூத்து, மகுடிக் கூத்து, வசந்தன் கூத்து, தென்மோடிக்கூத்து, வடமோடிக் கூத்துக்கள் பாரம்பரிய நாடக வடிவங்களாகும். ஏனைய கூத்துக்களை விட தென்மோடி, வடமோடிக் கூத்துக்கள் மிகவும் வளர்ச்சி பெற்ற நாடக வடிவங்களாக மிளிர்கின்றன. இத்தகைய கூத்துக்கள் மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் ஆடப்பட்டாலும் ஆடலும், பாடலும், தனித்துவமான மேடையமைப்பும் தாளக்கட்டுகளும் கொண்ட முழுமையினை கிழக்கு மாகாணக் கூத்துக்களிலேயே காணமுடிகின்றது. ஏனெனில் பழைமை பெருவாரியாக அங்கு பேணப்படுகின்றது.

இத்தகைய கூத்துக்கள் 1950 களுக்குப் பின்னர் அறிஞர்களால் பிரபல்யப் படுத்தப்பட்டன. ஆய்வாளர்கள், அறிஞர்கள், அரசியல்வாதிகள் என பலதரப்பட்டோரின் பார்வை இவற்றின்மீது சென்றது. இதற்கு இவர்கள் சூட்டிய பெயர்தான் 'நாட்டுக்கூத்து'. இங்கு நாடு என்ற அடிச்சொல் 'கிராமம்' என்ற அர்த்தத்திலேயே உணரப்படுகின்றது. நாட்டுக்கூத்து என்ற பதப் பிரயோகம் 20ம் நூற்றாண்டுத் தமிழ் அறிஞர்கள் எமது மரபு வழி நாடகங்களுக்குச் சூட்டிய நவீன நாமமாகும். எமது முன்னோர்கள் இவற்றை கூத்துக்கள் என அழைத்தனர்.

16ம் நூற்றாண்டின் பின்னரே ஆசிய நாடுகளில் ஐரோப்பிய தாக்கம் ஏற்பட்டது. ஐரோப்பியர்களினால் ஆளப்பட்ட நாடுகளில் மாத்திரமன்றி அவர்களால் ஆளப்படாத ஜப்பான், சீனா போன்ற நாடுகளிலும் ஐரோப்பியச் செல்வாக்கு பதிந்தது. மேலைப்புலக் கலைகள் உயர் கலைகளின் மாதிரிகளாக அமைந்தமையினால் அவற்றைப் பார்த்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைப் போல கலைகள் செய்யும் வழக்கம் அடிமைப் பட்ட நாட்டு மக்களிடம் ஏற்பட்டது. இதனை முன்னின்று செய்தவர்கள் நமது பண்டைய அறிவாளிகளே. ஆசிய அறிஞர்களின் மேலைப்புலக் கலைகளைப் போல பாவனைக் கலைகளைச் செய்தனர்.

நமது நாவல், சிறுகதை, நவீன நாடகம் ஆகியன இவ்வழியில் வந்தவையாகும். நாடகவடிவம் பாமர மக்களிடம் சென்றதனால் நாட்டுக் கூத்துக்கள் கீழிறங்கியது என்பதற்கு கூத்து நூல்களிலேயே நிறைவான சான்றுகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவற்றில் நான்கு விடயங் களை நோக்கலாம்.

I. இக்கூத்து நூல்களான நாடக நூல்களை எழுதியோர் அனைவரும் படித்த புலவர்களேயாவார். இவை பாமர மக்களால் பாடப்பட்டவையுமன்று. வாய் மொழி இலக்கியமென்று தமக்கென ஏட்டுப்பிரதிகளை உடையவை. ஒரு நாடகம் ஏட்டு வடிவை பெற்ற அளவி லேயே அது செம்மையுடையது என்பது புலனாகின்றது.

II. இக்கூத்துக்களில் வரும் பாடல்களில் சிந்து கண்ணி, தெம்மாங்கு போன்ற நாட்டுப் பாடல் முறைகள் அதிகம் காணப்படாது செம்மொழி மரபிலமைந்த பாடலடிகளாகும்.

III. கூத்தில் ஆடப்படும் ஆடல் முறைகளை உன்னிப் பாக கவனிப்பின் அவை சாஸ்திர ரீதியானவை போன்ற நிலமை காணப்படுகின்றது. இந்த ஆடல் முறை மட்டக்களப்பிலேதான் காணப்படுகின்றன.

IV. கூத்தின் நாடக அமைப்பு பரத முனிவர் நாட்டிய சாஸ்திரத்தில் கூறிய உயர் நாடக அமைப்பை ஒத்திருப்பது நாட்டிய சாஸ்திரம் கி.பி. 2ம் நூற்றாண்டிற்குரியது.

இந்த அவைக் கூத்துக்கலைகளில் உயர்ந்த ஒரு கலைவடிவத்துக்குரிய அம்சங்கள் காணப் படுவதுண்டு. அதாவது உயர்கலை வடிவமான பரத நாட்டியத்திற்கு கற்பனைக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

1956ஆம் ஆண்டின் பின் பேராசிரியர் சரத் சந்திர சிங்கள மக்களின் கூத்துக்களைச் செம்மைப்படுத்தி அமைத்தபின்னர் பேராசிரியர் சு.வித்தியானந்தனும் ஈழத்தமிழர் கூத்துக்களை செம்மைப்படுத்தி வழங்கினார். கூத்தும் பரத நாட்டியமும் தமிழர்களிடையே பயில் நிலையிலுள்ள கலைகளாகும். கூத்து பரதநாட்டியம் போன்று செந்நெறிக்கலைகளாக மதிக்கப்படுவதில்லை. ஆனால் நடனமானது நடனம் என அழைக்கப்படும். பரதநாட்டியம் செந்நெறிக் கலைகளாகவும் நுணுக்கம் மிகுந்ததாகவும் பயில் திறனுடையோருக்குரியதாகவும் கருதப்படுகின்றது. இரண்டும் வெவ்வேறான காட்சி தருகின்றபோதிலும் இரண்டினிடையேயும் குறிப்பிடத்தக்க ஒற்றுமைகள் காணப்படுகின்றன. நடனத்தைப் பயின்றவர்களை 'கூத்தர்' என அழைக்கும் மரபு கி.பி. 250 - 450 வரையுள்ள காலப்பகுதியில் ஆரம்பமாகி பின்னர் அம்மரபு தொடர்ந்தும் பேணப்பட்டது. அதாவது மாதவி ஆடிய நடனம் கூத்தெனவே அழைக்கப்பட்டது. கி.பி 600 - 1300 வரை தமிழ் நாட்டில் பல்லவ சோழப் பேரரசுகளின் கீழ் வளர்ச்சி பெற்ற நடனம் கூத்தென அழைக்கப்பட்டது. இன்று சிவதாண்டவம் சிவநடனம் என நம்மவர்களால் பேசப்பட்டு வருகின்ற ஆட்டம் திருமூலரால் 'கூத்து' என குறிப்பிடப்படுகின்றது.

சிலப்பதிகாரத்தில் 13ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட அடியார்க்கு நல்லார் உரை மூலம் 'கூத்து' என்ற ஆடலுக்கான பொதுப்பெயராக வழங்கி வந்துள்ளமையை அறியமுடிகின்றது. அவர் கூத்தை சந்திக்கூத்து, வினோதக் கூத்து என பாகுபடுத்துகின்றார். ஒவ்வொரு பிரிவும் தனக்குள் மென்மேலும் பலவகைக் கூத்துக்களைக் கொண்ட பிரிவாக விரியும். இவரது வினோத வகைப் பாட்டில் சமூக உள்ளீடு தெரிவதைக் காணலாம் என கா.சிவத்தம்பி கூறுகின்றார்.

ஒரு கதையை ஒருவர் நடித்துக் காட்டியது நடனமாக அமைய ஒரு கதையை பலர் நடித்துக் காட்டியது நாடகமாக (கூத்தாக) அமைந்தது. கூத்தில் பல பாத்திரங்கள் வரும் பல பாத்திரங்களின் வருகையால் ஆடலில், உரையாடலில் மோதலில் கதை மேடையில் நிகழ்த்தப்படும்.

கூத்தை நடாத்தும் அண்ணாவியார் காப்பு விருத்தம் முடிந்ததும் பாத்திரங்களின் மேடைப் பிரவேசம் ஆரம்பமாகும். ஒருவராகவோ பலராகவோ வருகைதந்து தம்மை அறிமுகப்படுத்துகின்றனர். பலர் சேர்ந்து செய்கின்ற போது 'கொலு என அழைக்கப்படுகிறது.

கூத்தமைப்பின் ஒரு பாத்திரம் சொல்லும் முறையினை பின்வருமாறு குறிப்பிடலாம்.

- அண்ணாவியாரின் கூத்து விருத்தம்
- பாத்திரம் / பாத்திரங்களின் வரவு விருத்தம்
- பாத்திரம் / பாத்திரத்துக்குரிய தாளக்கட்டும் ஆட்டக் கோலமும்
- பாத்திரங்களின் வரவுதருவும் அதனிடையே இடம்பெறும் தாளக்கட்டுக்களும்
- தர்க்கத்தரு
- தனி மொழிகள்
- காலமேற்றுதல் - மேடையை விட்டுச் செல்லல்
- வழிபடுதல் - மேடையை தொட்டுக் கும்பிடுதல்

இன்றைய பரதத்தின் கச்சேரி அமைப்பு தொடர்ச்சியாக இருந்து வந்தது என்று கூறமுடியாது. சுமார் 150 வருடங்களுக்கு முன்னர் தஞ்சைப் பெருங்கோயில் நட்டுவர்களான சின்னையா, பொன்னையா வடிவேல் சகோதரர்களால் இது வடிவமைக் கப்பட்டது. என்று கூறப்படுகின்றது. இவற்றில் அலாரிப்பு முதல் சுலோசம் வரை எட்டு ஆடல் அம்சங்கள் குறிப்பிடப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலசரஸ்வதி ஆரம்ப அடவுகளை ஒன்பது பிரிவாக பிரித்து 'தெய்யா தெய்' தொடங்கி 'தா, தெய் தெய், தா' வரை செல்லும். இவை போன்றுதான் வடமோடி தென்மோடி தாளக்கட்டுக்கள் அமைகின்றன.

வடமோடி - தத்தித்தா - தித்திக்தெய் தா ததிந்தக வரை செல்லும்

தென்மோடி - ததிந்துனா தக ததிங்கிண திமிதக

சோழப் பெருமன்னர் காலத்தில் தமிழ்நாடகம் எவ்வாறு அமைந்திருந்தது என்பதை நோக்கும் போது கி.பி. 9ம் நூற்றாண்டு தொடக்கம் 13ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதி தமிழ்நாட்டு வரலாற்றில் மிக முக்கியமான காலப்பகுதியாகும். தஞ்சைப் பெருங்கோயில் எழுந்ததும் இக்காலப் பகுதியில் தான். பின்னால் வந்த மன்னர்கள் இவற்றை வளர்ப்பவராகவே காணப்பட்டனர். சோழர்காலத்தில் நடிக்கப்பட்ட நாடகம் பும்புலியூர் நாடகம் என்பன பாஸன் - பவபூதி, காளிதாசன் மரபில் வந்த வடமொழி நாடகச் சபையில் எழுதப்பட்டவையாக கொள்ளமுடியும்.

விலாசம் என்பது 19ம் நூற்றாண்டளவில் தமிழ் நாடக உலகில் வந்து புகுந்த ஒரு புதிய நாடக வடிவமாகும். 'விலாசம்' என்பது சமஸ்கிருத சொல்லாகும். வடமொழியில் அமைந்த சில இலக்கியங்கள் விலாசம் என்ற பெயர் பெற்றிருந்தன. கி.பி. 7ஆம் நூற்றாண்டில் மகேந்திர பல்லவன் வடமொழியில் இயற்றிய மத்த விலாசம், பிரகசனம் என்ற நாடகத்தில் விலாசம் என்ற பெயர் வந்துள்ளமையை அறியக் கிடைக்கின்றது. 16ஆம் 17ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் தோற்றிய குறவஞ்சி நாடகம் பாடல்கள் கர்நாடக இசைக்கு அமைய அமைக்கப்படுவதைக் காணலாம்.

கத்தோலிக்க மதத்தின் வருகை ஈழத்தமிழர் பண்பாட்டில் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. கத்தோலிக்க மரபின் அடியில் எழுந்த கட்டிடம் , சிற்பம், ஓவியம் போன்றவை ஏலவே ஈழத்து தமிழர் பண்பாட்டு மரபிற்குப் புதுமையானவை யாழ்ப்பாணத்தில் வழக்கில் இருந்த தென்மோடிக் கூத்தையே கத்தோலிக்கர் தமக்குரியவையாக ஆக்கினார்கள்.

சிங்கள தமிழ் பாரம்பரிய நாடகங்கள் பற்றி நோக்குகையில் இலங்கை வாழ் சிங்கள - தமிழ் மக்களிடையே பயிலப்படும் நாடக வகைகளை பாரம்பரிய நாடகங்கள், நவீன நாடகங்கள் என இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம். புரதான பொருளாதார சமூக அமைப்பு தொடர்ந்து நிலைபெறும் இடங்களில் பயிலப்படும் நாடகங்களே பாரம்பரிய நாடகங்களாகவும் ஆங்கிலேயரின் வருகையின் பின் எம் மத்தியில் புதிதாக உருவான வசனம் பேசி நடிக்கும் நாடகங்களே நவீன நாடகங்களாகும்.

சிங்கள மக்களிடையே காணப்படும் மகா பிரித் சடங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மகா பிரித் நடாத்தி ஏழாம் நாள் முடிய நடைபெறும் இச்சடங்கு தொரகத ஆசன என்றழைக்கப்படுகின்றது. இதில் அருகில் உள்ள தெய்வங்களை அங்கு பிரசன்னமாகுமாறு அங்கு அதனை நடாத்தும் பிக்கு வேண்டிக் கொள்வார். புலவகமதனவுடைய கதையும் நிகழ்த்திக் காட்டப்படும். 'அலவக்' பயங்கரமான ஒரு பேய். இப்பேய் புத்த மதத்திற்கு புத்தரால் மதமாற்றம் செய்யப்பட்டது. என்பது ஒரு மரபாகக் காணப்படுகின்றது. இவை நிகழ்த்திக் காட்டப்படுகின்றன. இதே போலவே நாகசேன என்ற புத்தபிக்கு மிலிந்த அரசனை மதம் மாற்றியதையும் நிகழ்த்திக் காட்டப்படுகின்றன. இச்சடங்குகளை ஒத்ததான சடங்குகள் கிழக்கு மாகாண தமிழ் மக்களின் சிறு கோயில்களில் நடைபெறுகின்றன. கோயில் என்பது ஒருவகையான நாடகத்தன்மை நிறைந்த அவைக்காற்று முறையாகும். கதுறு என அணியப்பட்டு இன்நடனம் ஆடப்படுகின்றது. இத்தகைய கோலம் தென்னிலங்கையில் வெலிகம, அம்பலாங்கொட, பெந்தர ஆகிய பகுதிகளில் வாழ் சிங்கள மக்கள் மத்தியில் வழக்கில் இருந்து வருகின்றன. கோலத்தைப் போலவே கூத்திற்குத் தனிக்கதையில்லை. ஆனால் அதேபோல எழுத்துப்பிரதி உண்டு. அரசன் வருவதற்கு மென்மையான ஆட்டமும் அனுமன் பாய்வதற்கு வேகமான ஆட்டமும் இடம்பெறும். ஜாதகக் கதைகள் கோலத்தில் இடம்பெறுவது போல வசந்தனில் கண்ணகிகதை, அனுமார்கதை, இந்திரஜித்தன் கதை ஆகியன இடம்பெறுகின்றன.

மகுடிக் கூத்தில் ஒண்டிப்புலி என்ற குறவன் தலைமகன் மலையாள தேசத்திலிருந்து கடல் கடந்து தன் மனைவி காமாட்சியுடனும் கூட்டத்தாருடனும் மட்டக்களப்பிற்கு வந்து அங்குள்ள மந்திரவாதிகளுடன் பந்தயமிட்டு பல அனுபவங்களைப் பெற்று இறுதியில் வெற்றியடைகின்றார்கள். இவ்வாறு சொக்காரிக்கும் மகுடிக்கும் ஒற்றுமை இருப்பதை நாம் காணலாம்.

கூத்தின் அழகியல் பற்றி நோக்கும் போது கூத்து அவைக்காற்றப்படும் முறையில் ஓர் அழகியல் உண்டு. அதனை நாம் அவைக்காற்று அழகியல் என அழைக்கின்றோம். கூத்து உருவாக்கும் முறையிலும் ஓர் அழகியல் உண்டு. அதனை கூத்துருவாக்கம் அழகியல் என அழைக்கின்றோம்.

- கூத்தின் அவைக்காற்று அழகியல்
- கூத்து உருவாக்க அழகியல்

மட்டக்களப்பில் தென் மோடி, வடமோடி கூத்துக்கள் சமூகத்தின் சகல பிரிவினராலும் ஆடப்பட்டு வருகின்றன. இவை மட்டக்களப்பின் தேசிய வடிவங்களாக மாறியதை நாம் காணலாம். இக் கூத்துக்களில் பின்வரும் சமூக மாற்றங்கள் ஏற்படுகின்றன.

- சமூக அமைப்பைப் பேணல்
- சமூக சாதி ஒருமைப்பாட்டினை பேணுதல்
- சமூக சமநிலை பேணப்படுதல்
- கல்வி பண்பாட்டு அம்சங்களை ஊக்கப்படுத்துதல்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- பொழுதுபோக்கு அம்சம்
- சமூக மாற்றமும் நாட்டுக் கூத்தும்

மேலும் கூத்தரங்கின் புத்தாக்கம் பற்றிய பேராசிரியர் சு. வித்தியானந்தனின் பங்கினை நோக்கும் போது இவர் கூத்துக்களை புத்துயிர் பெறுவதற்கு மூன்று வகையான பணிகளைச் செய்தார்.

- கூத்து நூலை புதுப்பித்தல். அது சம்பந்தமான ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியதுமான புலமை வாய்ந்த பணிகள்.
- கலைக் கழக தலைவராக இருந்து அண்ணாவிமார் மாநாடுகளையும் கூத்துப் போட்டிகளையும் மட்டக் களப்பு, மன்னார், வவுனியா போன்ற பகுதிகளில் நடாத்தி பிரதேச கூத்து வளர உதவினார்.
- பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு தானே கூத்துக்களை தயாரித்து அதனை இலங்கையின் பல பாகங்களுக்கும் அறிமுகம் செய்த கலைப் பணிகள்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் மக்கள் மத்தியிலே மருவிய கூத்தை மக்கள் விரும்பத் தக்கதாக நவீன வடிவம் கொடுத்து புத்துயிர் கொடுத் துள்ளார். அதாவது விடிய விடிய ஆடிய கூத்து தற்காலத்தில் தொலைக் காட்சியின் தாக்கத்தால் மக்களின் விருப்புக்கள் குறைந்து கொண்டே செல்கின்றன. அதற்காக மூன்று, இரண்டு, ஒன்று, அரை மணி அளவில் ஆடக் கூடிய பிரதியை சுருக்கி எடுத்துள்ளார். மற்றயவை வட்டக்களரியில் ஆடிய கூத்தை மூன்று பக்கங்களும் அடைக்கப்பட்டு ஒரு புறம் திறந்து அரங்கினை அறிமுகம் செய்தார். ஆடல் முறை உடைமுறைகளில் நவீனத்து வத்தைப் புகுத்தி மக்கள் விரும்பும் அளவிற்கு புத்துயிர் கொடுக்கின்றார். பல்கலைக்கழகத்திலும் பாடசாலை பாடவிதானத்திலும் நாடகமும் அரங்கியலும் பாடத்தினை அறிமுகப்படுத்தினார்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் 1960 களில் மட்டக்களப்பில் இத்தகைய கூத்துக்களை புதுப்பொலிவு பெறச் செய்தார். இத்தகைய முயற்சிகள் சிங்களக் கூத்துக்களை வளர்த்தெடுக்கும் முயற்சிகள் பேராசிரியர் சரத்சந்திராவினால் மேற்கொள்ளப்பட்டது. 1970களுக்குப் பின்னர் கூத்து வடிவங்களையும் இயற்பண்பு நாடக நெறியினையும் இணைந்து மோடியற்ற நாடகங்களை ஆக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கைத் தமிழர் மத்தியில் பயில் நிலையிலுள்ள பாரம்பரிய அரங்கு பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. நாடக அம்சங்கள் சமயச் சடங்குகளிலிருந்து தோற்றம் பெற்றதாக கருதப்படுகின்றது.

1940களின் பிற்பகுதியிலே இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்துறைத் தலைவராக இருந்த சுவாமி விபுலானந்தர் ஈடுபாடு கொண்டவராக திகழ்ந்தார். தனஞ்ஜயனாரின் தசரூபகத்தினையும், ஷேக்ஸ்பிரியரின் நாடகங்களையும் அறிமுகம் செய்தார். மற்றும் மதங்க சூளாமணி என்ற நாடக நூலை வெளியிட்டிருந்தார். 1950களில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராக இருந்த பிராஸ்சிஸ், கிங்ஸ் பெரி நாடகங்களை எழுதியுள்ளார். 1950 களின் பிற்பகுதியில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை தமிழிலே முதன் முதல் பேச்சு மொழியில் நாடகங்கள் எழுதினார். பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் இத்தகைய நாடகங்களை எழுதினார். அந்த நாடகங்களில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் க. கைலாசபதி ஆகியோர் பல்கலைக்கழக மாணவ பருவத்தில் நடித்திருந்தனர். 1970, 1980 களில் கூத்தாய்வு முயற்சிகளில் ஈடுபட்டிருந் தார்கள். சிறப்பு தமிழ் இறுதி வருட மாணவர்களையும் இத்துறையில் ஆய்வு செய்யத் தூண்டினார். 1990 களில் கூத்தில் நடித்த கலாநிதி சிவலிங்கராசா யாழ் பல்கலைக்கழக தலைவராக இருந்த போது இம் முயற்சி மேலும் தொடர்ந்தன. 1990 களின் நடுப்பகுதியில் இக்கட்டுரையின் ஆசிரியர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதியாகவும் நுண்கலைதுறைத் தலைவராகவும் கடமை புரிந்தார். 2004 இல் பால சுகுமார் கிழக்குப்பல்கலை கழக நுண்கலைத் துறைத் தலைவராக பொறுப்பேற்று நாடக முயற்சிகளை ஆராயத் தொடங்கினார். 1940களில் சுவாமி விபுலானந்தருடன் ஆரம்பித்த கூத்து ஆய்வுகள் 2002 இல் சிவம்பரநாதன் வரை தொடர்ந்தனர். ஈழத்து தமிழ்துறை நுண்கலைத்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் சி. மௌனகுரு, பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர். சிவத்தம்பி, பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் இ. பாலசுந்தரம், பேராசிரியர் தில்லைநாதன், கலாநிதி சிவலிங்கராசா, கலாநிதி சிதம்பரநாதன், பாலகுமார் என இக்கூத்து ஆய்வுப் பாரம்பரியம் பல்கலைக்கழகத்தில் ஆய்வறிவாளர் மத்தியில் தொடக்கினார்கள் இன்று முதுகலை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய ஆய்வில் திரு. ரவிச்சந்திரா ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளரும் மேற்கொள்ளப்பட்டுள் ளமையும் குறிப்பிடத்தக்கவை.

மேற்குறித்த கருத்துக்களை தொடர்ந்து நோக்குமிடத்து கூத்துக்கள் மருவிச் சென்றாலும் அதற்கு அறிஞர்கள், ஆய்வாளர்கள் ஊக்கம் கொடுத்து சமூகத்தில் ஒரு ஒன்றிணைக்கும் பாலமாக கூத்து இருந்து வந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

கலாநிதி தேசபத்து
**நாராயணபிள்ளை நாகேந்திரன்** (JP)
பிரதி அதிபர், களுவாஞ்சிகுடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் மி. அருள்மொழிராஜா

# வெற்றிலையும் களுதாவளையும்



வீசிடும் தென்றற் காற்றில்
வெற்றிலைக் கொடிகள் மெல்லப்
பேசிடும் அழகு காட்டிப்
பெருமிதம் தன்னைக் கூட்டி
ஊசிவால் கொண்டு கூராய்
ஒளிர்வது "அரசஞ் சாதி"
தேசுடன் "ஆலஞ்சாதி"
திகழ்ந்திடும் இரண்டு வர்க்கம்

வெற்றிலை என்றாலஃது
வெறுமிலை ஆகாதென்றும்
வெற்றிகள் களுதா வளைக்கு
விளைத்திடும் வெற்றி இலைதான்,
வெற்றிலை இன்றி எந்த
விழாவொடு சடங்கு ஆகும்?
அற்புதம் அதுதானெங்கும்
அரசியோடரச னாகும்...!


தாம்பூலம் தரிப்ப தெங்கள்
தமிழர் தம் மரபு ஆகும்
காம்பினைக் கிள்ளிச் சுண்ணக்
களியினைச் சிறிது பூசி
சோம்பலை விடுத்துப் பாக்கின்
தோலினை உரித்துச் சீவி
கராம்பொடு கறுவா ஏலம்
கலந்து வாய்க்கிட வாசந்தான்...!

கிளியிதழ் வண்ணங் காட்டிக்
கிறுகிறுப் பேற்று மென்பர்
உளமொத்த மணமக்கட்கும்
உண்டிட கொடுப்பர் முன்னோர்
களைப்பினை நீங்கிக் காதம்
கடுவழி நடப்ப தற்கும்
உழைப்பவர்க் குதவி யென்றும்
உரைத்திடல் உண்டு மூத்தோர்....

கிழக்கிலே களுதாவளையூர்
கீர்த்தி பெற்றிலங்க நன்கு
செழிக்கும் வெற்றிலையாம் தொன்மை
சேர் தொழில் தொடர்ச்சி இன்றும்
உழைப்பவர் முயற்சியாலே
ஒளிர்வதைக் காண்பீரிங்கே
வளம்பல திகழும் களுதா
வளையது காணும் மேன்மை!

## கிராமத்து புலவர்களின் வாய்மொழிநடை

# இலக்கியம்



இப்பரந்த உலகினடத் தோன்றிய மனிதன் தான் வாழும் சூழ்நிலைக் கேற்ப பல்வேறு மொழிகளைத் தோற்றுவித்தான். அவற்றுட் சில நன்கு வளர்சியடந்துள்ளன. அச்சிலவற்றினுள் உயர் தனிச் செம்மொழி என்று கூறத்தக்க வகையில் சிலவாய்மொழிகள் சிறப்படைந்துள்ளன. அவற்றுள் ஒன்று நம் தமிழ் மொழி. இம் மொழியில் பல இலக்கியங்கள் நிரம்ப உண்டு.

### தமிழினத்தின் தொன்மை:

தமிழ்மொழி தொன்மை மிகுந்தது போலவே இங்கு வழிவழியாக வாழ்ந்து வரும் தமிழினமும் தொன்மையும், சிறப்பும் கொண்டு துலங்குவதாகும்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே - வாளொடு
முன் தோன்றி மூத்தகுடி

என்று சேரா ஐயனாரிதனார் புறப் பொருள் வெண்பா மாலையில் தமிழினத்தின் பழமையினையும் வீர மேம்பாட்டினையும் விளக்கி கூறியுள்ளார்.

வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று

(திருக்குறள் 955)

### தமிழ் மொழியின் தொன்மை :

தமிழினம் போன்றே தமிழ்மொழியும் பழமை யானது என்பது சொல்லாமலே விளங்கும். தொல்காப்பியத்தில் பல விடயங்களில் தொல்காப்பியனார். 'என்மானர் புலவர்' எனக் குறிப்பிடுகின்றார். 'என்ப' எனக் குறிப்பிடுவதிலிருந்து தொல்காப்பியத்திற்கும் முற்பட்டே தமிழ்மொழியில் இலக்கண, இலக்கிய நூல்கள் இருந்தமை புலனாகும். மாக்ஸ் முல்லர் என்னும் மொழி நூலறிஞர் தமிழே மிகவும் பண்பட்ட மொழி என்றும் தனக்கே உரிய வளம் வாய்ந்த இலக்கிய செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழி என்றும் பாராட்டியுள்ளார்.

ஆற்றல்மிக்கதாகவும் சில சொற்களால் கருத்தை தெரிவிப்பதாகவும் விளங்குவதில் தமிழ் மொழியை எம்மொழியும் விஞ்சமுடியாதென்றும் உள்ளத்தின் வெற்றியை உள்ளவாறு எடுத்துக்காட்டுவதில் வேறு எம்மொழியும் இயைந்ததாக இல்லை என்றும் பெர்சிவல் என்னும் அறிஞர் சிறப்பாக குறிப்பிட்டுள்ளார். தமிழ் மொழி கிராமத்து புலவர்களின் மொழி நடையிலும் தொன்மையுடைதாக விளங்குவதோடு சிறப்பும் உடையதாகப் பல ஆற்றலாலும் நனி சிறந்து துலங்குகிறது என்பது வெள்ளிடை மலை.

### ஊர்:

மக்கள் சேர்ந்து வாழ்ந்த இடம் சேரி என வழங்கப்பட்டது. சிலம்பில் புறஞ்சேரி குறிப்பிடப் படுகின்றது. சிற்றூர், பேரூர், மூதூர் என அளவும் பழமையும் கருதி ஊர்கள் அழைக்கப்பட்டன. இவைகளை கிராமம் என்பர். கிராமங்களின் சிறப்புக்கும் கீர்த்திக்கும் பாடலில் புகழ்சேர்ப்போர் புலவர்கள். இப்புலவர்கள் புலமையில் சிறப்பதற்கு வாய்மொழி இலக்கணமே வழி செய்தது.

### வாய்மொழி இலக்கணம் :

மொழி நடை இலக்கணச் சூத்திரங்கள் அல்லாது வாய்மொழி இசை வடிவங்களை வகைப்படுத்தி கையாள்வது. குறிப்பாக கல்வியறிவில்லாத புலவர்களுக்கு வாய்மொழி மூலமான ஆற்றலை வழங்கும் வாய்மொழி இலக்கணம் எனக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. இசை எழுத்துக்களை அறிதல்
ஆ. இசைச் சொற்களை இனம் காணுதல்
இ. சொல்லும் பொருளுக்கு ஏற்ப இசைச் சொற்களைத் தேடல்
ஈ. மோனை, எதுகை சீர் வகைகளை பிறர்பாட உணர்ந்தறிதல்.

கூத்துக் கொப்பிகள், ஏட்டுப்பிரதிகள் என்பனவே மூலாதாரங்கள். வாய்மொழிப் பாடல்களும் இதனுள் அடங்கும். இதனை கிராமத்து புலவர்களின் மொழிநடை இலக்கியம் எனலாம். வாய்மொழி இலக்கியமாகவும் கொள்ளலாம்.

## இலக்கண இலக்கியம் :

இலக்கியங்கள் இலக்கணத்துக்கு உட்பட்டவையா அல்லது அப்பாற்பட்டவையா? என்பதை இதுவரை முடிவு செய்ய முடியாமல் பேரறிஞர்கள் திண்டாடு கின்றனர். ஆனால் ஒன்றுமட்டும் உறுதியாக சொல்லலாம். முதலில் பல இலக்கியங்கள் தோன்றிய பிறகுதான் இலக்கணம் வகுக்கப்பட்டிருக்க வேண்டும். தொடர்ந்து அந்த இலக்கண வரண்முறைக்கு உட்பட்ட இலக்கியங் களை உருவாக்க இலக்கிய கர்த்தாக்கள் முனைந்திருக்க வேண்டும். அப்படிப்பார்ப்போமாயின் கிராமத்து புலவர்களின் வாய்மொழி நடை இலக்கியமும் காலத்தால் முந்தியது என உறுதிப்படக் கூறலாம்.


எனவே தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுக்கும் போது அதை மிகச் சிறப்பானதாக எடுத்துக்காட்டியிருக்கும் கிராமத்துப் புலவர்களின் வாய்மொழி படைப்புக்களை முதல் இலக்கியங்களாக ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் தமிழுக்கு இலக்கணம் வகுப்பதுதான் சாலச் சிறந்ததாகும்.

## வலிமை:

கேட்பவர்களை இழுத்து நிறுத்துவதும் பிறகு நிறுத்தி இழுப்பதுமாகத் தொடர்ந்து இயங்கச் செய்வதுவே கிராமத்துப் புலவர்களின் வாய்மொழி இலக்கிய படைப்புக்களாகும். ஒவ்வொரு சொல்லுக்கும் தேவையான வேகமும், விறுவிறுப்பும், கருத்துக்கு பொருத்தமான சொற்களை எளிதாக பயன்படுத்தும் முறையும், மொழியோடு ஒலியையும் ஒலியோடு உள்ளத்துக்கு அறிவுக்கும் உணர்வேற்படுத்தும் நிலையையும் ஒரு சேர உண்டாகின்ற ஒப்பற்ற இலக்கியம் கிராமத்து புலவர்களின் வாய்மூலம் பாடல்கள் அடங்கிய கூத்து ஏட்டுப் பிரதிகளாகும்.

அ. வடமோடி தென்மோடிக் கூத்துக்கள்
ஆ. வசந்தன் கூத்து
இ. பறைமேளம் - மகிடிக் கூத்துக்கள்
ஈ. கரகம், கும்மி, கோலாட்டம்
உ. காவியம், காவடி சிந்துகள்
ஊ. நாட்டாரியல் பாடல்கள்

" கேட்பவர்களை இழுத்து நிறுத்துவதும் பிறகு நிறுத்தி இழுப்பதுமாகத் தொடர்ந்து இயங்கச் செய்வதுவே கிராமத்துப் புலவர்களின் விறுவிறுப்பும், கருத்துக்கு பொருத்தமான சொற்களை எளிதாக பயன்படுத்தும் முறையும் மொழியோடு ஒலியையும் ஒலியோடு உள்ளத்துக்கு அறிவுக்கும் உணர்வேற்படுத்தும் நிலையையும் ஒரு சேர உண்டாகின்ற ஒப்பற்ற இலக்கியம் கிராமத்து புலவர்களின் வாய்மூலம் பாடல்கள் அடங்கிய கூத்து ஏட்டுப் பிரதிகளாகும். "



அண்மைக்காலத்தில் இலங்கைத் திருநாட்டில் இவ்வாய் மொழி இலக்கியத்திற்கு (தமிழ்மொழிதினம்) ஒரு தனிப்பட்ட செல்வாக்கும் மதிப்பும் வளர்ந்து வருகின்றன. இதற்கு காரணம் அந்தத் துறையிலே ஈடுபட்டோரின் எண்ணிக்கை கூடுதலாகிக் கொண்டே வருவது மட்டுமன்று; நாட்டில் படித்துத் தெரிந்து கொள்பவர்களை விடக் கேட்டுத் தெரிந்து கொள்பவர்கள் தான் ஏராளமானவர்கள் என்பதுந்தான் அப்படிப்பட்ட வர்களுக்கு எதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் அளவுக்கு மீறிப் பெருகிவருகின்றது.

வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தேவையான வற்றாத ஊற்றாக இவ் வாய்மொழி இலக்கியத்தை மக்களும் அரசும் மதிக்கத் தொடங்கியிருக்கின்றனர். யாரோசிலர் எப்போதோ சில நேரங்களில் என்றிருந்த இலக்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபாடும் தேடல் வேட்கையும் இருக்கின்ற மனிதர்கள் எல்லோரிடத்திலும் கிடைக்கின்ற நேரம் முழுதிலும் தம்மைப் படியவும், பதியவும் வைத்துக் கொள்கின்றன. 'தமிழில் என்ன இருக்கிறது' என்ற அலுத்துக் கொண்ட நிலை தமிழரை விட்டு அற்று போய் இப்போது 'ஏன் தமிழில் அவை எல்லாம் இல்லை' என்ற ஏக்கமும் அந்த ஏக்கத்தின் விளைவாக முயற்சியும் பெருகி வருகின்றன. தற்போதைய தமிழ் வளர்ச்சியில் சிறப்பான இடம் பெற்றிருப்பவை.

1. ஏட்டு இலக்கியம்
2. வாய்மொழி இலக்கியம்

என்பவையாம். இவ்விரண்டிற்கும் உள்ள சொல் கட்டமைப்புகள் (இலக்கணம்) ஓரளவு ஒத்திருந்தாலும் பெரும்பாலும் மாறுபட்டவை. ஏட்டு இலக்கியம் நிலைத்து நிற்க கூடியது. வாய்மொழித் தமிழ் ஒலிப்பதிவு செய்து வைத்திருந்தால் தவிர அந்த இடத்தோடு முடிவது. ஏட்டுத் தமிழில் படிப்பவர் மனதில் பதிய வைக்க அந்தக் குறிப்பிட்ட நூலின் இறுதிவரை வாய்ப்பிருக்கிறது. வாய்மொழி இலக்கியத்தைத் தமிழில் பாடும் போதே பதிய வைத்துக் கொண்டு வரவேண்டும்.பொதுவாக அறிவை வளர்க்கும் பொருள்களைப் பொறுத்தவரை இந்த இரண்டு தமிழ் இலக்கிய முறைகளுக்கும் மாறுபாடு எதுவும் இல்லை. செவிக்கும் மனதிற்கும் இன்பம் பயப்பவை. அன்று வாய் மூலமாகப் பெறப்பட்டவையாவும் இன்று ஏடுகளாக்கப்பட்டுள்ளது.

வாய்மொழி இலக்கியத் தமிழில் தேன் சுவையானது வசந்தன் கூத்து.

> என்றும் இளமை இனிமை இயைந்த தமிழ்
> நன்று மொழியும் நயமுடையோன் - துன்றுவளம்
> காட்டுசீர் மட்டக் களப்பு வசந்தனெனும்
> நாட்டுக் கவித்திரட்டை நாம்
>
> (தி. சதாசிவஐயர்)

1940ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ந் திகதி மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைப் பரிசோதகராக கடமையாற்றிய யாழ்ப்பாணத்தை சேர்ந்த தி.சதாசிவ ஐயர் அவர்களினால் மட்டக்களப்பு தெற்குத் தமிழாசிரியர் சங்கத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட அச்சு வாகன ஏடே 'மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு' என்னும் நூலாகும். இந்நூலில் மொத்தம் 63 வகையான வசந்தன் பாடல் ஆடல் வடிவங்கள் இடம்பெறுகின்றன. இவை யாவும் வாய்மூல இலக்கிய வடிவங்களே எனின் மிகையாகாது... இவை காலத்துக்குக் காலம் வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்டிருக்க வேண்டும் என்பது நூலாசிரியர் கருத்து. எப்போது யாரால் எழுதப்பட்டதென்பதும் அறியப் படவில்லை. அப்படியாயின் இவ் வாய்மொழி இலக்கியம் மிகத் தொன்மை வாய்ந்த காலத்திற்குரியவை என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அன்றி ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.

'உலகுக்கு உறுதி பயக்கும் விழுமிய பொருளை இனிய சொற்களால் ஓசை பொருந்த அமைத்துத் தருபவனே கவி என்ப. இந் நல்லிசை புலவரது கவித்துவம் வாய்ந்த செய்யுட்கள் தமிழ் நாட்டின் பண்டு தொட்டு நின்று நிலவிக் கற்றுவல்ல பெரியோரால் போற்றிக் கொண்டாடப்பட்டு வருவதைக் காண்கின்றோம்.' என நூலின் முகவுரையில் அழகுபடக் கூறுகிறார் சதாசிவஐயர்.

## இசை எழுத்துக்களை அறிதல்

அ. ஆ.இ.ஏ.உ

என்பனவே கூட்டெழுத்துக்களாக ஒன்று சேர்ந்து ஓசை பயப்பனவாயின்

உ+ம் : பிள்ளையார் வசந்தனில் - அ

தரு: தெந்தின தினனாத் - தினதின தினனா
தின தின தின னாந் - தினனானா

பாடல்: சிந்துரமுகனென வந்தாய் சரணம்
சீரிய ஒற்றை மருப்பாய் சரணம்
திக்கிட தருகிட கணபதி சரணம்
மைக்கரு மேனியன் மருகா சரணம்

கூவா குயில் வசந்தன் - ஆ

தரு : தெந்தென்னா தென்னாதினனா தெந்தென்
தென்னா தெய்தெய்
தென்னானா தென்னாதினனா
தெந்தென்னா தினனா

பாடல் : திங்களொடு சங்கரவு கங்கைசடை மதுலவு
தேவாதி தேவரென்று கூவாய் குயிலே
துங்கமுறு கொன்றையுட னங்கைமழு மானேந்தும்
தூயசிவ சோதியென்று கூவாய் குயிலே

பாங்கி வசந்தன் - ஏ

தரு : தாந்தி மித்திமி தத்திமி தத்திமி
தத்திமி தொங்கத் தாவன்னா

பாடல்: ஆனைமுகனே யரனே பரனே
ஐந்து கரத்து கணபதியே
பானை போல பெருத்த வயிற்றோனே
பாங்கி வசந்தனைப்பாடுதற்கு

முயிற்று வசந்தன் - ஏ

தரு : தனம் தனம் தன தனா - தன
தான தனாதன தானின தானா

பாடல்: கனந்தருங் குழலாரே - எங்கள்
காரிகையே யொரு கதை சொல்லக் கேளும்
தனந்தனாதன வெனவே - எங்கள்
தந்திமுகன்றனை வந்தனை செய்வோம்.
வேளாண்மை வசந்தன் - உ

தரு: தெந்தென்னா தென்னா தினனா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெந்தென்னா தென்னா தெய்தெய்
தெந்தென்னா தென்னா தினனா
தெந்தென்னா தென்னா தெய்தெய்

பாடல் : சீருலவு மத்தகய மாமுகனை நாமகளைச்
சிந்தை செய்து செந்நெல் வசந்தன் இசைபாட
ஏருலவு முசனோ டிமயவரை மங்கையுடன்
எங்குமுள்ள தேவர்பதம் என்று மறவேன்

இப்படி ஏராளமான வசந்தன்கள் உள. அவையாவும் இசைநயம் பொருந்திய இலக்கிய சுவை நிரம்பியதாகும்.

### இசைச் சொற்களை இனங்காணுதல்

சீர், கார், தார், பார், ஏர், அரு, பொரு, இரு, பாடு, கூடு சிந், கொந், ஆறு, நீறு, பாத, தோத, தந், பந், அம், உம் ஆன், பான், கான், வான், செங், பொங், பூங், தாங் இவ்வாறு 208 சொற்கள் இனங்காணப்பட்டுள்ளது.

### சொல்லும் பொருளுக்கு ஏற்ப இசைச் சொற்களைத் தேடல்

உ+ம் சீரிலங்கிய, காரிலங்கிய, தாரிலங்கிய, பாரிலங்கிய, ஏரிலங்கிய...

செங்கை, பொங்கை, எனப் பலவாம். மோனை, எதுகை சீர் வகைகளை பிறர்பாட

### உணர்ந்தறிதல் :

செவ்வாய் பள்ளு வசந்தன்

தரு: தினனானா தென்னானா தென்னா
தெந்தின தென்னானா
தினனாதென் னாதின தெந்தின தென்னா
தெந்தின தென்னானா

பாடல்: சீர்பொ ருந்துஞ் சிறிமுகனைத்
தெண்டனிட்டே யொரு சிந்திசைக்க
கார் பொருந்துங் கரிமுகனான
கணபதி பாதம் மறவேனே

இவ்வாறு இசையோடு கூடிய சீர்தளை இசைக் சொற்களையே பெரும்பாலான வசந்தன் பாடல்கள் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கள்ளியங் கூத்து வசந்தன் :

தரு : தந்தானின தான தானின, தானதானின தானினா

பாடல் :

இந்த நிழல் மரம் நல்லதடா தம்பி
எங்கு மிது போல கண்டதில்லை
சந்தங் கமழுமர மிது தன்னனத்
தறிப்ப தழகல்லத் தம்பியரே

(மரங்களைத் தறித்தல் சூழலுக்கு ஆபத்தானது என்பதை உணர்த்தும் பொது வசந்தன் பாடல்களும் உள.)

இப்பாடல்கள் தாளம், ஓசைநயம், மோனை, எதுகைத் தொடை நயம் உடையனவாய் பக்தி, உவகை, நகை, அறிவு, வீரம் ஆகிய சுவை பொருந்தியிருந்தமை அவற்றைப் படித்து அறியலாம். கல்வியறிவு படைத்த சிலருடைய பாடல்களும் இவ் வசந்தன் பாடல்களில் சொருகிக் கொண்டன எனத் துணிதல் மிகையாகாது இப் பாட்டுக்களை பாடியும் ஆடியும் கேட்டுமே கூத்து வளரச் செய்தனர் கிராமத்து மக்கள். எனவே தமிழ் மொழி செம்மொழியாவதற்கு நாட்டுப் புலவர்களின் வாய்மொழி இலக்கியமும் பெரும்பாகம் வகிப்பது நோக்கத்தக்கது.

**- கலாபூஷணம் தேனூரான்**
மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பரதயோக முத்திரைகள் மூலம் ஆரோக்கியம் பெறலாம்



தெய்வீகக் கலையான பரதக்கலை எமக்கு மிகவும் சிறப்பான செயற்பாடுகளைத் தந்துள்ளது. அந்த வகையில் உடல், உள ஆரோக்கியங்களையும் வாழ்க்கையில் மகிழ்ச்சியாகவும், சுறுசுறுப்பாகவும் இயங்குவதற்கு பரத யோக முத்திரைகள் பயன் பெறுகின்றன. இந்த வகையில் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' எனும் பழமொழிக் கமைவாக பரதயோக முத்திரைகள் மூலம் நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய நவீன காலத்தில் உடல், உள ஆரோக்கியம் பேணுவதில் பல முறைகளிருந்தாலும் பக்க விளைவற்றதுமான முறையினைத் தேர்ந்தெடுப்பது அவசியமானது. இதில் பரத யோக முத்திரைகள் ஊடாக உடல் உள ஆரோக்கியத்தைச் சிறந்த முறையில் பேணிக்கொள்ளவும் இதனைப் பின்பற்றிக் கொள்ளவும் முடியும். உடல் ஆரோக்கியத்தை எடுத்துக்கொண்டால் நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ளல் அவசியமானதாகும். மனிதர்கள் தமது உடல் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ளாமல் இருக்கின்றனர் இதனால், இன்றைய காலகட்டத்தில் தமது இளமைப் பருவத்திலேயே தொற்றா நோய்களான இதயநோய்கள், நீரழிவு, சிறுநீரக நோய்கள், புற்றுநோய்கள், ஆஸ்துமா மற்றும் உடற் பருமன் அதிகரிப்பு போன்றவற்றால் வீட்டுக்கு ஒருவர் எனும் வீதத்தில் எமது பிரதேசத்தில் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றனது.

இதற்கான காரணம் வேலைப்பழு, நேரமின்மை, திட்டமிடப்படாத உணவுப்பழக்க வழக்கம், சுத்தம் பேணாமை, மற்றும் தூக்கமின்மை என்பனவாகும். எனவே இவற்றிலிருந்து விடுபடுவதற்கு இன்றைய காலகட்டத்தில் யோகா முத்திரைகளைப் பயன்படுத்தி சில பயிற்சிகளைச் செய்தல் யோகநிலைப்பயிற்சி, தேக அப்பியாசப்பயிற்சி என்பனவற்றைக் கடைப்பிடித்துவந்தால் பாரிய நோய்களிலிருந்து விடுபட முடியும். இந்த வகையில் உடல், உள வளர்ச்சியில் உடற்பயிற்சிச் செயற்பாடுகள் யோகக்கலை, நடனக்கலை போன்றவற்றைப் பொருத்தமான வேளைகளில் பயன்படுத்த முடியும். இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நாம் காலை வேளையிலோ, மாலை வேளையிலோ நேரத்தினை ஒதுக்கிக்கொள்ள வேண்டும். இதனைத் தொடர்ந்து பின்பற்றினால் வாழ்க்கையில் ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ முடியும். இதனை தவிர்க்குமிடத்து மேற்காட்டப்பட்ட தொற்றா நோய்களினால் பீடிக்கப்பட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைக் குணப்படுத்துவதற்கு அதிகளவு பணத்தினையும் செலவு செய்வதுடன் சில சந்தர்ப்பங்களில் சிகிச்சை பலனின்றி மரணங்களையும் எதிர்நோக்க வேண்டி ஏற்படுவதனையும் நாம் வெகுஜன ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. எனவே இவ்வாறான மரணங்களையும் பணவிரயங்களையும் தவிர்ப்பதற்கு இலகுவழியாக அமைவது பரத யோக முத்திரைகளே! இலகுவகை முத்திரைகளைப் பயன்படுத்தி விரல்களின் அசைவுகள் மூலம் வெளிப்படுத்தி உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தக் கூடிய விஞ்ஞான முறையே முத்திரைச் சிகிச்சை ஆகும்.

| தொ. இல. | பரதநாட்டிய முத்திரைகளின் பெயர்கள் | யோக முத்திரைகளின் பெயர்கள் | கிடைக்கும் ஆரோக்கிய பலன்கள் |
|---|---|---|---|
| 01. | ஹம்ஸாஸ்யம் | சின்னமுத்திரை | மூளையின் செயற்பாட்டை அதிகரிக்கும் |
| 02. | மயூரம் | ப்ருத்விவர்க்கம் | உடல் எடையை அதிகரிக்கும்<br>உடல் அழகைக் கூட்டும்<br>உடல் பலவீனத்தைக் குறைக்கும் |
| 03 | சிகரம் | அக்கினி வர்த்தக்<br>அல்லது மேரு முத்திரை | உடல் உஸ்ணத்தைக் குறைக்கும்<br>காய்ச்சல் நிவாரணியாக அமையும் |
| 04 | முஸ்டி | ஆக்கின ஷாமக் அல்<br>சக்தி முத்திரை<br>அல் ஆதி முத்திரை | உடல் உஸ்ணத்தைக் குறைக்கும் |
| 05 | சூஸி | சுஸி | மலச்சிக்கலைக் கட்டுப்படுத்தும்<br>வயிற்றுக் கோளாறுகளைத் தீர்க்கும். |
| 06 | சிம்ஹ முகம் | அபான முத்திரை | நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் |
| 07 | பிரமரி | பிரமரி | ஒவ்வாமையினைக் கட்டுப்படுத்தும்<br>தடிமல், மூக்கு நீர் சிந்துதலைக் கட்டுப்படுத்தும். |
| 08 | முகுலம் | சமான முத்திரை | உடல் சமநிலையினை பேணல் |
| 09 | திரிசூலம் | ஜலேந்திர க்ஷாமக் | உடலின் நீர் சக்தியைப்பேணல் |
| 10 | கருடன் | கருட முத்திரை | கண்பார்வையினை கூட்டும்<br>கண் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும். |
| 11 | லிங்கம் | லிங்க முத்திரை | சுவாசப் பயிற்சிக்கு சக்தியைக் கொடுக்கும்<br>சுவாச நோய்களைக் கட்டுப்படுத்தும். |



எனவே பரத யோக முத்திரைகளை முறையாகப் பயிற்சி செய்வதன் மூலம் பக்க விளைவுகளின்றிச் சிறந்த பலனை அடைய முடியும். இதனால் உடல், உள ஆரோக்கியங்களைப் பெற்று வாழ்க்கையில் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் சிறந்த பண்புகளுடனும் வாழ முடியும். தற்காலத்தில் மாணவர்கள் அரச உத்தியோகத்தர்கள் விவசாயிகள், தனிமையில், வாழ்பவர்கள் மற்றும் மன உழச்சலுக்கு உட்பட்டோரும் இப்பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழமுடியும் என்பதே இதன் குறிக்கோளாகும்.

**திருமதி. வனிதா தனசேகரன்**
ஆசிரிய ஆலோசகர் (நடனம்)
தலைவர் நிருத்திய கலா மன்றம் - களுவாஞ்சிகுடி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சிநேகிதனே சமூகசிற்பியாக சிந்தி...

சினேகிதனே அன்பு சினேகிதனே!
சிக்கலான இந்த வேளையில்
சிலந்தி வலைகள் உனைச் சூழ்ந்து,
சிறைப்பிடித்திட முனைகையில்,
சிந்தனை குதிரையை முடக்கி விட்டு
சிறப்பான முடிவுகளெடுத்து - சமூக
சிற்பியாக நீ மாற வேண்டாமா?

சிதறிப்போன உன் நேர் சிந்தனைகள்
சிலுவையில் அறையப்பட்டு விட்டனவா?
சித்திரவதைப்பட்டு மரித்த யேசு பிரானே
சில நாட்களில் உயிர்த்தெழுந்தது தெரியாதா?
சிறந்த சிந்தனைகளுடன் நீயும் மீண்டெழு!

சிண்டு முடிப்பதில் நிபுணனாகி,
சிதைத்திட்டாய் அப்துல் கலாம்
காண சொன்ன கனவை!
சின்னாபின்னமாகி விட்ட உன் இலக்குகளை
சிம்மாசனங்களை சுத்தமான பிரதேசங்களை
சிருஷ்டிக்க உன்னால் முடியுமா?

சில்லறைக்கு கை ஏந்தி?
சிகரெட் புகைப்பவன் போல்,
சிறிலங்காவின் நடு வீதியில்
சித்தப் பிரமையுடன் ஏன் நிற்கின்றாய்!

சிலம்பேந்தி வந்த கண்ணகி போல்,
சிரிப்பு மாறா சொந்தங்களின் படமேந்தி,
சின்னதீவாம் எமது நாட்டு வீதிகளில்
சிந்தும் கண்ணீருடன் உன் உறவுகள் நிற்கின்றனர்!

சிலை வைத்து நாளை வணங்க வேண்டிய
சிறுமிகளை கூட சின்னாபின்னப்படுத்தும்
சிறுமையும் கொடுமையும் நாளாந்த செய்தியாக
சிறை கூடங்கள் கயவர்களால் நிரம்பி வழிய
சிறந்த எமது பண்பாடு கலாசாரமெல்லாம்
சில்லறை விற்பனை பொருளாக மாறியதேனோ?

சிற்றெறும்புகள் கூட அணிவகுத்து அசைகின்றன
சிறகொடிக்கும் காக்கைகளும் குரலெழுப்பி கூடுகின்றன
சின்ன சின்ன பிரச்சனைகளால் நீயோ விலகி நிற்கிறாய்
சிகரத்தில் உன் சமூகம் ஏறிட தோள் கொடு நண்பா!

சிங்கார எமது கலா கலாசார மெல்லாம்,
சினிமாவில் சிக்குண்டு சிறைபட்டு கிடக்குது!
சினம் தான் கொள்ள வைக்கின்றது நடை உடை பாவனைகள்
சின்ன திரைகளும் வில்லிகளாகவே பெண்கள் சித்தரிக்கின்றன

சித்தாந்தங்களைச் சித்தரிக்கும் கூத்து களரிகள் இல்லை
சிந்தென்றால் 'எண்ணெய் சிந்துதான்' என்பாரும் மாணங்களும் இல்லை
சிலிர்க்க வைக்கும் கொம்பு முறியும் போர்த்தேங்காய் வனப்பும் இல்லை
சிறுவர்களின் வசந்தன் கும்மி கோலாட்டமும் இல்லை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிற்றருவிபோல் தேனும் பாலும் பரவிய பிரதேசம்,
சிறு சொட்டு தண்ணீருக்கே ஏங்கிதான் நிற்குது
சிவந்த எமது மண்ணும் வளங்களும் கப்பலில் செல்கின்றது
சிறந்த எமது வன வளமும் காசுக்கு காலி

சிவப்பு சிக்னலுடன் காட்டு யானைகள் ஊருக்குள்
சிறு குடிசைகளும் பயிர் பச்சைகளும் துவம்சம்!
சிவலோகம் செல் என ஆனை ஆட்களையும் அடிக்கின்றது.
சிவராத்திரிதான் தினமும் என எம் மக்கள் துடிக்கின்றனர்.

சிந்திக்க உனக்கு ஒன்றல்ல ஓராயிரம் இருக்கு
சில செக்கன்களும் விரயமாகாமல் விரைந்து செயற்படு.
சிலேற் ஒன்றை இதயத்தில் உணர்வு என்ற சோக்கால் எழுதி
சிவராமன் அணைகட்ட உதவிய அணிலாக நீ மாறு.

சிலைகளும் ஆலயங்களும் நாட்டை அடையாளப்படுத்தி
சித்தரிக்க சமய நெறிகள் மட்டும் சமாதி அடைந்ததேனோ?
சிறந்த நற்போதனைகளை தலையெடுக்க விடாமல்
சின்னதனமான செய்ற்பாடுகளால் ஏன் திணறுகின்றோம்!

சிகரம் தொட்ட கல்வி நிலை
சிரம் தாழ்த்தும் கடை நிலையில் நிற்க,
சின்ன திரையில் கவனம் பதித்து
சிங்காரமாய் மெகா தொடரில் சிக்கி,
சிந்தனை மையமாக தொலைக்காட்சிகள்!

சிறு குழந்தைகளின் பசிக்களை
சிக்னல்கள் தொடராக விழுந்தாலும்,
சினம் கொண்டு அவர்களை உறுக்கிவிட்டு,
சித்திரக் குழந்தைகளின் கண்ணீர் மறந்து,
சிந்துகின்றனர் கண்ணீர் நாடகத்தில் லயித்து.

சின்ன சின்ன ஆசைகளால்,
சிறகொடிந்த பறவைகளானோம்!
சில சலுகைகளுக்காக அடிமைப்பட்டு,
சிதைத்திட்ட உறுதியான சகோதர கட்டமைப்புக்களால்
சிதறித்தான் போய் நிற்கின்றோம்!

'சி'னா 'மு'னா என்று பிரித்து, பேசி
சித்திரதேர் போன்ற எமது இனத்தை
சின்னாபின்னாப் படுத்தி - பிரித்து.
சிலைபோல் உணர்விழந்து நிற்கின்றோம்!
சின்ன சின்ன எமது பந்தங்களை
சிக்கனமான ஒற்றுமை என்ற ஊசியால் தைக்க
சித்தம் கொள்ளாததால் ஆடையும் இழந்து நிற்கின்றோம்.

சிந்திய இரத்தம் போதும்,
சித்திரவதைகள் இழப்புக்கள் போதும் என்ற
சிந்தனை வலுப்பெற்ற போதும்,
சிவனும் பார்வதியும் போல் ஒன்றித்தே,
சில காரியங்களை வென்றாக வேண்டுமென்ற
சிறந்த ஞானம் பிறக்கும் வரை
சிறகொடிந்த பறவைகள்தான் நாம்!

**- ரவிப்பிரியா**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கோலம் போடுதல்

தமிழ் கலாசாரத்தில் முக்கியத்துவம் பெறும் கோலம் இடும் கலை பொதுவாக இந்துக்களின் வீட்டு முற்றத்திலே காணக்கூடியதாக உள்ளது. கோலம் போடுதல் தமிழ் நாட்டு கலைகளில் ஒன்று. கோலம் என்பதற்கு அழகு, ஒப்பனை, மாதிரி என்றும் பொருளுண்டு.

பெருவிரலுக்கும் அடுத்த விரலுக்கும் இடையில் கோலப் பொடியினை வைத்து கோடுகளாக நிலத்தில் விழு மாறு செய்து தரையில் உருவத்தை உருவாக்குவதே கோலம் எனப்படும்.

குத்து விளக்கு பூஜை செய்பவர்கள் கோலம் இட்டு அதன் மீது விளக்கை வைத்து வழிபடுபர். மந்திரத்தகட்டில் வரைவது போன்று மாவினால் தரையில் கோலம் அமைத்து அதை வழிபடும் முறையே பிற்காலத்தில் கலை நுட்பம் நிறைந்த கலையாக வளர்ந்தது. தாய் அல்லது தமக்கை மூலமே தமிழ்நாட்டுச் சிறுமி கற்றுக்கொள்கிறாள். புதுப்பெண்கள் கணவன் வீடு செல்லும் போது புதுமையான முறையில் கோலம் போடுதல் அப்பெண்ணுக்கு பெருமை சேர்க்கும் ஒன்றாக தமிழ் நாட்டில் கருதப்படுகின்றது.

சாதாரண காலங்களில் கோலம் போடுவதற்கு அதற்குரிய வெண்களியை இடித்து வெண்மையின் பொடியாகக் கொண்டு கோலம் இடு வது சிறப்பானது. திருவிழாக்க ளிலும் மங்கல நிகழ்ச்சிகளிலும் கோலம் போடுதல் சிறப்பான தொன்றாகும்.

ஆனாலும் பண்டைய காலத்தில் வீடுகளின் முற்றத்தை அலங்கரிப்பதற்கு மட்டுமன்றி அதை தாங்கி நிற்கும் பூமித்தாய்க்கு மரியாதை செய்யும் நோக்குடன் இதை செய்து வந்தார்கள் என கூறப்படுகிறது.

மலர், சங்கு, மயில், தேர், முக்கோணம், நாற்கோணம் போன்றவை பெரும்பான்மை கோலங்களில் வடிவங்களாக பயன்படுத்தப் படுகின்றன. பண்டைய காலத்தில் வீட்டுப்பெண்கள் சூரிய உதயத்திற்கு முன் நீராடி முற்றத்தில் மஞ்சள் நீர் தெளித்து சாணத்தினால் மெழுகி செப்பனிடப்பட்டபின் அரிசி மாவி னால் கோலங்களை புள்ளிக் கோட்டில் இட்டு தீபம் ஏற்றி வழி படுவர். இது முற்றத்தை அலங்கரிப்பது மட்டுமன்றி சிறிய எறும்பு போன்ற பூச்சிகளுக்கும் உணவாகப் பயன்படுகின்றது.

அரிசிமா, மாக்கோலம், தேங்காய்பூ, பூக்கோலம் என கோலம் இடுவதற்கு பல பொருட்கள் பயன் படுத்தப் படுகின்றன.

இன்று சந்தையில் நிறமூட்டப் பெற்ற மாவையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது.

கோலத்தில் சிக்கலான கோலத்தை சிக்குக் கோலம் எனக் குறிப்பிடுவர். புள்ளிகளை மையமாக வைத்துப் போடப்படும் கோலமாகும் இதைப் போடுவதற்கு நினைவாற்றலும் அதிக கவனமும் தேவை. புள்ளிகளை வைத்து அவற்றை நேர்கோடுகளால் இணைத்து அவற்றில் வரை கோடுகள் அனைத்தும் வரைந்து அழகு படுத்தப் படும் கோலம் சிக்குக்கோலம் எனப்படும்.

இந்நூற்றாண்டின் தொழிநுட்ப வளர்ச்சியும் இடம்பற்றாக்குறையும் மேல்நாட்டாரின் நாகரிகத்தாக்கமும் அடுக்குமாடி வீடுகள் மலிந்து விட்டமையாலும் இதனால் முற்றங்கள் இல்லாமையால் இக் கோல மிடுங்கலை மறைந்து வருகின்றது.

தமிழ் விழாக்களில் மட்டுமே கோலம் இடும் முறை இருந்து வரு கின்றது. ஆகையினால் எமது சிறார் களுக்கு கோலமிடும் முறை, மாலை கட்டுதல் போன்ற தமிழ் கலாசார வழக்கங்களை கற்றுக்கொடுத்தல் சிறப்பான காரியமாக அமையும்.

**C. டானியல்**
பகுதிநேர விரிவுரையாளர், அழகியற் கற்கை நிலையம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

## மாண்புறு மண்முனை

# தென் எருவில்பற்று

**கவிஞர் சங்கதாசன்,** எருவில்



முத்தாய் மிதக்கும் மாங்காய்த் தீவின்
முழுமதிக்கும் ஒளியை வழங்கி நிற்கும்
முதல் ஒளி முதல்வன் கதிரவன் என்பான்
முன்னே தோன்றும் கிழக்குச் சீமை

வனப்பின் எழிலை நயந்தே மீனும்
வழுத்திப் பாடல் இசைக்கும் மட்டில்
வளங்கள் அனைத்தும் கொண்டே இலங்கும்
வண்ணமண் முனைதென் எருவில் பற்று

ஆதவன் வரைப் பார்த்தே குளத்தில்
அவிழ்ந்தே நயனம் புரியும் பங்கஜம்
ஆங்கே இரைந்து சுற்றிச் சுற்றி
அமிர்தம் பருகிச் சுவைக்கும் அளிகள்

அல்லியை ஒல்லியை உரசி நீந்தும்
அகண்ட வரால்கள், கெண்டை வரவை
அவாவாய் நோக்கும் வெள்ளை நாரை
அளகும் கரையில் நடனம் ஆடும்

நண்டும் ஆற்றங் கரையில் ஆடும்
நயந்த கயலும் துள்ளிப் பாயும்
நம்பியே மீனவர் தோணியை ஓட்டுவர்
நன்நீர் மட்டு வாவி யதனில்

ஏருன்றி நெல்விளையும் மருதம் மதனில்
ஏற்றமுறு உழவன் உழைப்பான் வியர்த்து
ஏற்றத்தாய் வெற்றிலை மரக்கறி அனைத்தும்
ஏந்துவோர் தமக்கும் தருவான் உவந்து

கரும்பிள நீரும் பனையும் கொழிக்கும்
கறவைகள் நிறைந்த பாலைச் சொரியும்
கன்றுகள் அங்கே வாழியும் பாயும்
காளைகள் வண்டியை கவர்ந்தே இழுக்கும்

தேன்கதலி மாபலாவும் நாவலும் கிண்ணையும்
தேவிட்டாச் சுவைகொடு மாற்றுள கனிகளும்
தேசமெலாம் செழித்தே தண்மை யூட்டும்
தேடியே வந்தாரும் வாழ்வாரே வழமாக

ஏலேலோ பாடி எறும்பணி போலே
எல்லோரும் கரைவலை இழுப்பதும் ஒருங்கே
ஏல்லைஇல் கடலில் மாலைப் பொழுதில்
ஏறுவர் தோணியில் எண்ணில் மீன்பிடிக்க

வைகாசி வந்தால் சடங்குகள் தொடங்கும்
வையகம் போற்றும் கண்ணகி காவியம்
பையென மடியில் பிச்சைகள் எழுத்து
மைவிழி மாதர் ஆலயம் விரைவர்

கல்வியில் தேர்ச்சி உற்றோர் கணிசம்
கதவுகள் தோறும் பட்டமே பெற்றோர்
கணணியில் தமிழ் மொழியினை இட்ட
கருத்துடை மாந்தரும் இத்தேசம் தானே

இருத்தல் ஒழுக்கமுடை நெய்தல் நிலமும்
இரவியின் வெம்மையில் பாலையாய் உணர்த்தும்
இரைதேடும் ஆவினங்கள் முல்லையில் கூடும்
இத்தனைக்கும் மேலாய் மருதமு மிங்குண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்துபோகும் பிரதேச பாரம்பரிய விளையாட்டுக்கள்



இன்றைய மனிதன் இலத்திரனியல் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். அதற்கேற்றாற்போல் தன்னையும் மாற்றிக் கொண்டும், மாற்றிக் கொள்ள எத்தனித்துக் கொண்டும் இருக்கின்றான். இருப்பினும் தனது ஆரோக்கிய வாழ்க்கைக்கு வேண்டிய பல்வேறு விடயங்களையும் கைவிட்டுச் செல்வதே வேதனை யளிக்கின்றது.

எமது மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் மக்களால் கையாளப்பெற்று வந்த பல்வேறு பிரதேச பாரம்பரிய விளையாட்டுக் களும் இவ்விதம் விலக்கிச் செல்ல விடப்படுவது மனங்கொள்ள வேண்டியதே.

எமது பிரதேசத்திலே இற்றைக்கு இரண்டு தசாப்தங்களுக்கு முன்பும் இவ்வாறான பல விளை யாட்டுக்கள் விளையாடப்பட்டு வந்திருப்பது அறியக் கிடைக்கின்றது.


குழந்தைப் பருவம் முதல், பிள்ளைப்பருவம், சிறுவர், இளைஞர்கள், முதியோர்களென ஒவ்வொரு பிரிவினர்களுக்கும் ஏற்ற பல விளையாட்டுக்கள் அடையாளமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் இவை எமது பிரதேசத்தின் பண்பாட்டுக் கோலங்கள், பழக்க வழக்கங்கள், மரபு முறைகள் போன்றவற்றை துலக்கி நிற்பன என்றால் மிகையில்லை.

இத்தகைய விளையாட்டுக்கள் எவை எனும் போது, ஆனையாடுமாம் பிள்ளை ஆனையாடுமாம், சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு, ஆலாப்பறபறபற, சங்கு விளையாட்டு, கிள்ளிக்கிள்ளிப் புராண்டி, பொன்னான் வா, சப்பாணி கொட்டுமாம் சப்பாணி, கைவீசம்மா கைவீசு, கீரை கட கீரை கட போன்ற குழந்தைகளுக்கான விளையாட்டாகவும், இவை குழந்தைகளில் உடல், உள மேம்பாட்டுக்கும், தாய், மற்றும் உறவுகளுடனான பாசப்பிணைப்பையும் ஊட்டுவதாகவும் அமைந்து விடுகின்றன.

அடுத்த கட்ட பிள்ளைப்பருவ மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டுக்களை பார்க்கையில் கண்கட்டி விளையாட்டு, கீச்சு மாச்சு தம்பலம், பாட்டன் கொத்து பறையன் கொத்து, சுரக்காய் இழுத்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டக்கோடு, குளம்கரை, ஊரி வைத்து விளையாடுதல், குட்டி விளையாடுதல் (உ+ம்: மாம்பழம் வந்து வந்து குட்டிக் குட்டிப் போ), கொத்திருக்கு கொத்து, சில்லுக் கலைத்து விளையாடுதல், நொண்டியடித்தல் (சில்லுக்கோடு) போன்றவற்றைக் கூறலாம். இவை பிள்ளைகளுக்கிடையில் ஒற்றுமை, அன்னியோன்னியம், வெற்றி தோல்விகளை ஏற்றுக் கொள்ளல் மற்றும் ஏனைய உடல், உள விருத்தியையும் ஏற்படுத்துவதனையும் உணரலாம்.

சற்று வளர்ந்து சிறுபராயத்தைத் தாண்டிய மற்றும் இளைஞர் யுவதிகளால் கொம்புமுறி, ஊஞ்சல், காய் அடித்து விளையாடுதல், கிட்டிப்பொல், சாடியடித்தல் (கிளித்தட்டு), வார்விளையாட்டு, உச்சிப்பந்து போன்றவை விளையாடப்பட்டன. இவை பொழுதுபோக்கு, உடற் பயிற்சி, கூட்டுறவு, வெற்றி தோல்வியை புரிந்துகொள்ளல் போன்றனவற்றை வளர்ப்பதாக அமைந்தன.

முதியவர்களுக்கென பல விளையாட்டுகள், இடம்பிடித்திருந்த போதிலும் தாயம், பகடை, மகுடி, கொம்புமுறி போன்றனவே முக்கியமானவை. இவை பொழுது போக்கிற்காகவும், இரவில் நித்திரை விழித்திருக் கின்ற வேளையில் விளையாடுவதற்காகவும் இருந்தன.

இவ் விளையாட்டுக்கள் மூலம் எமது சமூகத்தில் ஒவ்வொரு வயதுப்பிரிவினருக்கும் படிநிலை படி நிலையாக சமூகவியலாக்கத்திற்கும் சுய மேம்பாடு மற்றும் சமூக மேம்பாட்டிற்கும் உந்துதல் கிடைத்தமை உணரப்படவேண்டியது.

விளையாட்டுக்களின் போது பாடப்படும் பாடல்கள், உச்சரிக்கப்படும் சொற்கள் என்பவற்றை கேட்பதன் மூலமும், சொல்லப்பழகுவதன் மூலமும் குழந்தைகள் பொருட்களை மற்றும் சொற்களை புரிந்து கொள்கின்றன. அங்க அசைவுகளின் மூலம் உடல் உறுப்புக்களைப் பற்றியும் அவற்றின் செயற்பாடுகள் தொடர்பிலும் கற்றுக் கொள்கின்றன. மற்றும் பாசப்பிணைப் பையும் உணர்கின்றது.

நவகால விளையாட்டுக்களைப் போல் பெரிய இடப்பரப்போ, விளையாட்டு மைதானங்களோ தேவைப் படவில்லை இருக்கும் இடத்தில், வீட்டில், தெருவில் என அனைத்து இடங்களிலும் விளையாடக் கூடிய விதத்தில் விளையாட்டுக்கள் அமைந்திருந்தன. இதனால் எடுத்த மாத்திரத்தே விளையாடக் கூடியதாகவும் இருந்தது.

நல்ல உடல்பயிற்சி அதன் மூலமாக திடமான உடல், ஆரோக்கியமான உளம் என்பன அமைந்திருந் ததோடு இன்றைய காலகட்டம்போல் தொற்றாநோய்களின் ஆதிக்கம் அன்று இருந்திருக்கவில்லை என்றே கூறவேண்டியுள்ளது.

தேவையைச் சுருக்கிக் கொண்ட அன்றைய மனிதன் நேரத்தை மீதப்படுத்தினால் உறவுகளோடு, சுற்றத்தாரோடு, சகபாடிகளோடு உறவுகொண்டிருந்ததோடு மனம்விட்டுப் பேசி, இவ்வாறான விளையாட்டுக்களை ஒற்றுமையாக விளையாடினான். இதனால் ஒற்றுமை, ஆரோக்கியம், புரிந்துணர்வு போன்றவற்றை நழுவவிட வில்லை. ஆயினும் இன்று இந்நிலை மாறி தொலைத் தொடர்புத்துறையின் துரிதவளர்ச்சி காரணமாக இலத்திரனி யல் ஊடான செயற்பாடுகள் மூலம், அனைவரும் விளையாட முடியாத விளையாட்டுக்களின் மேலோங்குகை மூலமும் தன் சுவட்டை மறந்து இச்சிறந்த பாரம்பரிய விளையாட்டுக்களை வழங்கொழியச் செய்ததோடு பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றான்.

எனவே எமது சமூகத்தின் அரும்பெரும் சொத்தாகவும், பண்பாட்டின் அடையாளங்களாகவும் விளங்கும் இப் பாரம்பரிய விளையாட்டுக்களை வெளிக் கொண்டுவந்து அவற்றை விளையாடி உடல், உள சமூக ஆரோக்கியத்தோடு வாழ வேண்டும் என்பதே அவா.

**- க. கயல்வேந்தன்**
எருவில்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

'இசையால் வசமாக இதயமெது?' எனும் பாடலுக்கு அமைவாக இசை அனைத்துயிர்களையும் ஒடுக்கி ஒரு வரிக்கு கொண்டு வரக் கூடியது. இசை இறைவடிவமானது. எடுத்துக்காட்டாக கண்ணன் கையில் வேய்ங்குழலும், சிவன் கையில் உடுக்கையும், சரஸ்வதி கையில் வீணையும், திருமால் கையில் சங்கும், நாரதர் கையில் தம்புராவும் உள்ளதை கொண்டும், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் 'வேதானாம் ஸாமவேதே' எனக் கூறியதில் இருந்தும் இறையியல் இசையியலோடு கொண்ட தொடர்பை காணலாம்.

நாத மயமான இறைவனை வழிபடுவதற்கு பக்தியை அடிப்படையாக கொண்டு தோற்றம் பெற்றதே எம் கர்நாடக இசையாகும். பாரம்பரியமான வைதீக தர்மமான 'இந்து' அமைப்போடு கூடிய இசையாக இது திகழ்கின்றது. இந்த இசையில் எழுந்த பாடல்களை 'உருப்படி' எனும் இசை பரிபாசையால் அழைப்பது வழக்கம். இந்த இசை உருப்படிகளில் இறைவனை நாயகனாகவும், பாடும் வாக்கேயக் காரர் தன்னை நாயகி யாகவும் வைத்துப்பாடுவது சிறப்பான ஒரு அம்சமாகும்.

இத்தகைய உருப்படிகளாக பதவர்ணம், பதம், ஜாவளி, என்பன காணப்படுகின்றன. அதிலும்



# நாயிகா பாவ இசை
## உருப்படிகளுக்கு வித்திட்டது
# ஸ்ரீ ஆண்டாள் பாசுரங்களே

குறிப்பாக 'பதம்' மதுர பாவத்தில் உச்சத்தை தொட்ட உருப்படியாகும். இத்தகைய உருப்படிகள் வளர்ச்சிக்கு அடிகோலியது யார்? எனும் போது பல்லவர்கால பக்தி இயக்கமே எனலாம்.

அதிலும் குறிப்பாக ஆழ்வார்கள் பன்னிருவரில் மதுரகவியாழ்வார் தவிர்ந்த பதினொரு பேரும் நாயக நாயகியா பாவத்தோடே இறைவனை அனுபவித்தனர். கண்ணனை தம் நாயகனாக கொண்ட ஆழ்வார்களில் பிரதானமாக கண்ணனுக்காகவே வாழ்ந்து அவனை தன் பக்தி திறத்தால் கரம் பிடித்தவள் எம் ஆண்டாள், 'தமிழை ஆண்டாள், தமிழ் தெய்வம் திருமாலை ஆண்டாள், மொத்த தமிழர்களின் மனதை ஆண்டாள்' எனும் பெருமை உடைய இவள் தனது பாசுரங்கள் அத்தனையிலும் 143 நாச்சியார் திருமொழியும் 30 திருப்பாவையும் சேர்த்து 173 பாசுரங்களிலும் கண்ணனை நாயகனாக கண்டாள்.

சங்க காலத்தே அகத்திணையாக காட்டப்பட்ட காதலை நம் ஆண்டாள் பக்தி காதலாக மாற்றினாள். சங்கமரபில் காணப்பட்ட கைக்கிளை, பெருந்திணை ஐந்திணை காதல் ஒழுக்கம் அற்புதமாக ஆண்டாள் பாசுரத்தில் பக்தி காதலாக பரிமணமிக்கிறது. இப்படி ஆண்டாள் பாசுர உள்ளடக்கங்களையும், பக்தி காதலையும் பிற்கால இன சமூகம் பதத்தில் வெளிப்படுத்தியது. பெரும்பாலும் பதம் 'கண்ணனை' நாயகனாக கொண்டு அமையும். தான் ஒரு மனித பெண் எனிலும் தனது இசைத்தமிழால் பகவானை தன் வயப்படுத்தினாள் ஆண்டாள். இதை அடியொற்றி இசையுலகில் பதம் பாடப்படுகிறது. பதம் மட்டுமன்றி நாயக, நாயகி பாவம் எனும் 'நாயிகா பாவ இசை உருப்படிகளுக்கு வித்திட்டது ஸ்ரீ ஆண்டாள் பாசுரங்களே' என்றால் அது மிகையாகாது.

**திரு ச. செல்வப்பிரகாஷ்**
தேற்றாத்தீவு


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# நல்லிணக்கம் வீசட்டும்

இந்து சமுத்திரத்தின் முத்தென உலகில்
இன்புகழ் பெற்றது நம்நாடு
விந்தையழகும், இயற்கையும் நித்தம் இலங்க
வியந்துளம் நித்தம் கவிபாடும்!

தமிழர், முஸ்லிம், பறங்கியர், சிங்களவர்
சமத்துவ நெறியில் நம் இலங்கை
அமிர்தமாய் இனித்திட்ட உறவுகளாய்
சுற்றத்தாரென கூடிவாழும் நல்நாடு!

இனபேதம், மதபேதம் தகர்த்தொருகுலமாய்
இதயத்தில் நல்லுறுதி கொண்டு
இனிதுயர் நீதியும் சத்தியமும்
என்றும் நிலைத்து வாழ்ந்திடவே,

குண்டுகள் வேட்டொலி இங்கின்றி
குலபேதங்கள் நீங்கி வாழ்ந்திடவே
கண்டுளம் மகிழ்வுற நம் நாட்டில்
கனிவுடன் நல்லுறவோங்கட்டும்;

நல்லொற்றுமையும், புரிந்துணர்வும்
நம்நாட்டு மக்கள் மத்தியில் உயிர்ப்புடனே
எல்லையில்லா நிலையினில் நிறைவாய்
என்றும் நின்றொளிர் புரிந்திடட்டும்!

இடர் வருகின்ற போதெல்லாம் ஒன்றுபட்டு
இனமத வேற்றுமை மறந்திட்டு
படருள்ளத்தால் உறவுகளுக்காய் எழுந்து
பாசமாய் நற்பணியாற்றிடவே,

நிற, கட்சி பேதம் தனை கடந்து
நிறைவான செல்வ வளங்கண்டு
அறந்தனை ஏற்றுநம் நாடெங்கும்
அழியா நல்லிணக்கம் வீசட்டும்!

குற்றுயிராய் கிடக்கின்ற நல்லுறவை
குறைவற நிறைவாய் கைகோர்த்து
பற்றுடன் பாகுபாடின்றி - நித்தம்
பண்புடன் அன்பு பெருகிடவே!

அறநெறி வாழ்வில் ஆர்ப்பரித்து
ஆனந்தம் பெருகிட வாழ்வமைத்து
உறவுடன் ஒன்றாய் வாழ்ந்திடுவோம்
உலகம் போற்றிப் புகழ்ந்திடவே!

இத் திருநாட்டில் சமாதானம் நிலைத்திட
இறைவனிடம் இருகை கூப்பி
உத்தமமாய் நற்பெருமையுடன்
உறவுகளாய் ஒன்றி வாழ்ந்திடுவோம்!

**ஏ. விஜிதரன்,**
கிராம உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் கிடைத்த பரிசு



பதினான்கு வருடங்கள் கடந்துவிட்டன ஏன்? காற்றாய் பறந்தன என்று கூடச்சொல்லலாம். கடலின் அலைகள் எழுவதையும், மடிவதையும் இந்த உலகத்தில் ரசிக்காத மனிதர்கள் இருக்கவே முடியாது அதேபோல் கடலின் அழகை எழுதாத கவிஞர்களும் இருக்க முடியாது அந்த அழகிற்கு இறைவனின்படைப்பில் ரம்மியமான ஒன்று.

இந்த அழகு தான் அன்று அரக்கனாக மாறியது. பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் குடித்து அடங்கியது இத்தனை நாளும் முன்னோக்கி வர முயற்சித்து வர முடியாமல் பின் வாங்கிய கடல் பழிவாங்கும் எண்ணத் துடன் பாய்ந்து வந்த அந்த அகோரக் காட்சி ஆண்டுகள் பல்லாயிரம் கடந்தாலும் மறக்க முடியாத சோகச் சுவடு

தனது மகள் ரம்மியா ஆண்டவனிடம் அடைக் கலம் அடைந்து பத்து வருடம் ஆகிவிட்டதை ரம்மியா வின் படத்தை துடைத்துக் கொண்டிருந்த மகேஷால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை அவளது கண்ணீர் கடலாய்ப் பெருகியது

மகேஷ் மணம் முடித்து ஒரு வருடத்திலே மகன் நிரேஷ் பிறந்து விட்டான். அவர்களது வம்சத்தில் யாருக்கும் பெண் பிள்ளைகள் இல்லை இந்தக் குறையை நீக்க வேண்டாத இறைவனில்லை வைக்காத நேர்த்தி இல்லை ஆண்டவனின் கருணையால் நிரேஷ் பிறந்து பத்து வருடங்கள் கழித்தே ரம்மியா பிறந்த அன்று அவர்கள் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை

சுனாமி வரும்போது ரம்மியாவிற்கு வயது நான்குதான் நிரம்பியிருந்தது. தனது தேவைகளை நிறைவேற்றக் கூடியளவு பேசப் பழகியிருந்தாளே ஒழிய அதிகமாகப் பேசமாட்டாள் தன் மகளின் மழலை மொழியில் மகிழ்ந்திருந்த நாட்கள் மகேஷின் மனதை வருடி நோகடித்தது.

சுனாமி வரும்போது மகேசும் ரம்மியாவும் திருக்கோவிலிலுள்ள அவர்களது வீட்டிலிருந்தனர். நிரேஷ் நண்பர் வீட்டிற்குச் சென்றுவிட்டான் அவரது தந்தையும் வெளியே எங்கோ சென்றிருந்தார்.

கோர அலையின் அகோரப் பிடியில் மகேசும் ரம்மியாவும் திசை தெரியா திண்டாடி அலை மோதினர். அவர்களுக்கு இன்னும் பல்லாயிரம் உயிர்கள். உடமை என.. மகேஷால் நினைத்துப் பார்க்கமுடியவில்லை

தன் மகளின் இழப்பை எந்தத் தாயால்தான் ஏற்றுக் கொள்ள முடியும். அவள் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் தவித்துக் கொண்டிருக்கையில் தான் நிரேஷ் அம்மா... அம்மா... அம்மா..... என்று அவசரமாக அழைத்துக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே வந்தான். தன் தாயின் நிலையை கண்ட அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை மகேஷின் கையிலிருந்த ரம்மியாவின் படத்தை பறித்து உடைத்தெறிந்தான். தனது மகளின் நினைவாக இருந்த ஒரேயொரு படத்தைத் தன் மகன் உடைத்தெறிந்ததைத் தாங்க முடியாமல் மகேஷ் நிரேஷை ஓங்கி அறைந்தாள்.

"அம்மா இனியும் ரம்மியாவ படத்தில் வைக்காதேம்மா ரம்மியா இருக்காம்மா என்னோட தங்கச்ச நான் கண்டேம்மா"

"என்னடா சொல்ரா" "ஆமாம்மா என் தங்கச்ச எனக்குத் தெரியாதா? நான் கண்டேம்மா அவ பற்றியும் அறிஞ்சனும்மா"

"என்னடா குழப்புறா வலிய, மறந்து வாழ இருந்த நேரத்தில" "இல்லம்மா நான் கண்டது நம்ம ரம்மியா தானம்மா முந்தநாள் என்னோட யூனிவசிட்டி பிறண்ட் றொபேட்டோட தங்கச்சிக்கு கலியாணம் எண்டு போனேனல்லா அம்மா அங்க கலியானம் நடந்தது நம்ம ரம்மியாவுக்குத்தான் அம்மா நல்லா வளர்ந்து அழகா இருக்காம்மா"

"என்னடா நீ சொல்றதெல்லாம்" "உண்மதானம்மா நீங்க அடிக்கடி செல்லுவீங்கெல்லா அவளோட வடிவுக்கு கண் படாமத்தான் பியூட்டி மார்க்போல நாடில இடப்பக்கமா மறு வந்திருக்கு எண்டு அது நம்ம ரம்மியாதானும்மா"

"உண்மையாடா என் மகள் ரம்மியாவா..." "ஓமம்மா அவள சுனாமி நேரத்தில தான் தத்தெடுத்தாங்களாம். யாரோ ஒருவர் கொண்டு குடுத்தாராம், அவன்ர தங்கச்சி சுனாமில போனதால நம்ம ரம்மியாவ அவங்க பொண்ணு ஸ்ரெல்லாவாவே வளக்காங்களாம்"

"என்னடா சொல்றா...... நான் இப்பவே என் மகளப் பாக்கோனும்டா" மகேஷின் முகம் சேற்றில் முளைத்த தாமரையாய் மலர்ந்தது. மகேஷ், நிரேஷ் இருவரும் ரம்மியாவப் பார்க்க றொபேட்டின் வீட்டிற்குச் செல்கின்றனர். அங்கு தனது மகள் ரம்மியாவை கண்ணாரக் கண்டு களித்த மகேஷ் தனது மகளை மாறி மாறி முத்தமிட்டு அழுகிறாள் ஸ்ரெல்லா எதுவுமே புரியாது விழித்து நிற்கிறாள்.

றொபேட்டின் பெற்றோர் என்ன செய்வது என்று தெரியாது விழித்திருந்தனர். என்ன செய்வது பெற்ற மனம் பற்றி எரிவதைக் கண்டு ஸ்ரெல்லாவை மகேஷிடம் ஒப்படைக்க முடிவெடுக்கின்றனர். ஆனால் ரம்மியா தன்னைப் பதினான்கு வருடம் வளர்த்த தாய் தந்தையிடமே இருக்க ஆசைப்படுவதைக் கண்டு மகேஷ் அவர்களிடமே ஒப்படைக்கின்றாள்.

அம்மா ரம்மியா இல்ல நீ ஸ்ரெல்லாவாவே இரு ஸ்ரெல்லா நான் உன்ன அடிக்கடி வந்து பாப்பனும்மா உன் ஆசைப்படி உன்ன வளத்தவங்க கூட இரும்மா எனக்கு நீ உயிரோட இருக்கிறதே போதும்மா. தன்னோட பிள்ளையோட இழப்ப தாங்க முடியாது இருந்த இவங்களுக்கு ஆறுதலா இருந்த உன்ன இவங்ககிட்ட இருந்து பிரிச்சிற்டுப் போனா நான் மிகப் பெரிய யெமனாயிடுவன். இவ உங்க பொண்ணாவே வளரட்டும் நான் வாரேம்மா ஸ்ரெல்லா என்று அழுகையை அடக்கிக் கொண்டு வெளியேறுகிறாள்.

**களுவாஞ்சியூர்**
**பவளேந்திரன்-அனோஜா**

---

## காலை உணவுக்கு ஏற்ற நேரம்

**மிகச்சரியான நேரம் :** 7 முதல் 8 மணிக்குள்
**தாண்டக்கூடாத நேரம் :** 10 மணி
**நினைவில் கொள்ளுங்கள் :** தூங்கி எழுந்த அரைமணி நேரத்துக்குள் காலை உணவு சாப்பிடவேண்டும்




## மதியம் உணவுக்கு ஏற்ற நேரம்

**மிகச்சரியான நேரம் :** 12.30 முதல் 2 மணிக்குள்
**தாண்டக்கூடாத நேரம் :** 4 மணி
**நினைவில் கொள்ளுங்கள் :** காலை உணவுக்கும் மதிய உணவக்கும் இடையில் 4 மணி நேரத்துக்கும் அதிகமாக இடைவெளி இருக்கக்கூடாது



## இரவு உணவுக்கு ஏற்ற நேரம்

**மிகச்சரியான நேரம் :** 6 முதல் 8 மணிக்குள்
**தாண்டக்கூடாத நேரம் :** 10 மணி
**நினைவில் கொள்ளுங்கள் :** தூங்கச் செல்வதற்கு 2 முதல் 3மணி நேரத்துக்கு முன்னதாக இரவு உணவு சாப்பிடவேண்டும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது என்ன சாபம்

பேராதனையில் இருந்து மஹியங்கனை ஊடாக கல்முனைக்கு மேற்கொள்ளும் பிரயாணத்தில் அந்த 18 ஹெயார் பின் வளைவுகளும் அவனுக்கு மிகவும் பிடித்தமானவை. கண்டி பிரயாணம் என்றால் அவன் பாதை அதுதான்.

இந்த வளைவுகள் இதமானவை. இரசிக்க கூடியவை. பட்டப் படிப்பை முடிப் பதற்கு பல்கலைக்கழகத்துள் எத்தனை வளைவுகளைத் தாண்ட வேண்டி ஏற்பட்டது. அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

இனிப் பரீட்சையும் முடிந்து விட்டால் இப்பாதையை அடிக்கடி பயன்படுத்த முடியாதென்பதை நினைக்கும் போது, அவனுக்கு கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது. வெல்லாவெளி ஊடாக கண்டிக் கான ஒரு பஸ்சேவையை ஆரம்பித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.? என்று நினைத்தபடியே வீட்டை நோக்கி நடந்தான்.


நடக்கும்போதுதான் சூரியனின் தாக்கத்தை உணர்ந்தான். உச்சி வெயில் உடல் வியர்த்துக் கொட்டியது. வீட்டை அடைந்தான்.

வீட்டில் அவன் தாய் ஒரு குழந் தைக்கு முத்தமிடுவதுபோல் முத்தமிட்டு அவனை வரவேற்றாள். முந்தானையால் அவன் வியர்வையைத் துடைத்தாள். அவனை தாமதிக்க அனுமதிக்காமல் உணவு பரிமாறத் தயாரானாள்.

அவன் சாப்பிடுவதை கண்வெட் டாமல் பார்த்து ரசித்தாள். கனகாலத்துக்குப் பிறகு முசுற்றை இலக்கறி நல்லா இருக்கு தும்மா. அவன் கறியைப் பாராட்டினான்.

உன்ர பாட்டனுக்கும் இந்த கறி என்டால் உயிர். அவள் மீண்டும் கறியை வைத்தபடி கூறினாள்.

தம்பி நீ உணவை எப்படி சுவைத் துச் சாப்பிடுகின்றாயோ அதேபோல் எமது பாரம்பரிய கலைகளையும் சுவைக்க



வேண்டும். சுவையாகப் படைக்கவும் வேண்டும். எமது குடும்பத்துக்கு ஒரு பாரம்பரிய அந்தஸ்து இருக்கின்றது. அதை இனி நீதான் பேண வேண்டும். இரண்டாவது தரம் இறால் வைத்தபடி சொன்னாள் அவள்.

அவன் எதுவும் புரியாதவன்போல் விழித்தான். அவன் கவனம் முழுக்க சாப்பாட்டிலேயே இருந்தது. மௌனத்தை கலைத்து அவளே தொடர்ந்தாள்

உன்ர பல்கலைக்கழக படிப்பு முடிஞ்சி வந்திருக்கா, இனிமேலென் றாலும் அத பற்றிச் சிந்திக் வேணும். அந்தக் காலத்தில் உன் பாட்டன் கூத்துக் கலைக்கு உயிர் கொடுத்தவர். அதனால் கிராமத்தில் எங்கள் குடும்பத்திற்கு இன்றும் தனி கௌரவம் இருக்கின்றது. அண்ணாவியார் குடும்பம் என்றால் ஏதோ அரச உயர் அதிகாரிக்கும் மேலான மரியாதை. அந்தக் கௌரவம், தூர்ந்து போகாமல் பாதுகாக்க வேண்டும்.

நீண்ட நாட்களின் பின் இறால் குழம்பும், முசுற்றை கீரையும்,


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கீரி மீன் மணப்பு போட்டு களுதாவளை முருங்கைக் கீரை சொதியும் அவனை மதியம் ஒரு பிடி பிடிக்க வைத்துவிட்டது.

நிறைவான உணவு என்பதை அவனது ஏப்பம் வெளியிட, என்ன அம்மா திடீர் எண்டு இப்படியொரு யோசனை? அங்க கேக்காங்க இஞ்ச கேக்காங்க எண்டு சொல்லுவீங்க எண்டு பார்த்தா இப்பிடி சொல்றீங்க? அவன் கிண்டலும் கேலியுமாக சிரித்தபடி கேட்டான்.

பட்டப் படிப்ப முடிஞ்ச கையோட ஐயாவுக்கு பட்டத்துராணி தேவைப்படுதோ? அதுக்கு முதல் உன்ர பாட்டன்ர ஆத்மசாந்தியடைய அவர் பெயர் நிலைக்க கூத்து ஒன்டு அரங்கேற்றிப் பார். அப்பதான் அதன் அருமையும் பெருமையும் செல்வாக்கும் உனக்கு விளங்கும். உன்ர தொந்தி கரைஞ்சி வாட்டசாட்டமான ஆம்பிளையா வருவா. அப்ப எல்லாரும் மாப்பிள கேட்டு வரிசையில் நிற்பாங்க!

அப்பிடியெண்டா நான் றெடி அம்மா! அவன் வாய்விட்டு சிரித்தபடி கூறினான்!

உன்ர பாட்டன் ஒரு கூத்து அரங்கேற்றிவிட்டு கலரியில் இருந்து இறங்கினால் அந்தகால பொம்பிள பிள்ளையள் அவர மொச்சிருவாளுகளாம் என்டு எனக்கு அம்மா பெருமையாகக் கூறுவாள். அம்மா அவளுகள விலக்கி அவளுகளிட்ட இருந்து விடுவிச்சு பாட்டன வீட்டுக்கு கொண்டுவாறதுக்கு அம்மா படாத பாடு படுவாளாம்.

அப்ப பாட்டன் அந்த காலத்து 'காதல் மன்னன்' ஜெமினி கணேசனாக்கும். அவன் நக்கலாகக் கூறினான்.

ஆனா கடைசிவரை அம்மாவோட மட்டும்தான் வாழ்ந்தவர். வயசிலும் நூறை தாண்டியவர். கூத்துப் பழக்க முடியாத யுத்த சூழலில்தான் மத்தள ஒலியும் சலங்கை ஒலியும் வீட்டில் ஓய்வுக்கு வந்து, அவரை மெல்ல மெல்ல நோய்க்கு உட்படுத்தியது. 100 வயதாகும் போதுதான் முதற்தடவையாக உடல் நோய்களுக்கு உட்பட்டு மரணத்தை தழுவியவர்.

அவருடைய மரணச் சடங்கு கூட மாவட்டத் திலேயே ஒருநாள் முழுக்க மக்கள் வரிசையில் நின்று அஞ்சலி செலுத்தியது. அவள் ஏக்கப் பெருமூச்சுடன் கூறினாள்.

அந்தளவிற்கு பாட்டன் என்னம்மா சாதிச்சவர்? அவன் ஆவலுடன் கேட்டான்.

அவர் கூத்துக்கலையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியவர். மற்ற அண்ணாவிமார் ஏட்டுப்பிரதிகளை மட்டும் வைத்துக் கொண்டு கூத்துக்களை அரங்கேற்றி னாங்க. உன் பாட்டன் புராண இதிகாசங்களை நல்லா கரைச்சி குடிச்சி, ஆய்வு செய்து சுயமாக கூத்துப் பிரதி எழுதி அரங்கேற்றி பாராட்டப்பட்டவர். வடமோடி தென்மோடி இரண்டிலுமே முத்திரை பதித்தவர்.

அது சம்பந்தமாக பேராசிரியர்களிடம் கூட விவாதிக்கும் அளவிற்கு ஆற்றலுடன் இருந்தார். குறைந்த நேரத்தில் மகாபாரத கதைகளில் வரும் சிறிய கிளை பாத்திரங்களைக் கூட பிரித்தெடுத்து அதுக்கும் முக்கியத்துவம் கொடுத்து தனியாக கூத்துக்களை பரீட்சார்த்தமாகப் தயாரித்து கூத்துக் கலையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தவர்.

அப்படிப்பட்டவருடைய பேரன் நீ அவருடைய கூத்துப்பிரதிகளை படித்து பயிற்சி எடுத்து நீயும் கூத்துக்கலையில் ஒரு திருப்பத்தை மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். அக்கலைக்கு மீண்டும் நீ உயிரூட்ட வேண்டும். அதுதான் என் ஆசை.

யுத்த அனர்த்தகாலத்தில் அப்பாவும் காவு கொள்ளப்படவர்தான். அம்மா என்னை இந்த நிலைக்கு கொண்டுவருவதற்கு அவள் பட்ட பாடுகளை ஒவ்வொன் றாக மீட்டுப் பார்த்தான். தலையில் பாரம் ஏறியது போன்ற உணர்வு. அவன் கண்கள் கலங்கவே செய்தன.

என்ன மகன் கறிக்கு உறைப்பு கூடவோ? அவள் ஆதங்கத்துடன் கேட்டாள். கொஞ்சம் தயிர் போட்டுச் சாப்பிடு சரியாயிடும். கட்டித் தயிரை கரண்டியில் எடுத்து அவன் தட்டில் வைத்தாள்.

அம்மா வயிறு வெடிக்கப் போகுது. நான் நிக்கத்தானே போறன். ஆறுதலாகச் சாப்பிடலாம்தானே?

கெம்பஸ் சாப்பாடு குடலை சுருக்கித்தாக்கும். இந்த எறிப்புக்கு தயிர் நல்லம். கொஞ்சம்தானே அதைச் சாப்பிடு.

சாப்பிட்டு கையைக் கழுவினான். கையில் நெய் வாசனை. கையை மணந்தபடி கட்டாந்தரையில் காலை நீட்டி நிமிர்ந்து கண்ணயர்ந்தான்.

கண் விழித்து கடிகாரத்தைப் பார்த்தான். மணி மாலை ஐந்து. கடற்கரை நோக்கி நடந்தான். அமைதிச் சூழல். சுத்தமான காற்று. சுதந்திரமான சிந்தனை. பிரசவ தாய் வைத்திய விடுதியில் அனுமதிக்கப்பட்டது போன்ற உணர்வில் அவன். கூத்துக்கான கரு ஒன்றைப் பிரசவிக்கும் வலியில் அவன் இருந்தான்.

வெண்ணிற நுரை கக்கி விளையாடும் அந்த கடல் அலைகள் அவனுக்கு சேலையின் பாச்சுவதைப் போன்று உணர்ந்தான். அதை தனியாக இருந்து ரசிப்பதில் அவனுக்கு அலாதிப் பிரியம்.

அவன் ஒருமனதாக தாயின் ஆசையை அங்கீகரித்து தீவிர முயற்சியில் இறங்கினான். ஆழமாக அதுபற்றி ஆராய தொடங்கினான்.

பிரசவ வலிக்கு ஒளடதமாக நிவாரணமாக ஒவ்வொன்றாகச் சிந்தித்துப் பார்த்தான். வழமைபோல் புராண சமய இதிகாச கதைகளை கருவாக்குவதா? இது பரம்பரை பரம்பரையாக பழக்கப்பட்ட ஒன்று. பழைய பாணி. புதிதாக நவீன சமூகத்தைக் கவரக் கூடியதாக இருக்க வேண்டும். அதுதான் நல்ல வரவேற்பைப் பெறும். அப்போதான் கூத்துக் கலைக்கு புதிய கௌரவம் கிடைக்கும்.

கூத்துக்கலை மூலம் சமூகத்திற்கு நல்ல செய்தியைச் சொல்ல வேண்டும். அது சமூகத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பான மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும். எதைச் சொல்வது? அவன் வலி அதிகரிக்கவே செய்தது.

எவ்வளவோ சமூகப் பிரச்சனைகள் இருக்க அதில் ஒன்றைத் தெரிவு செய்து அதற்கு தீர்வை முன்வைத்தாலென்ன?

ஊழல். லஞ்சம், நுண்கடன், தற்கொலை, சிறுமிகள் துஸ்பிரயோகம் அதிலொன்றை எடுத்து எழுதினால் என்ன? அதை ஊடகங்கள் கையில் எடுத்திருக்கின்றன. அவற்றை தவிர்த்தால் பத்திரிகைகளாலும் பக்கங்களை நிரப்ப முடியாது. விற்பனையும் போகாது.

அவன் சிந்தனை சுழன்று கொண்டே இருந்தது. பிரசவ வலி அதிகரித்துக் கொண்டே போனது. மெல்லியதாக படர்ந்திருந்த இருள். கடல் குளித்து எழும் பூரண சந்திரனுக்கு வழிவிட்டு மெல்ல மெல்ல ஒதுங்கத் தொடங்கியது.

இன்று குறிப்பாக சைவ சமய வழிபாடுகளில் எளிமையான மாற்றங்களின் அவசியத்தைப் பற்றி வலியுறுத்தி ஒரு படைப்பை உருவாக்கினால் என்ன? இது மிகவும் சிக்கலான விடயம் அதற்கான முழு அனுபவமும் உனக்கில்லை. அவன் உள்மனது சொல்லியது. அதைவிட அறநெறி கல்வியின் அவசியமும் இன்றைய தேவையாக இருக்கின்றது. அதைப் பற்றி எழுதினால் என்ன? அவன் முடிவுக்கு வருவதற்கு முன்.

திடீரென அவனது முகத்தில் மின்னல் பட்டு தெறிப்பது போன்ற உணர்வு அவனுக்கு. திடுக்கிட்டுத் திரும்பினான்.

மங்கலான வெளிச்சம் மண்ணில் பரவியது. மனது மயங்கும் மாலைப் பொழுது. தீடீரென பிரகாசம். கடற்கரை மணலை கிழித்துக் கொண்டு மோட்டார் சைக்கிள்கள் அவரைக் கடந்து அட்டகாசமாக வரிசையாக வந்து நின்றன. சிதறிய மண்பட்டு கண்களை கசக்கிக் கொண்டான்.

"மச்சான் முதலில் குளிப்பம்". ஒருவன் உற்சாகமாக கூறினான். "வேண்டாம்! வேண்டாம்!" அடுத்தவன் எச்சரித்தான் "இது சிக்கலான இடம்" "ஒவ்வொரு வருடமும் முகத்துவாரம் ஓடினால் பலி எடுக்கிற இடமும் இதுதான்.

குளிச்சித்து எடுத்தால்தான் மச்சான் நல்லா இருக்கும். ஒருவன் ஆடையைக் களைந்து விட்டு கடற்கரை நோக்கி சுதந்திரமாக அன்னிய தேசத்தவன்போல் நடந்தான். மற்றவன் தடுத்தான்.

"டேய் சனிமாற்றம் உன்னிலதான் நிக்கப் போகுது! என்னவும் நடந்தா நாங்கதான் பிறகு கைகட்டி நிற்க வேண்டிவரும். சொன்னா கேளு கரையிலேயே சந்தோஷமா இருந்து சொர்க்கத்திற்குப் போவம்" மற்றவன் அவனை இழுத்து வந்து இருத்தினான். கடற்கரைக்கு அருகில் சென்று அவர்கள் அமர்ந்தார்கள்.

ஏன்னடா புதுசா சொர்க்க கதையெல்லாம் கதைக்கிறா? வேற ஏற்பாடுகளும் இருக்குதோ? இருந்த படியே அவன் கேட்டான்.

உனக்கு புத்தி இல்லையாடா? ஹோட்டல் றூமில வாடகைக்கு விரும்பி வாற பெட்டையளோட இருக்கிறமாதிரி இஞ்சயும் இருக்கலாம் எண்ட நினைப்புதானே உனக்கு.! அவன் கடிந்து கொண்டான்.

"மச்சான் வியர் அடிச்சி அடிச்சி அலுத்துப் போயிற்று."'"நாம அரசாங்கத்துக்கு துரோகம் செய்யக் கூடாது! அரசாங்கம் மாணவ சமூகம் அனுபவிக்கட்டும் என்றுதானே வியருக்கு விலையை குறைச்சி வைச்சிருக்கு. அதால இண்டைக்கு ஒண்டுக்கு இரண்டு அடிப்பம் என்ன?" அவன் அங்கலாய்த்தான்.

இல்ல மச்சான் இந்த குளிசையை அடிச்சுப்பார். சொர்க்கம் தெரியுமாம். பக்கத்து நகர நண்பன் மூலமாக எனக்கு கிடைச்சது.!

ஓசியா? இல்லடா! பத்து பச்சைத்தாள். உன்னிட்ட அவ்வளவு காசு எப்படியடா கிடைச்சது?

தங்கச்சிர தங்கச் சங்கிலியை அவள் நித்திரையில இருக்கக்குள்ள அபேஸ் பண்ணிற்றன்.

கடவுளே! பிடிபட்டா?அவள் ஒன்டிலையும் கவனம் இல்ல எண்டு வீட்டாக்களுக்கு தெரியும். எங்கையும் வழக்கம்போல் தொலைச்சிருப்பாள் எண்டு தேடிப்பாத்திற்று பேசாம விட்டுடுவாங்க!. நானும் அவளோடு சேர்ந்து அவள்ர ஸ்கூலுக்கெல்லாம் போய் தேடிப்பார்த்து வந்ததால அவங்களுக்கு எந்தச் சந்தேகமும் என்னில வராது..

நீ பெரிய ஆள்தான்! அதாலதானே எனக்கு பின்னால ரியூசன் கிளாஸ் எல்லாம் கட்பண்ணிற்று வந்து நிக்கிறீங்க. அதுதான் இண்டைக்கு ஸ்பெஸல் பாட்டி ஒழுங்கு பண்ணியிருக்கன்.

என்னெடா திடீரெண்டு ஸ்பெஸல் பாட்டி? அதுதான் இரண்டு நாளில நம்மட றிசல்ற் வருகுதாம். வீட்டாக்களுக்கு நாம தேற மாட்டம் எண்டு நல்லா தெரியும் அதாலதானே வீட்டில குந்த விடாம அடுத்த பரீட்சை எழுத வகுப்புகளுக்கு துரத்திறாங்க.

அதால றிசல்ற் வந்த ஒரு கிழமைக்காவது நாமே நமக்கு வீட்டுக்காவல் போட்டு நடிக்க வேணும். வெளியே வரக் கூடாது.

மச்சான் நிலவு மேல வாறதுக்குள்ள ரெண்டு ஏத்திற்று உள் றோட்டால ஹோட்லுக்குப் போவம்! பத்து மணிக்கு வகுப்பு முடியிற ரைமுக்கு வீட்டுக்கு போயிர வேணும். இண்டைக்கு உங்களுக்கு மறக்க முடியாத நாளாக இருக்கும்.

இந்தாங்க ஆளுக்கொரு குளிசையை எடுங்க. நம்மட வழக்கமான ஹோட்டல் றூமுக்குப் போவம். எல்லா ஏற்பாடுகளும் செய்திற்றுதான் உங்களை கூட்டிற்று வந்தநான்.

அவன் சொல்லி முடிப்பதற்குள் அவனை அலாக்காகத் தூக்கி தங்கள் மகிழ்ச்சியை மற்றவர்கள் இணைந்து வெளிப்படுத்தினார்கள்.

மகிழ்ச்சிப் பிரவாகத்தில் சினிமாப் பாடல்களை ஆபாச அசிங்கமான வார்த்தைகளைச் சேர்த்து அச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களையே அழுத்தி. அழுத்திப் பாடி ஆர்ப்பரித்தார்கள். ஆனந்தத்தின் எல்லையைத் தொட்டவர்களாக ஆடிப்பாடினார்கள்.

மச்சான் நேரமாகுது இதோட போய் மற்ற அலுவலும் பார்க்க வேணும். அத முடிச்சிற்று நேரத்துக்கு வீட்டுக்கும் போக வேணும் வெளிக்கிடுங்க. குழுவுக்கு தலைமை வகித்தவன் அவர்களை துரிதப்படுத்தினான்.

நிலா மேலெழுந்து கொண்டிருந்தது. சொந்தப் பிரச்சனைகளில் இருந்து விடுபட்டு சமூகம் எப்படிச் சீரழிந்து கொண்டிருக்கின்றது என்பதை ஜீரணிக்க முடியாமல் தவித்தான் அவன்.

தமிழ் சமூகம் இப்போதான் கெடுபிடிகளில் இருந்து விடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையிலே இந்த இளைஞர் சமூகம் தடம்மாறிச் செல்வதை நேரடியாகத் தரிசித்ததின் தாக்கம் அவனை தடுமாற வைத்துக் கொண்டிருந்தது.

அவசர பொலிசுக்கு அழைப்பை ஏற்படுத்தி இவர்களை ஒப்படைத்தால் என்ன? அவர்களுடைய எதிர்காலம் முற்றுமுழுதாகப் பாழாகிவிடும். இப்போது நேரடியாகச் சென்று புத்தி சொன்னால் கூட பாதகமான விளைவுகளே ஏற்படும். ஏன் தன்னை தாக்கவும் கூடும்.

இதைத் தடுப்பதெப்படி?. அவன் தீவிரமாக சிந்தித்தான். ஒரு முடிவுக்கு வந்தான். நிலவை மேகம் மறைத்தது. அந்த அவகாசத்தை பயன்படுத்தினான். மோட்டார் சைக்கிள்களை நெருங்கிச் சென்று பார்த்தான். திறப்புக்கள் அப்படியே இருந்தது. அவன் எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. அவற்றை அப்படியே எடுத்துக் கொண்டு வேகமாக வீடு வந்து சேர்ந்தான்.


அவன் பிரசவ வலி ஓய்வுக்கு வந்தது. கண்முன்னே கண்டதும் கேட்டதும் அவன் மனத்திரையில் படமாக ஓடிக்கொண்டிருந்தது. அதைக் கூத்தாக ஒப்புவித்து சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதே தனது முதல் படைப்பு என்று தீர்மானித்தான். அவன் மனச் சுமைகள் தானாக இறங்குவதை அவன் உணர்ந்தான்.

**- வள்ளிமைந்தன்**

# வாழ்க்கைத் தத்துவங்கள்

05 NOV 2018

| | | |
|---|---|---|
| அழிவை தருவது | - | **ஆணவம்** |
| ஆபத்தை தருவது | - | **கோபம்** |
| இருக்க வேண்டியது | - | **பணிவு** |
| இருக்க கூடாதது | - | **பொறாமை** |
| உயர்வுக்கு வழி | - | **உழைப்பு** |
| கண்கண்ட தெய்வம் | - | **பெற்றோர்** |
| செய்யக்கூடாதது | - | **துரோகம்** |
| நம்பக்கூடாதது | - | **வதந்தி** |
| நழுவ விடக்கூடாதது | - | **வாய்ப்பு** |
| நம்முடன் வருவது | - | **புண்ணியம்** |
| பிரியக்கூடாதது | - | **நட்பு** |
| மிகமிக நல்லநாள் | - | **இன்று** |
| மிகப்பெரிய தேவை | - | **அன்பு** |
| மிகக்கொடிய நோய் | - | **பேராசை** |
| மிகவும் சுலபமானது | - | **குற்றம் காணல்** |
| மிகப்பெரிய வெகுமதி | - | **மன்னிப்பு** |
| விலக்க வேண்டியது | - | **விவாதம்** |
| வந்தால் போகாதது | - | **பழி** |
| போனால் வராதது | - | **மானம்** |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால வாழ்வின் பிரதிபலிப்பாக

# புதியதொரு வீடு நாடகம்

## அனுபவப் பகிர்வு



மட்டக்களப்புப் பாடசாலைகளில் நாடகமும் அரங்கியலும் ஒரு பாடமாக க.பொ.த. உயர் தரத்துக்கு கற்பிக்கத் தொடங்கி 20 வருடங்களுக்கு மேலாகி விட்டது. இந்த இருபது வருட காலத்தில் மட்டக்களப்பு அதன் அரங்கப் பரிமானத்தில் எத்தகைய பெறுமானத்தை ஈட்டியுள்ளது என்பது விவாதிக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கின்றது. இந்த விவாதம் தனியே பாடசாலை மாணவர்களை மையப்படுத்தியதாக அன்றி நாடகம் கற்பிக்கும் ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், நாடகப் பாடத்தினூடாக மேற்கிளம்பிய நாடகக்கலைஞர்கள் மற்றும் சுயமான நாடகக் கலைஞர்கள் என்று நோக்கப்படுதல் வேண்டும்.

ஆரம்பத்தில் மட்டக்களப்பில் நவீன நாடகங் களை அளிக்கை செய்து கொண்டிருந்தவர்களில் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களும் பாலசுகுமார் அவர்களும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்களாவர். பாலசுகுமார் அவர்களின் இடப்பெயர்வு மட்டக்களப்பில் நவீன நாடகத்தில் ஒரு தொய்வை ஏற்படுத்திற்று என்பதை மறுக்க முடியாது.

மட்டக்களப்பின் இன்றைய நாடகக்காரர்கள் எனச் சொல்லிக் கொள்பவர்களை மூன்று வகையாகப் பிரிக்க முடியும்.

பாரம்பரியம் பேணுகையினை அடிப்படையாகக் கொண்டவர்கள், நவீன நாடகம் என்பது காலனித்துவத்தின் பேறு அதற்கு எதிரானதாக பாரம்பரியத்தினை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நோக்கோடு மட்டக்களப்பின் பாரம்பரிய அரங்க வடிவங்களை அவ்வாறே அளிக்கை செய்பவர்கள்.

மட்டக்களப்பின் பாரம்பரிய கூத்து மரபினையும் நவீன நாடக மரபுகளையும் இணைத்து புதிய போக்குகளை உருவாக்குபவர்கள்.

ஐரோப்பிய, ஆசிய நாடகங்களின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு நவீன நாடகங்களை மட்டும் அரங்கேற்றுபவர்கள்

இந்த மூன்று வகைப்பாடுகளில் இரண்டாவது எமது மரபினையும் நவீனத்துவத்தையும் இணைத்து எமது அடையாளத்துடன் உலகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கொள்வதனால் இது மற்ற இரண்டு வகைகளையும் விடச் சிறந்தது எனக் கூறலாம்.

ஈழத்து நாடகக்காரர்களில் மூத்த கலைஞரும் மட்டக்களப்பின் பொக்கிசமுமான பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் இரண்டாவது வகைப்பாட்டுக் குரியவராக இருக்கின்றார். தனது ஓய்வுக்குப் பின்னும் வயது முதிர்ந்த இளைஞனாக நின்று தனது அரங்க ஆய்வுகூடத்தினூடாக கற்பனைகளையும் புதுமைக ளையும் மரபையும் நவீனத்தையும் இணைத்து அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறார். பல்கலைக் கழகத்தில் இருந்து நாடகங்களைத் தயாரித்து நெறிப்படுத்தியதை விட இப்போது அதிகமாக படைப்பாக்கத்தில் ஈடுபடுப வராகவும் இருப்பது அவருடைய பலமாகும்.

அண்மையில் அவர் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் அரங்கேற்றிய நாடகம் "புதியதொரு வீடு" ஆகும் பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் 1991ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கு வந்து 1993ல் கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்களைக் கொண்டு அவர் நெறிப்படுத்திய முதலாவது நாடகம் 'புதியதொரு வீடு' ஆகும். அப்போது இரண்டாம் வருடத்தில் கல்வி பயின்று கொண்டிருந்த எனக்கு இந் நாடகத்தில் ஒரு கோரஸ்சாக நடிக்கும் வாய்ப்பினை பேராசிரியர் வழங்கிருந்தார்.

மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் நாங்கள் இந்த நாடகத்தினை மேடையேற்றிய போதிலும் ஒரு ரசிகனாக இருந்து நாடகத்தை ரசிப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. ஒரு நடிகனாக இருந்து கொண்டு நாடகத்தில் பங்கேற்று ரசிப்பதும் அதே நாடகத்தை ஒரு சுவைஞனாக இருந்து நாடகத்தைச் சுவைப்பதிலும் நிறைய வேறுபாடுகளுண்டு. நடிகன் பாத்திர நிலையிலும் அதன் உடல்மொழி வெளிப்பாட்டி லும் தன்னை வெளிப்படுத்துவதிலும் அந்த வெளிப் பாட்டினூடாக ரசிகர்கள் பெற்ற மகிழ்ச்சியைக் கண்டும் மகிழ்வடைகிறான். ஆனால் சுவைஞன் நடிகனால் வெளிப்படுத்தப்படும் பாத்திர நிலைகள், உடல் மொழிகள் என்பவற்றை ரசித்தும் தனது வாழ்வனுபவத்துக்குள்ளால் அவற்றை உள்வாங்கியும் மகிழ்வடைகிறான். வாழ்வனுபவங்கள் மாற மாற கலைப்படைப்பின் ரசனைத் தன்மையும் அதன் பொருள்கொள்ளலும் ஆளுக்காள் வேறுபட்டதாகக் காணப்படும். இதே போன்று ஒரே நாடகம் வேறுபட்ட காலச்சூழலில் மேடையேற்றப்படும் போதும் அந்தக் காலச் சூழலுக்கேற்ற ரசனை அனுபவத்தினையும் பொருள்கொள்ளலையும் வழங்கும். புதியதொரு வீடு நாடகத்தில் இந்த மூன்று அனுபவங் களைப் பெறக்கூடியதாக இருந்தது. அதாவது ஒன்று நடிகனாக நடித்து மகிழ்வுற்றது. இரண்டு சுவைஞனாக இருந்து பார்த்துக் கேட்டுச் சுவைத்தது. மூன்று இன்றைய காலத்துக் கேற்ற அதன் பொருள்கொள்ளலும் அதனால் உண்டான அனுபவப் பேறு என்பவைகளாகும்.

நாங்கள் நடித்தபோது 'புதியதொரு வீடு' என்பதை வெறும் பௌதீகப் பொருளாகவே விளங்கிக் கொண்டேன். அதாவது கடலுக்குச் செல்லும் மாயன் காணாமல் போய் எவ்வாறோ தப்பிப் பிழைத்து நீண்ட நாட்களுக்குப் பின்னர் தனது மனைவி, மகன், வீடு என்பவற்றைக் காண ஆவலுடன் வருகிறான் அவனுடைய மனைவி தனது தம்பி மாசிலனை மணம் முடித்து ஒரு கைக்குழந்தையுடன் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்று பின் அதிலிருந்து மீண்டு தனது மகனையும் அழைத்துக் கொண்டு அவ்வூரில் வேறொரு இடத்தில் வசிக்கிறான். இந்தப் புதிதாக வசிப்பதை புதியதொரு வீடாகப் புரிந்து கொண்டேன். ஆனால் இன்று எனக்கு வீடு என்பது ஒரு பௌதீகப் பொருளில்லை. அதுதான் தமிழ்ப் பண்பாட்டின் மையமாகும். எமது உரையாடலில் "வீட்ட போறன்", "வீட்ல இருக்கன்", "வீட்ட வாங்கோ" என்பனவெல்லாம் கல்லாலும் மண்ணாலும் மரத்தாலும் கட்டப்பட்ட ஒரு கட்டிடம் குறித்த இடமல்ல. அது எமது ஒழுக்கத்தினதும் பண்பாட்டினதும் மையம். பிள்ளைகள் பெற்றோருடன் எவ்வாறு பழகவேண்டும், பெற்றோர் எவ்வாறு பிள்ளைகளுடன் பழக வேண்டும் பிள்ளைகளும் பெற்றோரும் உறவினர்களுடன் எவ்வாறு பழக வேண்டும், வீட்டுக்கு வரும் விருந்தினர்களுடன் எவ்வாறு பழக வேண்டும் என்கின்ற அடிப்படை விடயங்களைக் கற்றுத் தந்து பிரயோகித்து வாழ்கின்ற இடமே வீடு ஆகும். இவ்வாறு காலம்காலமாக ஒழுக்கத்தையும் நடத்தை முறைகளையும் கற்றுத்தந்த வீட்டின் கட்டமைப்பினது ஒழுக்கம் மாறுவதை தமிழ் பண்பாடு அவ்வளவு இலகுவில் ஜீரணித்துக்கொள்ளாது. ஆனால் சமூக நிலமைகள் இதை மாற்றித்தான் ஆகவேண்டும் என்று வரும் போது அதற்கும் சமூகம் தன்னை தயார்படுத்திக் கொண்டு மாற்றுவதைக் காட்டுவதே புதியதொரு வீடு ஆகும் என்பது இன்றைய எனது புரிதல் ஆகும்.

நாடக ஆசிரியர் மகாகவி, ஒரு மீனவக் குடும்பத் தில் நடந்த ஒரு சம்பவத்தை எடுத்துக்காட்டுவதினூடாக மனித குலத்துக்கு காலத்துக் காலம் நெருக்கடிகள் வரும்போதெல்லாம் மனித குலம் அதனை எவ்வாறு முகம் கொள்ள வேண்டும் என்பதை உலகப் பொதுமை யாக்கியுள்ளார். இது ஒரு கலைஞனுக்கிருக்கின்ற தூர நோக்கையும் மனிதார்த்த பண்பையும் மானிட நேசிப்பையும் காட்டுவதாக இருக்கின்றது.

ஒரு கலைப் படைப்பென்பது தான் கூறவந்த விடயத்துக்கும் காலச்சூழலுக்கும் அப்பால் சென்று ஏககாலத்திற்குமான விடயமாக மனிதகுலம் நம்பிக்கையிழந்து நாதியற்று நிற்கும்போது நம்பிக்கை கொடுத்து கைதூக்கி விடும் ஒன்றாக இருக்க வேண்டும். 'புதியதொரு வீடு' அவ்வாறான ஒரு நம்பிக்கையை இன்று எமது தமிழ்ச் சமூகத்துக்கு வழங்குகின்றது. யுத்தம் ஆயிரக்கணக்கான கணவன்மார்களையும் மனைவிமார்களையும் தந்தைகளையும் பிள்ளைகளையும் காணாமல் ஆக்கி விட்டது. மனைவிமார் எப்போது தங்களுடைய கணவன்மார் திரும்பி வருவார்கள் என்று எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கும் மயிலிகளாகத்தான்


Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறார்கள். இது ஒரு இக்கட்டான தடம்மாறும் காலகட்டமாகத்தான் இருக்கிறது. இந்த இக்கட்டான காலகட்டத்திலிருந்து நம்பிக்கை கொள்ளச் செய்வதற்கான கருவியாக பேராசிரியர் சி. மௌனகுரு 'புதியதொரு வீடு' நாடகத்தை எடுத்துக்கொள்கிறார்.

இன்றைய தமிழ்ச் சமூகத்தின் ஆயிரக்கணக்கான பெண்கள் பொட்டையும் அழிக்காது தாலியையும் கழட்டாது தங்கள் கணவன்மார் பயன்படுத்திய சில பொருட்களை பத்திரமாகப் பேணுவதுடன் அப்பொருட்களை அவர் நினைவாகப் பார்ப்பதும் அவற்றுடன் உரையாடுவதும் மீண்டும் வரும் போது அவற்றை அவரிடம் மீண்டும் ஒப்படைத்து மனம் ஆறுதல் அடைய வேண்டும் என்ற வாஞ்சையுடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த வாழ்தலை புதியதொரு வீட்டில் மயிலி அரங்கில் வெளிப்படுத்துகின்றாள்.

மாயனின் இழப்பும் அது அவளிடத்தில் ஏற்படுத்தும் வலியும் எவ்வித டாம்பீகங்களும் இன்றி மிக இயல்பாகவும் வலுவாகவும் வெளிப்படுத்தப்படுகிறது. அவள் ஊரவர்களின் வற்புறுத்தலில் மாயனுடைய தம்பியை திருமணம் முடித்து ஒரு பிள்ளையைப் பெற்றிருந்தாலும் மாயன் மேலுள்ள அன்பும் பாசமும் அவள் நினைவுகளில் குறைவில்லாது ஒரு ஏக்கமாகவே இருந்து வந்திருக்கின்றது. மாயன் திரும்பி வந்து குடும்பநிலைமையினை உணர்ந்து மகனை அழைத்துக் கொண்டு வெளியேறும் தறுவாயில் மயிலி, மாயன் நினைவாக வீட்டுக்குள் இத்தனை நாளாக இருந்த மாயனுடைய தூண்டிலை எடுத்துக் கொடுத்து அவனை வழியனுப்பி வைப்பது அவளுடைய இற்றை நாள் ஏக்கத்துக்கும் அன்புக்கும் அடையாளமாக வெளிப்படுகின்றது. இங்கு பார்வையாளர் பார்ப்பது அவளுடைய மறுமணத்தையல்ல அவளுடைய அன்பையேயாகும். வெறும் உடல்களுக்கப்பால் குடும்ப கட்டுமானத்தையும் அதற்குள்ளிருக்கும் உயிரோட்டமான உறவையும் அன்பையும் இதனூடாக நாடக ஆசிரியர் கொண்டுவருகிறார். இதனை நடிகர்கள் தங்கள் உடல் மொழியால் அற்புதமாக வெளிப்படுத்தியுள்ளார்கள்.

மயிலி, மாயன், மாசிலன், கண்ணாத்தை, மறைக்காடர், சிறுவன் என்ற பாத்திரங்கள் வெறுமனே நாடகப் பாத்திரங்களாக மட்டுமன்றி அவை சமூக வகைமாதிரிகளாகவே இருந்தார்கள் எனக் கூறலாம். அந்தளவிற்கு அந்த நாடகப் பிரதி அவர்களை உருவாக்கி யிருக்கின்றது. நடிகர்கள் பாடசாலை மாணவர்களாக இருந்தபோதும் பக்குவப்பட்ட நடிகர்கள் போன்று அப்பாத்திரங்களை உணர்ந்து மிக நன்றாக நடித்துள்ளார்கள்.

மாயன் கடலில் அள்ளுண்டு போகும் காட்சியில் மாயனின் உடல் மொழியும் அசைவும் முந்தைய புதியதொரு வீடு நாடக நடிப்பிலிருந்து வேறுபட்டதாகும். இதில் கடலின் கோரமும் அதில் அள்ளுண்டு போராடித் தப்பமுயலும் மாயனின் உடலும் கலைத்துவமான காட்சித் துண்டங்களாகும்.


பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் தனது நாடகங்களில் கோரஸ்களை பயன்படுத்தும் விதம் மிக அலாதியானதாக இருக்கும். கோரஸ் நடிகர்கள் நாடக மேடை எனும் ஓவியச் சட்டத்தை உயிரோட்டமாக நிரப்பும் வர்ணங்களாக, கோடுகளாக, உருக்களாகப் பயன்படுவர். 'இராவணேசன்,' 'சார்வாகன்', 'புதியதொரு வீடு' என்பவற்றில் இந்த உயிர் ஓவியப் படைப்புக்களைப் பார்க்கமுடியும். கோரஸ்சாக நடிப்பவர்களின் உடை, ஒப்பனை, அவர்கள் பயன்படுத்தும் பொருட்கள் என்பவை கலைத்துவமாக இருக்க வேண்டும் என்பதில் மிகக் கவனமெடுத்து அவற்றை கைதேர்ந்த கலைஞர்களைக் கொண்டு வடிவமைத்து எடுப்பதிலும் கோரஸ்களை தக்கவாறு பயன்படுத்தி மேடையில் உயிர் ஓவியம் வரைவதிலும் பேராசிரியர் மௌனகுரு எப்போதும் தனித்துவமானவரேயாவார்.

இதுபோன்றே பாடல்கள், இசை என்பவற்றிலும் அவர் எடுத்துக்கொள்ளும் கரிசனை எம்மை திகைக்க வைப்பதாகும். புதியதொரு வீடு நாடகத்தின் உணர்வு நிலை பெருமளவுக்கு அதன் இசையினாலே வெளிப்படுத்தப்படும். அதற்காக அவர் எப்போதும், முன்னாள் விரிவுரையாளர் வயலின் வித்துவி சரஸ்வதி சுப்பிரமணியம் அவர்களை கூடவே கொண்டுதிரிவார். பேராசிரியரின் உள்ளம் அறிந்து நாடகத்தின் உணர்வை உணர்ந்து அரங்கை வயலின் இசையால் நிரப்புவதில் சரஸ்வதி சுப்பிரமணியம் அவர்களுக்கு இங்கு எவரும் ஈடாக முடியாது.

சிரேஸ்ட விரிவுரையாளர் மோகனதாசன் அவர்கள் பேராசிரியரின் மற்றொரு பலமாகும். மோகனதாச னுடைய கம்பீரமான குரல் பொருத்தமான இடங்களில் கணீரென்று வெளிப்பட்டு அரங்கை நிசப்தமாக்கி விடும். அது மட்டுமன்றி அவருடைய தோல்வாதிய இசையாலும் அரங்கை ஆட்கொண்டுவிடுபவர்.

இவ்வாறு நாடகக் கதையாலும் அதன் நடிப்பாலும் இசையாலும் எம்மை உணர்வு மையத்துள் வைப்பதும் பின்பு அதிலிருந்து எம்மை விடுவிப்பதற்கும் அவருக்கு உதவியாக இருப்பது பிரஸ்ட்டினுடைய அந்நியமாதல் கோட்பாடாகும். இதை வெறும் நாடகக் கொள்கையாக படித்த போது விளங்காத பல விடயங்கள் 'புதியதொரு வீடு' நாடகத்தில் அனுபவரீதியாக உணரும்போதுதான் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. நாம் இந் நாடகத்தில் சமூகத்தின் நிலையினை அதன் பிரச்சினைகளை அகவயரீதியாக நின்று உணர்ந்து கொள்கின்றோம். இந்த உணர்வு நிலை எம்மை கலங்கடிக்கின்றது, காயப்படுத்துகின்றது, கையாலாகாத்தன்மையை ஏற்படுத்துகின்றது. ஆனால் பிரச்சினைகளை அனுபவித்து காயப்பட்டு கையாலாகாத் தன்மையுடன் இருப்பதில் எந்தப் பிரயோசனமும் கிடையாது. அவ்வாறென்றால் அதனை புறவயரீதியாக நின்று நிதானித்து விளங்கிக் கொள்ளவும் வேண்டும். எப்போதெல்லாம் பிரச்சினை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களை உணர்வுநிலைப்படுத்தாமல் அறிவுநிலைப்படுத்தி விளங்கிக் கொள்கிறோமோ அப்போதெல்லாம் பிரச்சினைகளுக்கான தீர்வை நாம் அடைந்து விடுகிறோம். இந்த நாடகத்தின் பார்வையாளனை அகவய நிலையிலிருந்து புறவயநிலைக்கு மாறுவதற்கு நெறியாளர் கைக்கொள்ளும் உத்திகளே அதன் பாடல்களும் ஆடல்களுமாகும். பொருள் நிறைந்த அதன் பாடல்கள் உலகின் யதார்த்தத்தை எமக்கு அறிவுநிலைப்படுத்துவதாக அமைகின்றன. இவ்வாறு அறிவுநிலைப்படுத்துவதனால் நாம் சமூகத்தின் பிரச்சினைகளுக்கான தீர்வை எமது சமூக வரையறைகளைக் கடந்து அடைந்து விடுகின்றோம். இதனால் நாடகம் வெறும் மகிழ்வளிப்பு அல்லது கொண்டாட்டம் என்பதிலிருந்து விலகி சமூகப்பெறுமானம் உள்ளதாக ஆகிவிடுகின்றது. இந்தப் பணியை 'புதியதொரு வீடு' நாடகம் செய்திருக்கின்றது.


பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் 'இராவணேசன்', 'புதியதொரு வீடு', எனும் இரண்டையும் திரும்பத்திரும்ப தயாரித்து அளிக்கை செய்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இது ஒரு படைப்பு மேதை தனது படைப்பில் உச்சத்தைத் தேடிக்கொண்டிருப்பதையே காட்டுகின்றது. மிகப் பிரசித்தி பெற்ற ஓவியர்களும் சிற்பிகளும் ஒரே தலைப்பையும் கருப்பொருளையும் பலதடவை படைத்துப் படைத்து தாங்களும் அனுபவித்து எமக்கும் அந்த அனுபவத்தைத் தந்திருக்கிறார்கள். இதைப் போன்று பேராசிரியர் நாடகத்தில் இதைச் செய்து கொண்டிருக்கிறார். அவரும் அனுபவித்து எம்மையும் அனுபவிக்க வைக்கிறார். ஆனால் இதை விளங்காது நாடகக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டு வேடமிட்டுத் திரியும் படைப்பாற்றலற்ற நாடக மேதைகள் அவரிடம் புதிது புரிவதற்கு எதுவுமில்லை, அதனால் அரைத்த மாவையே அரைக்கிறார் என்றும், அவர் அடிப்படையில் நாடககாரர் அல்ல, அவர் தமிழ் பட்டதாரி. நாங்கள்தான் நாடகப்பட்டதாரிகள், நாடக மேதைகள் எனவும் கூறிக் கொள்பவர்களிடமிருந்து மட்டக்களப்பு எதுவுமே பெறவில்லை என்பது ஒரு கசப்பான உண்மையாகும். பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் மாக்ஸிச அணுகுமுறை கொண்டவராக இருப்பதனால் பாரம்பரியத்தினையும் நவீனத்தையும் எவ்வாறு விளங்கிக் கொள்வது அவற்றை எவ்வாறு பிரயோகிப்பது என்பது தொடர்பான விஞ்ஞான ரீதியான நடைமுறையினைக் கொண்டிருக்கின்றார். அவர் பாரம்பரியத்தை இன்றைய உலகுக்கு ஏற்ற வண்ணமும் நவீனத்தை இன்றைய பிரச்சினைகளை பேசுவதற்குமான ஒன்றாகவுமே பார்க்கின்றார். இன்னொரு வகையில் கூறுவதாயின் இன்றைய பிரச்சினைகளை எமது மொழியினூடாக எவ்வாறு வெளிப்படுத்துவது என்பதில் தெளிவுடையவராக இருக்கின்றார். இவரின் இவ்வாறான அணுகுமுறையிலிருந்துதான் ஈழத்து நாடக அரங்கு நிறைய கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. நாடகம் அரங்கியலை முதல் பட்டமாகக் கொண்ட எமது நாடகக்காரர்கள் இப்பணியை செய்வதற்கு முன்வர வேண்டும். அவ்வாறு செய்யப்படுமானால் எதிர்காலத்தில் மட்டக்களப்பில் காத்திரமான நாடகக்காரர்கள் உருவாக வாய்ப்புள்ளது எனலாம்.

**சு. சிவரெத்தினம்**
களுதாவளை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழே தர்மமே தாயே

**பைந்தமிழ்ப்பாமணி**
செல்லையா வாமதேவன்




பூலோக மொழிகளில் எல்லாம்
பொன்னாய் ஒளிருமென் தமிழே!
பாலோடு தேன்கலந் தாற்போல
பாகாய்க் குளிருமென் மொழியே!
நாலோடு இரண்டுமே சேர்ந்து
நன்றாய் அறங்காக்கும் அழகே!
நூலோடு கலைகளிற் சிறந்து
நுண்மதி திறங்காக்கும் அமுதே!

உறவுகள் பண்பாடும் உன்னாலே
உணர்வுகள் நன்றாகு முன்னாலே
அறஞ்செய விரும்புவ துன்னாலே
ஆறிடும் சினமதும் உன்னாலே
புறஞ்சொலக் கூசுவ துன்னாலே
பூமி திருந்துவ துன்னாலே
ஒருவனைப் பற்றி ஓரகத்திருந்து
ஒழுக்கம் பேணுவ துன்னாலே

பொன்மொழி முன்மொழி முதலே!
பொறுத்தார் அரசாள்வார் திருவே!
உன்விழி கொண்டொளி கண்டேன்
ஒப்புர வொழுகுதல் கொண்டேன்
கொன்று தின்னாமை நோன்பென்று
கோட்செவிக் குறளை நெருப்பென்று
அன்னையும் பிதாவும் தெய்வமென்று
அறமே மொழியாய் ஆகினையே!


சீருந்தளையும் அடியுந் தொடையும்
சிறக்கும் இலக்கண வரம்புடனே
பாரும்விண்ணும் தொழுதே புகழும்
பாங்காம் இலக்கியப் பரப்புடனே
யாரும்வியக்கும் யாப்பும் அணிநடை
யாவும் இலங்கும் மெருகுடனே
போரும்பகையும் தவிர்க்கும் அறங்கள்
பொங்கும் என்னருஞ் செந்தமிழே!

ஆதிசிவன் தந்த அற்புதமே!
ஆய கலைகளின் சொற்பதமே!
நீதிநெறி நிறைபொது மறையும்
நிகரே யில்லாத் தமிழ்மறையும்
ஓதிச்சிறக்க ஒப்பிலா இலக்கியம்
ஓங்கப் புகழ்நிறை ஒண்டமிழே!
மேதினி வியக்க மேன்மைநிறைந்து
மிசையுயர் செம்மொழி வாழியவே!

தாயாகித் தர்மமே மொழியாய்த்
தாலாட்டுப் பாடிடும் அறிவே!
காயாகிக் கனியாகி உள்ளம்
களித்திடக் கூடிடும் உயிரே!
சேயாகி உன்மடி தன்னில்
செகம்போற்றும் வள்ளுவர் போல
நாயேனும் தவழ்ந்திடும் பேறு
நலம்பெற்றேன் அருந்தவப் பேறே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியமும் வர்ணங்களும்



கலைகளின் தோற்றம் கால வரையறை கடந்த ஒன்றாகும். அதன் தோற்றம் மறைபொருளாகவே காணப்படுகின்றது. புராதன மனிதனின் வாழ்க்கையோடு ஒன்றியதாகவே கலைகள் வளர்ச்சியடைந்துள்ளது. கலை வாழ்க்கையில் இரு பிரச்சினைகளை கலை தீர்த்து வைக்கிறது. அப்பயம் சாவைப் பற்றியதும், வாழ்க்கை பற்றியதுமாக அமைகின்றது.

மனிதன் தன் கண் முன்னாலே அவனுடன் வாழும் மனிதர்களும் பிற உயிரினங்களும் உடல் ரீதியாக அழிவதைப் பார்க்கிறான். மனிதன் தனது உடலும் இவ்வாறே அழிந்துபோவதைத் தடுக்க முடியாது என்று உணர்ந்த மனிதன் தன் உணர்வை வாழ்வின் அனுபவத்தை யெல்லாம் பதிவு செய்ய முற்படுகிறான் இதுவே கலைகளாக பரிணமித்தது.

இப்போதும் கலை என்றால் என்ன? என்னும் கேள்விக்கு சரியான திட்டமிட்ட முடிவான ஒரு பதிலை கூறுவது சிரமமாகும். ஒவ்வொருவரும் தத்தமது அனுபவம், அறிவு, தத்துவச்சார்பு, சூழ்நிலை என்பனவற்றுக்கு ஏற்றவாறே விடையளிக்க முயல்வர். கலை என்றால் என்ன என்று சடுதியாக கூறாவிடினும் இன்று நாம் கலைகள் எனச் சிலவற்றைச் சுட்டிக்காட்டி கூற இயலும். ஓவியம், சிற்பம், நடனம்,நாடகம், சங்கீதம், கட்டிடம் என்பவற்றை எவ்வித தயக்கமின்றி பலரும் கலைகள் என்று கூறிவிடுவார்கள்.

ஓவியம், இசை, நடனம் நாடகம், சிற்பம், இலக்கியம் என்பவை நுண்கலைகளாக் கொள்ளப்படுகின்றன. இவை கலைகள் பெது வரையறைக்குள் அடக்கப்பட்டாலும் சில தனித்துவமான சித்தரிக்கும் பண்புகளைக் கொண்டுள்ளன. அதனால் தான் இவை நுண் கலைகள் எனப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்சொன்ன இக்கலைகள் காலமாற்றத்திற் கேற்ப அந்தந்த காலங்களின் நியதிகள் வரையறைகளை உள்வாங்கிக் கொண்டுள்ளன. அதன் காரணமாக அவ்வவ் கலைகளுக்குரிய தனித்தன்மைகளோடு கலைகளுக்கே உரித்தான பொதுத் தன்மைகளையும் உள்வாங்கிக் கொண்டு வளர்ந்துள்ளன.

நுண்கலைகளில் மிகவும் முக்கியமான கலைகளில் ஓவியக்கலையும் ஒன்றாகும். ஓவியக்கலை என்பது சாதாரனமாக எழுந்தமானதாக தோற்றுவிக்கப்பட்ட கலை அல்ல. மாறாக இது மனித பரிணாம வளர்ச்சியின் தோற்றுவாயாக வளர்ச்சி கண்ட கலையாகும். இதன் ஆரம்பம் கலைக்கண் பார்வை கொண்டு வரையறுக்கப் படவில்லை.

பழங்கால ஆதிமனிதன் தன் தேவை மற்றும் நோக்கம் கருதியே ஓவியங்களை வரைந்துள்ளான். கற்கால மனிதன் நாகரிக வளர்ச்சி பெறுவதற்கு முன் குகைகளையே தன் வதிவிடமாகக்கொண்டு வாழ்ந்தான். அவன் குகைகளில் வாழ்ந்த காலத்தில் அவனுக்கு பேச, எழுத, படிக்கத் தெரியாதிருந்தது. அதனால் காடுகளில் உள்ள விலங்குகளைக் கொன்று வென்று உண்டு வாழ வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் இருந்தான். அவனது சிந்தனையின் ஆழத்தில் அவனைப் பாதித்த விலங்குகளின் உருவங்களைக் குகைகளில் ஓவியமாக தீட்டினான். இவற்றையே நாம் பிற்காலத்தில் 'குகை ஓவியங்கள்' என அழைக்கலாயினோம். இவ் ஓவியங்கள் மலைப்பகுதிகளிலும், இருள் சூழ்ந்த குகைகளிலும், பாறைகளிலும், யானைத்தந்தம், எலும்பு, கொம்புகள், மரங்கள், மிருகங்களின் தோல் என்பவற்றிலும் வரையப்பட்டன.

குகைவாசிகள் தங்களின் ஓவியத்திற்கான கருப்பொருட்களாக தாம் கண்ட விலங்குகளையும், அவற்றின் அங்க அசைவுகளையும், அவற்றை உணவின் பொருட்டு வேட்டை ஆடுவதை கருப்பொருளாகக் கொண்டு தாம் வசித்த குகைச் சுவர்ப்பரப்புகளின் முகடுகளில் வரைந்தான். ஆகாரத்தின் பொருட்டு வேட்டையாடிய எருது காட்டெருமை, மான், மரை, காட்டுப்பன்றி, பைசன் எருது போன்ற மிருகங்களையும் காண்டாமிருகம், குதிரை போன்ற மிருகங்களின் உருவங்களையும் சில இடங்களில் பல்வேறு இயங்கு நிலையில் உள்ள மிருகங்களின் அங்க அசைவுகளையும் ஓவியமாக்கினான். அத்தோடு வேட்டையாடும் காட்சி களையும் அதில் வேட்டையில் ஈடுபடும் மனிதர்களையும் ஓவியத்தின் கருக்களாக்கி அவற்றை வரைந்து வர்ணம் தீட்டினான்.

வர்ணம் தீட்டலுக்காக இயற்கையில் கிடைத்தவற் றைக்கொண்டு ஓவியங்களை வரைந்தான். அந்தவகையில் தாவர வண்ணம், மிருக வண்ணம் அத்தோடு கனியங் களில் இருந்து பெறப்பட்ட வண்ணங்கள் கொண்டு ஓவியங்கள் வரையப்பட்டது. இதில் மிருக இரத்தம், மிருகக் கொழுப்பு என்பன வேட்டையாடிய மிருகத்திலி ருந்து பெறப்பட்டதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்த வர்ணம் தீட்ட அக்கால மனிதன் பல்வேறு உத்திகளை கையாண்டான். கைவிரல்களால் வர்ணங்களைப் பூசியும் மிருக மயிர்களில் வர்ணங்களை தடவியும் வர்ணம் தீட்டப்பட்டது. அத்தோடு கொழுப்புக்களைக் கொண்டு வர்ணங்களை வீசியும் வர்ணங்களை வாயால் ஊதியும் தெளித்தும் வர்ணங்களை ஓவியத்தில் வெளிப்படுத்தினர். முதலில் கோட்டோவியம் என்ற நிலையில் இருந்த மனிதனுக்கு வர்ணம் பாவிக்கும் அளவுக்கு தேர்ச்சி காண வெகுகாலம் எடுத்ததாக வரலாற்று ஆய்வாளர்களின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

ஏன் கற்கால மனிதன் குகை ஓவியங்களை வரைந்தான் என்னும் கேள்விக்கு பல ஆய்வாளர்கள் பல தரப்பட்ட கருத்துக்களை முன்வைக்கின்றனர். சில ஆய்வாளர்கள் குகை ஓவியங்கள் அக்கால சடங்கு என மதிப்பீடு செய்கின்றனர். ஓவியங்களில் சுமார் 15 விலங்குகள் காயமடைந்த நிலையில் உள்ளன. இதற்கான காரணமாக பின் வரும் கருத்தை சொல்கின்றனர். வேட்டையாடுவது என்பது எளிதல்ல உயிரைக் கொடுத்துத்தான் வேட்டையாட வேண்டும். எனவே ஆடுவதற்கு முன்பு தனது வேட்டை வெற்றியடைய வேண்டுமென விரும்பி அக்கால பூசாரி செய்த மந்திர சடங்கு தான் இந்த ஓவியங்களென இவர்கள் சொல்கின்றனர். ஆனால் இந்த புரிதலில் சில பிரச்சினை உள்ளது. பல ஓவியங்களில் வேட்டையாடும் மிருகங்கள் உணவிற்கு வேட்டையாடும் மிருகங்கள் அல்ல.


சில ஆய்வாளர்கள் இந்த ஓவியங்கள் அடுத்த தலைமுறைக்கு பயிற்சி தருவதற்காக, வேட்டையாடுவது எப்படி என விளக்குவதற்காக வரையப்பட்டவை என கூறுகின்றனர். மேலும் சில ஆய்வாளர்கள் ஆதிவாசிகள் தமது வீட்டினை அழகுபடுத்துவதற்காக சுவரில் ஓவியம் தீட்டுவது வழமை அதுபோல அழகுபடுத்த தீட்டப் பட்டதே அக்கால குகைவாசிகளின் ஓவியங்கள் என கருதுகின்றனர். சில ஆய்வாளர்கள் தாம் வேட்டையாடிய மிருகங்களின் ஆத்மா சாந்தியின் பொருட்டு இவ்வாறான ஓவியங்களை வரைந்திருக்கலாம் எனவும் கூறுகின்றனர். அத்துடன் சில ஆய்வாளர்கள் இவ்வாறு பிராணிகளை வரைவதன் மூலம் மேலும் பல விலங்குகள் தமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வரைந்திருக்கலாம் என பல கருத்துக்களை ஆய்வாளர்கள் முன்வைத் துள்ளனர்.

வரலாற்றுக்கு முற்பட்டகால குகை ஓவியங்கள் காணப்படும் இடங்களாக ஸ்பானியாவின் அல்டாமீரா குகை, பிரான்ஸின் ஸ்கோ குகை என்பனவற்றை உதாரணங்களாக் கொள்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்டாமீரா பைசன்



எருது லஸ்கோ குதிரை

பல்லாயிரம் நூற்றாண்டுகள் குகைகளில் வாழ்ந்த மனிதன் தனது சமூக மாற்றத்திற்கு ஏற்ப அவன் தீட்டிய ஓவியங்களின் கருப்பொருட்களும் மாறின. காலப்போக்கில் மாறிய ஓவியங்களின் கருப்பொருள் சமூக மாற்றத்தின் சாட்சியாக அமைகிறது. ஆதிகால ஓவியங்களில் தனித்து வேட்டையாடுதல், கூட்டாக வேட்டையாடுதல் போன்று காணப்படுகின்றது. இடைக்கால ஓவியங்களில் விவசாயம், நாய், ஆடு, மாடு வளர்ப்பு முதலிய வளர்ப்பு மிருகங்களின் ஓவியங்கள் காணப்படுகின்றது. பிற்கால ஓவியங்களில் போர், குதிரை வீரன், மனிதனை மனிதன் கொல்வது போன்ற ஓவியங்களை காணமுடிகின்றது. இந்த ஓவியங்களிலிருந்து கற்கால மனித நாகரிகம் வளர்ந்த போக்கினை காட்டுகிறது.

இவ்வாறான கால ஓட்டத்தில் மொழி, இலக்கிய வளர்ச்சி ஏற்பட மனிதன் நாகரிகமாக பரிணமிக்க தலைப் பட்ட போது தனது வரலாற்றை வாழ்க்கைச் சம்பவங்களை எதிர் கொண்ட சிக்கல்களை பதிவு செய்யவேண்டிய நிலைக்கு உருவாக்கப்பட்டான்.இதன் பேறாக மனித உருவரைவு அல்லது மெய்யுரு வரைவு (Portrait drawing) வரையலானான். பின்னர் வாழ்வியலின் பிரதான சம்பவங்களடங்கிய சடங்குகள், சமய நிகழ்வுகளடங்கிய ஓவிய வெளிப்பாடுகளாக தோன்றிய பின் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் கிறிஸ்தவ மதத்தின் தூண்டலும் மதக் கருத்துக்களுக்கும் ஓவிய வடிவம் கொடுக்க வேண்டியதாயிற்று. இக்காலப்பகுதியில் தான் ஓவியம் என்பது கருத்தியல் ரீதியான வெளிப்பாட்டையும் கண்கவர் அழகினை உள்வாங்கியதாக வெளிப்பட வேண்டும் என்னும் வரையறையாக இருந்தது உண்மை அழகினை படைப்புக்களில் எட்டுவதற்கான முயற்சி மிகப்பரவலாக காணப்பட்டது.

ஆனால் புகைப்படக்கருவியின் வருகையும் யுத்த அழிவுகளால் மதம் பற்றிய கருத்துக்களில் ஏற்பட்ட அவநம்பிக்கையும் பன்டைக்காலங்களில் ஓவியம் பற்றிய கருத்துக்களில் பல மாற்றங்களை கொண்டு வந்ததோடு மாறுதல்களையும் ஏற்படுத்தியது.

படைப்பாளியின் வழி விழி புகுந்த ஒளியினை அவனது கையின் நீட்சியான தூரிகையின் மூலம் கண்ட மனித குலத்திற்கு செயற்கையாக அந்த ஒளியினை உள்வாங்கி நேரடிப்பதிவாக பெறமுடிந்ததும் மெய்யுருக்கள் வரைதல் நிலக்காட்சிகளை வரைதல், நிகழ்வுப்பதிவுகளை வரைதல் என்பவற்றின் சிந்தனைகளும் மாற்றங்களுக்குள்ளாக வேண்டியதாயிற்று.

எனவேதான் புகைப்படக்கருவியின் வருகையும் அதனால் ஓவியப்படைப்புகளுக்கு கலைஞர்கள் மத்தியில் எழுந்த விமர்சனங்களும் கலைப்படைப் பாளிகளைப் பல இன்னல்களுக்கு உள்வாங்கியது. இதனால் தமது படைப்புக்களில் புதிய உத்திகளை, புதிய நுட்பமுறைகளை உள்வாங்கவேண்டிய நிலையில் புதிய சிந்தனைகளுடன் ஓவியங்களை படைத்தார்கள். இதனது எதிரொலியாக ஓவியமொழிக் கூறுகளிலும் பல புதிய மாற்றங்கள் வந்தன.

**ஓவியம்**

பொதுவாக ஓவியமென்பது வரைதல் கூட்டமைத்தல் (Composition) மற்றும் பிற அழகியல் சார்ந்த செயற்பாடுகளையும் உள்ளடக்கி கடதாசி, துணி, மரம், கண்ணாடி போன்ற வேறுபட்ட தளங்களில் வர்ணப்பூச்சுகளைப் பயன்படுத்தி வரைபவரின் வெளிப்பாடு மற்றும் கருத்தியல் நோக்கங்களை வெளிக்கொணரும் ஒரு செயற்பாடாகும் என பொதுவாக வரைவிலக்கணப்படுத்திக்கொள்ளலாம்.

"ஏதோ தேவையையும் நோக்கத்தையும் கொண் டெழுந்து கையாளப்பட்ட இருபரிமாணப்பரப்பு ஓவியம் எனப்படுகிறது. இந்த பரப்பினை கையாள்கையானது வெளி (Space), ரேகை (Line), வர்ணம் (Colour), இழைமம் (Texture), ஒளி (light), கனவளவு (Volume) போன்ற காட்சி மூலங்களினோடு நிகழ்கின்றது' என தா.சனாதனன் குறிப்பிடுகிறார். (தமிழர்கலைகள் பக்க எண்-158)

ஓவிய படைப்புக்கான தேவையும் நோக்கமும் அது எழும் பண்பாட்டுத் தளத்தைக்கொண்டே

தீர்மானிக்கப்படுகிறது. இந்தப் பண்பாட்டை தீர்மானிக்கும் காரணிகளான அரசியல், பொருளாதார, சமூக, மத நடைமுறைகள் என்பன ஓவியத்தின் கட்புலக்கலையைத் தீர்மானிக்கின்றன. இதன் மூலம் ஓவியப்படைப்பு அடையாளப்படுத்தப்படுகிறது. ஐரோப்பிய மறுமலர்ச்சிக் கால ஓவியம் சீன மரபு ஓவியத்திலிருந்து வேறுபட்டு நிற்பதும் இதன் காரணமாகவேதான்.

வெளித்துலங்கும் நேர்வுகளையும் உள்ளே பொதிந்த உண்மைகளையும் காட்டுதல் ஓவியத்தின் உன்னதமான பண்புகளாகும். காணாதவற்றை காட்டுவது தெரியாதவற்றைத் தெரியப்படுத்துவது உணராதவற்றை உணர்த்துவது போன்றனவும் ஓவியத்தின் பண்புகளாகக் கொள்ளப்படுகின்றன.

ஓவியம் என்பது ஒரு புதியதான மீள் ஆக்கமாக உருவாகிறது. இந்த ஓவிய உருவாக்கம் கலைஞர்களி டையே பல்வேறு தூண்டல்களை ஏற்படுத்துகிறது. ஓவியப்படைப்புக்கு கற்பனையும் கைவினையும் கலக்க வேண்டியிருக்கிறது. ஓவிய நுட்ப முறைகளை பயன் படுத்தும் நிலையில் ஓவியர், கைவினைஞர் (Craft person) ஆகின்றார். கற்பனை மட்டும் ஒருவரை ஓவியர் என்ற நிலைக்கு எடுத்துச் செல்வதில்லை. ஓவியத்திறன்களையும் நுட்பங்களையும் கற்பனையுடன் கலக்கும் போது ஓவியம் நிலை பெற்றுக்கொள்கிறது.

ஓவியங்களில் பல வகைகள் காணப்படுவது போன்று ஓவிய நுட்ப முறைகளிலும் பல்வேறு வகைகள் காணப்படுகின்றது. கற்பனை வழியாகவும் நுட்பவியல் களூடாகவும் ஓவியத்துக்குரிய தனித்துவமான ஓவியநடையைக் கண்டுகொள்ளலாம். இதில் ஓவியத்தின் கூறுகளின் பங்களிப்பு பிரதானமாகின்றது.

**ஓவியத்தின் கூறுகள்**

ஒரு ஓவியத்தினை எப்படி, எவ்வாறு புரிந்து கொள்வது என்பது பலரிடையே எழும் ஓவியம் தொடர்பான அடிப்படைக் கேள்வியாகும். இதனைப் புரிந்துகொள்வதாயின் ஓவிய மூலக்கூறுகள் அல்லது ஒரு கட்புலக்கலையில் அதனை உருவாக்கம் செய்யும் அடிப்படையான கட்புல அலகுகளை (Visuval elements) பற்றிய அறிவு இன்றியமையாததாகும்.

- ரேகை (line)
- உருவமைவு (form)
- வடிவம்(shape)
- இழைமம் அல்லது மேற்பரப்புத்தன்மை (texture)
- வெளி(space)
- வர்ணம் (colour)


முதலியன ஓவியம் ஒன்றின் அல்லது கட்புலக்கலை ஒன்றின் அடிப்படையான கட்புல மூலக்கூறுகளாகும்.

**ரேகை அல்லது கோடு(Line)**

வரைதளத்தில் இரு புள்ளிகளை இணைக்கும் கீறல் கோடு எனப்படும். கோடுகள் ஓவியத்தளத்திலிருக்கும் வெளியை வெட்டிப் பிரித்து வரையறுக்கிறது. வரையறுக்கப்பட்ட வெளிக்குள் ஒரு அடிப்படை வடித்தை கண்டெடுக்கிறது.

கோடு கலையின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு. மனிதன் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களைப் புரிந்துகொள்வதற்காக கண்டெடுத்த மிகப்பெரிய கருவி அது பார்வை ரீதியாக கிடைக்கும் யதார்த்தத் தினுள் புதைந்திருக்கும் பண்புக் கூற்றைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் அதனை கோட்டுச் சித்திரமாக வரைந்து பார்த்தாலே போதும். பொருள்கள் தங்களது முப்பரிமாணத்திலிருந்து விடுபட்டு கோடுகள் ரீதியான ஒரு அடிப்படை வடிவ அமைதியைப் பெறுகின்றன. இந்த அடிப்படை வடிவ அமைதியே பொருளின் வடிவம் சம்பந்தப்பட்ட விடயமாகும். ரேகைகள் தனித்தோ அல்லது உருவத்தின் புற எல்லையினைக் குறிக்கும் முகமாகவோ பயன்படலாம். கோடுகள் செங்குத்துக் கோடுகள், படுக்கைக் கோடுகள், சாய்வுக் கோடுகள், வளைவுக் கோடுகள் எனப் பல வகைப்படும்.


ஒரு உணர்சிப்பெருக்கை உடனுக்குடன் ஓவியமாக்க தூரிகைகள், வண்ணங்கள், வர்ணம் தீட்டலுக்கான பிற உபகரணங்கள் என நீளும் பட்டியலிருந்து கோட்டோ வியம் விடுதலை அளிக்கிறது. ஒரு பென்சிலோ, பேனாவோ, கரித்துண்டோ கூட போதுமானது. வண்ண மின்றியும் ஓவியம் வரையலாம் என்ற நிலைக்கு கோடுகள் எம்மை இட்டுச்செல்கிறது. குகைவாசிகளின் கோட்டோவியத்தையும் தற்கால நவீன ஓவியர் ஆதிமூலத்தின் கோட்டோவியங்களையும் காண்பதனூடாக இதை நாம் உணர முடிகிறது.


ஓவியர் ஆதிமூலத்தின் கோட்டோவியம்

**உருவமைவு**

ஒரு பொருள் வரைதளத்தில் கனவளவுடன் ஆக்கிரமித்துக்கொள்ளுமிடம் கனபரிமாணத் தோற்றம் அல்லது உருவமைவு எனப்படும். பொதுவாக முப்பரிமாணப்பொருட்களை விபரிக்கும்போது பயன்படுத்தப்படுகிறது. ஓவியத்தின் உருவமைவு உண்மையில் ஒரு மாயைத் தன்மையே ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வடிவம்**

வரைதிரையில் கோடுகளுக்குள் அடைக்கப்பட்ட உருவத்தை வடிவம் எனலாம். வடிவங்கள் செயற்கையாகவோ (Geometric) அல்லது இயற்கை சார்ந்த (Orgnic) வடிவங்களாகவே இருக்கலாம். வடிவம் இருபரிமாணமானதாகவோ அல்லது முப்பரிமாணமானதாகவோ அமையலாம். இவ்வடிவம் நிறம், அளவு, இழைமம் அல்லது மேற்பரப்புத்தன்மை போன்ற பண்புகளை தன்னகத்தே கொண்டிருக்கும்.




**இழைமம் அல்லது மேற்பரப்புத்தன்மை**

வரைதளத்தின் அல்லது வரைபொருளின் தொட்டு உணரக்கூடிய வழுவழுப்பான அல்லது சொரசொரப்பான தன்மை இழைமம் அல்லது மேற்பரப்புத் தன்மை அல்லது படிக அமைப்பு எனலாம். இந்த இழைமத்தை தீர்மானிப்பது ஓவியனுடைய நுட்பமும் ஓவிய சாதனங்களும் ஆகும். இதில் ஓவியத்தின் தளம் வர்ணம், தூரிகைகள், வர்ணம் பூசும் உபகரணங்கள், பிற உபகரணங்கள் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. இந்த இழைமம் வழியாக ஓவியத்தின் தனித்துவமும் ஓவியத்தின் தனித்தன்மையும் புலப்படுத்தப்படும் என்பது உண்மை.

**வடிவம்**

வரைதிரையில் கோடுகளுக்குள் அடைக்கப்பட்ட உருவத்தை வடிவம் எனலாம். வடிவங்கள் செயற்கையாகவோ (Geometric) அல்லது இயற்கை சார்ந்த (Orgnic) வடிவங்களாகவே இருக்கலாம். வடிவம் இருபரிமாணமானதாகவோ முப்பரிமாணமானதாகவோ அமையலாம். இவ் வடிவம் நிறம், அளவு, இழைமம் அல்லது மேற்பரப்புத்தன்மை போன்ற பண்புகளை தன்னகத்தே கொண்டிருக்கும்.



**ஓவிய வெளி** (Space)

வரைதளத்தில் வரையப்பட்ட பொருள், வடிவம் ஆக்கிரமித்திருக்கும் இடத்தைத்தவிர மீதமிருக்கும் இடம் (Negative space) வெளி எனப்படும். கட்புலக்கலையின் ஒரு தனித்த பிரச்சினையாக நிற்பது இந்த வெளியாகும். இந்த வெளியே ஓவியத்தில் பின்புலத்தின் தேவையினை ஏற்படுத்துகிறது. இந்த வெளி இரண்டு வசனங்களுக்கிடையே ஏற்படும் தரிப்பை போன்றது. இந்த வெளியில் கட்புலத் தூண்டலற்ற ஒரு ஓய்வு ஏற்படுகிறது. இவ்வெளியில் பாவிக்கப்படும் வர்ணங்களோ அல்லது வேறு கட்புல அலகுகளோ அடுத்த பார்வைப்புல தூண்டுதலை பாதிக்காத வகையில் ஓவியனின் திறமையில் தங்கியுள்ளது.

தமிழ் சிற்பிகளும் ஓவியர்களும் வெளியை கலை நேர்த்தியுடன் கையாள்வது எப்படி? என்பதை மிகவும் நன்றாக உணர்ந்திருந்தனர். உதாரணமாக மகாவலிபுரத்தில் இருக்கும் மகிடஷாசுரமர்த்தனி செதுக்கல் தொகுதியில் உருவங்கள் ஒன்றை ஒன்று தொட்டுக்கொள்ளவில்லை ஆனால் போரிட்டுக் கொண்டிருக்கும் உருவங்களுக்குள் ஓர் ஒருமை நமக்கு புலப்படுகிறது. தனக்கு கிடைத்த வெளியை மிகவும் திறமையுடன் கையாண்டதன் மூலமாகவே சிற்பி இதனைச் சாதித்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இந்த வெளியில் பாவிக்கப்படும் கட்புல அலகுகள் (நிறம் போன்றவை) ஏனைய அலகுகளில் (வடிவம், உருவமைவு என்பவற்றில்) ஒப்பிட்டு ரீதியான தாக்கத்தை மெருகூட்டச் செய்யும் ஒரு படிக்கல்லாய் மாற்றுவதிலேயே ஓவியத்தின் வெற்றி பெருமளவில் தங்கியுள்ளது.

**வர்ணங்கள்**

ஓவியம் என்பதில் வர்ணங்களுக்கும் பிரதான இடமுண்டு. வர்ண வித்தியாசங்கள் மனதிற்கு இன்பத்தையும் ஆழ்ந்த அமைதியையும் கொடுக்கின்றன. வர்ணத்திற்குத் தனியாக தன் இருப்பின் வழியாக ஒரு திறமையும் கிடையாது. அது கலைஞரின் மரத்தில் மனத்தின் வழியாக இறங்குகையில் அர்த்தம் பெறுகிறது. வர்ணம் அடிப்படையாக மூன்று பண்புகளைக் கொண்டது. அவையாவன

- அலை நீளம் (Wave lingh)
- ஒளிர் இருள் தன்மை (Value)
- அடர்த்தி (Intensity)

மஞ்சள், சிவப்பு, நீலம் ஆகிய மூன்றும் பிரதான வர்ணங்களாகும். இவற்றின் கலப்பினால் உருவாகும் ஏனைய வர்ணங்கள் இரண்டாம் நிலை வர்ணங்களாகும். ஊதா, பச்சை, செம்மஞ்சள் என்பன இரண்டாம் நிலை வர்ணங் களாகும். மூல வர்ணத்தினதும் இரண்டாம் வர்ணத்தின் சேர்க்கையால் மூன்றாம் நிலை வர்ணங்கள் உருவாகின்றது.




இந்த வர்ணங்களின் கனதிக்காக கறுப்பு வர்ணமும் இளம் வர்ணமாக்க வெள்ளை வர்ணம் பயன்படுத்தப் படுகின்றது. இவ்விரு வர்ணங்களும் இருள் தன்மையையும் பிரகாசத் தன்மையையும் கொடுக்கிறது. இது வர்ணக்கலவையின்போது ஓவியன் அறிந்திருப்பான்.

ஓவியத்தின் பிரதான கூறுகளில் வர்ணமும் ஒன்று. வர்ணம் என்பது ஒரு பொருளினால் வெளிவிடப்படுகின்ற கடத்தப்படுகின்ற அல்லது தெறிக்கவிடப்படுகின்ற. ஒளியின் சேர்க்கையினால் ஏற்படுத்தப்படுகின்ற ஒரு காட்சி விளைவாகும்.

வர்ணப்பூச்சு ஒரு திரவம் அல்லது திரவமாகக் கூடிய கலவையாகும். அதை ஓவிய மேற்பரப்பில் இடுவதில் ஓவியனின் நுட்பமும் அதனோடு அவனுக் குள்ளாகும் சவால் வெற்றி ஓவியத்தின் தரத்தையும் உயர்த்த முன்னிற்கும்.

சுமார் 40000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஆதிமனிதர்கள் இயற்கையின் மூலப்பொருட்களிலிருந்து பெற்றுக்கொண்ட வர்ணங்களில் பல அரிய குகை ஓவியங்களை தீட்டினர். அதன் நீட்சியாக இன்றும் அநேக நவீன ஓவியர்களும் வர்ணங்களையும் தமது ஓவியங்களில் பயன்படுத்துகின்றனர். இது அன்று முதல் இன்றுவரை தொடர்ச்சியான தன்மையில் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது.

ஓவியன் தன் உணர்வுகளுக்கு வண்ணமிடும் முறை இன்று மட்டுமல்லாது அன்றும் இருந்திருப்பது ஆச்சரியத்துக்குரியதே அதன் பின்புலத்தின் அவனது வாழ்வியலும் இருந்திருக்கிறது.

இன்று ஓவியங்களில் வர்ணங்களை பயன் படுத்தும் முறையைக்கொண்டு


- நீர்வர்ண ஓவியம்
- மை ஓவியம்
- நெய் ஓவியம்
- பூச்சு ஓவியம்
- சுதை ஓவியம்
- அக்ரலிக் ஓவியம்
- நீர்கலந்த நெய் ஓவியம்
- வர்ணக்கோல் ஓவியம்

போன்ற வர்ண ஊடங்களைக்கொண்டு ஓவியம் தீட்டுவதோடு சில நவீன ஓவியர்களும் மரபு ரீதியான ஓவியர்களும் தமது ஓவியத்திற்கான வர்ணங்களை இயற்கையிடமிருந்தே தாயரித்து வர்ணம் பூசுவதை நாம் காணமுடிகின்றது. இவ் வேறுபட்ட வர்ணங்களின் தேவை அந்த ஓவியத்தின் தனித்துவத்தையும் ஓவியனின் வெளிபாட்டு தன்மையும் தீர்மானிப்பதில் பங்குவகிக் கின்றது. அதாவது ஓவியன் தான் வர்ணமிடுவதற்கு தேவையான உத்தியை பெறுவதற்கு குறித்த வர்ணமிடு வதற்கு குறித்த வர்ண ஊடகங்களை தெரிவுசெய்து கொள்கிறான்.

ஓவியத்தில் வர்ணமிடும் போது ஓவியன் பல்வேறு நுட்பவியல்களை கையாள்கிறான். அதனுடாக ஓவிய மேற்பரப்பில் புதிது புதிதான இழைமங்களை கொண்டுவர முயற்சிக்கின்றனர். அதில் வெற்றியும் அடைகிறான். உதாரணமாக மனப்பதிவாகாத ஓவியர்கள் ஒவ்வொருவர்களிடமும் வேறுபட்ட வர்ணப்பாவனை இருந்தது அந்த வர்ணப்பாவனை மூலம் அவர்கள் அடையாளமும் அவர்களின் தனித்துவம் பேனப்பட்டது.

ஓவியத்தில் வர்ணமிடும் போது சில ஓவியர்கள் உருவங்களை சிதைத்தும் உருவங்களை உடைத்தும் உருவங்கள் இன்றியும் அருபமான முறையில் ஓவியங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களை ஆக்குகின்றனர். அத்தைகைய முறைகளுக்கு வர்ணத்தின் பங்களிப்பு பிரதானமாகின்றது.

வர்ணத்தைக் கொண்டு ஓவியம் முழுமைப் படுத்தப்படுகிறது. ரேகை தேவைப்பாடு இன்றியும் வர்ணத்தின் நகர்வு, வர்ணபலம் பேனுவதனுடாகவும் உருவங்கள் அன்றியும் ஓவியத்தில் உணர்வுகள் பேசப் படுகிறது. காண்பியல் தொடர்பாடலிலும் வர்ணங்களின் பங்கு முக்கியமானதாகும். கருத்துக்களை வெளிப் படுத்துவதற்கு வர்ணங்கள் பல்வேறு பாங்காற்றுகின்றது.

வர்ணங்களின் அர்த்தப்பாடானது பண்பாட்டிற்கு பண்பாடு வேறுபட்டதாகும். எனவே குறிப்பிட்ட சூழலில் எத்தகைய வர்ணம் பயன்படுத்தப்படுகின்றதோ அதனைக் கொண்டே அதன் பொருளினைப் புரிந்துகொள்ளுதல் வேண்டும் உதாரணமாக மஞ்சள் வர்ணமானது இந்துக்களின் பண்பாட்டில் மங்கலகரத்தையும் சீனப் பண்பாட்டில் பொறாமையினையும் குறிப்பதாகவும் அமையும். இது ஓவிய ரசனையை கடந்து நிற்கும் ஒரு விடயமும் கூட என்றுதான் சொல்ல வேண்டும்.

வர்ணத்தின் மூலம் ஓவியன் தான் கூற வந்த செய்தியையும் சொல்கிறான். அதற்காக அவன் ஓவியத்தில் வடித்தை உருவாக்குகிறான். அதற்கு இழைமமளிக்கிறான் முப்பரிமானம் கொடுக்கிறான். ஓர் படிமத்தன்மையை வர்ணத்தின் மூலம் முன்வைக்கிறான். அதன் மூலம் அமரா ஓவியங்களை படைக்கிறான்.

இந்த வர்ணபாவனை என்பது ஓவியத்தில் தெளித்தல், வீசுதல், தெறித்தல், அப்புதல், தீட்டுதல், ஊற்றுதல், கையால் பரப்புதல், தூரிகையால் தொடுதல் என பல்வேறு நுட்பமுறைகளை கையாண்டு தனித் தன்மையை ஓவியத்தில் கொண்டுவர முயல்கிறான். அதற்கு தகுந்த வர்ணங்களை வர்ண ஊடகங்களையும் தெரிவுசெய்கிறான்.

இந்த வர்ண ஊடகத் தெரிவை ஓவியத்தின் தளம் தீர்மானிக்கின்றது. உதாரணமாக நீர்வர்ணம் காகிதத்தை ஓவியத்தளமாக கொண்டுள்ளது. வர்ணங்களை தெரிவுசெய்தல் என்பது ஓவியத்தின் தனித்துவ நடையி லுடன் தொடர்பு கொண்டதாக ஓவியரின் தனித்துவ நடையியலை வெளிப்படுத்தும் வேறு நுட்பவியல்களாக அமைவது ஒளிப்பண்பு, இருட்பண்பு, நிழற்பண்பு முதலியனவாகும்.


வர்ணமின்றி ஓவியங்கள் வரைய முடியும் என்பது தற்கால சிலரின் கருத்தாகும். அவர்களின் இக்கருத்து கோட்டோவியத்தை அடிப்படையாக கொண்டது. ஆனால் அக்கோடுகள் கூட ஒரு வர்ணம் சார்ந்திருப்பதை யாரும் மறுக்க முடியாத ஒன்றாகும்.

வர்ணங்கள் ஓவியத்தின் ரேகையை தீர்மானிப்பது மட்டுமல்லாது அது ஓவிய உருவை, வடிவத்தை, வடிவத்தின் கனபரிமானத்தையும் தீர்மானிக்கின்றது. ஓவிய வெளியை நிரப்புவதும் கூட வர்ணமே. வர்ணங்கள் இன்றி ஓவியக்கலையை சுவைப்பதென்பது ஒரு கேள்விக்குறியாகவே ஒருக்கும். அதற் பதிலாய் வர்ணங் கள் பதில் சொல்லும். ஓவியத்தில் வர்ணம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஓவியத்தின் உயிராய் வர்ணங்கள் இருப்பதால் இது சாத்திய மடைகின்றது.

**சின்னத்துரை - பற்மராஜன்**
கண்ணகிபுரம், மகிழூர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதம் கூறும் விஞ்ஞான உண்மைகள்



**திருமதி. கயல்விழி ராஜகுலேந்திரன்**
(B.A. Hons Sp in Hindu Philos)
மகிழூர்

இந்து நாகரிக வரலாற்றிலே பல தரப்பட்ட சிந்தனைகள் காணப்படுகின்றன. அவ் வகையில் இந்து அறிவியல் சிந்தனை முதன்மையானதாகும். கலை நோக்கிலும், தத்துவ நோக்கிலும், எமது பண்பாட்டு கலாசார நோக்கிலும் பல விடயங்கள் கையாளப்பட்டு விஞ்ஞான ரீதியாக பல உண்மையான கருத்துக்களையும் வெளிக்காட்டுபவையாக எமது இந்துமதத்தோடு ஒட்டி வருகின்ற கலை, கலாசார பாரம்பரிய பண்பாட்டு கோலங்களும் விஞ்ஞான ரீதியான கருத்துக்களுள் தொன்மை வாய்ந்தது இந்து சமயம் ஆகும். இந்துக்களின் (தமிழர்களின்) கலாசார பண்பாட்டு வாழ்வில் காணப்பட்ட அறிவியல் சிந்தனைகள் இன்று எமது விஞ்ஞான ரீதியாக சிறந்த ஆதாரமாக துணை நிற்கின்றது.

விஞ்ஞானம் என்றால் ஏதோ வெள்ளைக் காரர்களின் சொத்து என எம்மவர்கள் பலர் நினைக்கலாம். ஆனால்! எமது பண்பாட்டு பாரம்பரியத்திலே முதன்மை பெறுகின்ற விடயங்கள் அறிவியல் பூர்வமான சிந்தனைகளை தாங்கியவையாக உள்ளன. விஞ்ஞான உண்மைகள் பல எமது சமய சடங்குகளிலும் புராணங் களிலும், இதிகாசங்களிலும் பொதிந்து கிடக்கின்றன. இக்கட்டுரையை வாசித்து முடிக்கும் போது 'இந்து என்ற சொல்லே உங்கள் இதயத்தில் வலிமையின் மின் அதிர்வுகளை பரப்பும் என்பத எனது நம்பிக்கையாகும்.

விஷ்ணுவின் தசாவதாரத்தை எடுத்துக் கொண்டால் முதலில் மச்ச அவதாரம் (மீன் அவதாரம்) கடலில் வாழ்கிறது. அடுத்தது கூர்ம அவதாரம் (ஆமை) நீரிலும், நிலத்திலும் வாழ்கிறது பின்பு வராக அவதாரம் (பன்றி) நிலத்தில் மட்டும் வாழும் மிருகம் அதன் பின்பு பாதி மிருகமும், பாதி மனிதனும் கலந்த நரசிம்ம அவதாரம், தொடர்ந்து குள்ளமான வாமன அவதாரம் உக்கிரமான பரசுராம அவதாரம் பின்பு இராமன், கிருஷ்ணன் என அழகான மனித அவதாரம் என்ற அவதார நிலை பிறப்புரிமையியலின் தந்தை என போற்றப்படுகின்ற 'டார்வின்' என்ற உயிரியலாளரின் கூர்ப்புக் கொள்கையினை தசாவதாரத்தில் முன்னமே கண்டு கொள்ளலாம் முதலில் டார்வின் உயிரினங்கள் தனிக்கல அங்கிகளாக கடலில் இருந்து தோன்றியதாக, பின்பு கடலில் இருந்து நிலத்திற்கு வந்ததாகவும், பின்பு ஊர்வனவாகவும், பறப்பவையாகவும், மிருகங்களாகவும், இறுதியில் மனிதனாக கூர்மையடைந்ததாக கூறுகிறார். எனவே அவதாரங்கள் கூர்ப்பினை கூர்பு கொள்கையினை விளக்குவதாக அமைகிறது.

சூரியனையும், கோள்களையும் எடுத்துக் கொண்டால் 'சூரியனை பூமியும் ஏனைய கோள்களும் சுற்றுகின்றன என்ற "Helio Cantric Theory" ஐ 'நிக்கலஸ் கொப்பநிக்கஸ் முன்வைத்தார். ஆனால் அதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வேதகாலத்து ரிஷிகள் இதை அறிந்திருந்தனர். ஏனெனில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்ட கோயில்களிலே கலை அம்சங்களில் சூரியன் நடுவிலும் அதனைச் சுற்றி மற்றைய கிரகங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

எமது கலை கலாசார விழாக்களில் மாவிலை, தோரணங்கள் கட்டப்படுகின்றன. திருவிழாக்களிலும், வீடுகளிலும் நிகழும் மங்கள, அமங்கள நிகழ்வுகளிலும் மாவிலை, தோரணங்கள் கட்டப்படுகின்றன. இதனை நாம் விஞ்ஞான விளக்கத்தோடு கவனித்துப் பார்த்தால், பச்சை இலைகள் பகற்காலத்தில் O2 வாயுவை வெளியிடக் கூடியவை மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் Co2 வாயுவின் அளவு அதிகரிப்பதை இவை தடுக்கின்றன.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அலைவு காலத்தை எடுத்துக் கொண்டால் 'கலிலியோ' அலைவுகள் பற்றிய ஆய்வுகளின் முடிவில் நீளமான பொருட்கள் மெதுவாகவும், நீளம் குறைந்த பொருட்கள் விரைவாக வும் அலையும் என்னும் கொள்கையை வெளியிட்டார். இதையே எமது கலை கலாசார அம்சங்களில் ஒன்றான ஊஞ்சலோடு தொடர்புபடுத்தினால் சிவஞான முனிவர் அம்பிகையை ஊஞ்சலில் அமர்த்தி அலைமகளும், கலைமகளும், ஊஞ்சல் ஆடும் காட்சியினை தனது பாடலில்

'பாயும் கயல் குலம் அசைக்கும்
அவ் ஊசலில்
பாய்ந்திலது இவ் ஊசல்...'

அதாவது நீளம் குறைந்த அம்பிகையின் காதில் தொங்கும் தோடு ஊஞ்சலை விட விரைவாக ஆடுகிறது என குறிப்பிடுகிறார்.

கோலங்கள் இவை புராண காலம் தொட்டு இந்துக்களின் பண்பாடு, கலை, கலாசாரம் சம்பந்தப் பட்டவையாக இல்லங்களிலும், கோவில்களில் பொது விழாக்களில் முக்கிய இடத்தை பெற்று வந்துள்ளன. கோலமானது பச்சை அரிசி மாவில் சிறிது மஞ்சள் தூளை சேர்த்து இடப்படுகின்றது. இது பறவைகள் எறும்புகளுக்கு உணவாக பயன்படுகின்றது. எனவே தொற்று நோய்க் கிருமிகள் வீட்டுக்குள் பரவுவதும் பாம்பு, தேள் போன்றவை வீட்டினுள் நுழைவதும் தடுக்கப்படுகின்றது.

துளசி மாடம் எமது இந்துக்களின் இல்லங்களில் வீட்டின் முன் புறத்தில் அல்லது நடு முற்றத்தில் துளசி மாடம் காணப்படும். இது எமது விஞ்ஞானத்தோடு பார்த்தால் உயர் மருத்துவ குணங்களை உடையது. அத்தோடு சளியையும், பல வித நோய்களையும் குணப் படுத்துகிறது. இவ் விடயம் அண்மைக் கால சினிமா படத்திலும் (7ம் அறிவு) படத்தில் காட்டப்படுகின்றது. ஒரு சான்றாக காணப்படுகின்றது.

அடுத்து விபூதி, உருத்திராட்சமும் சிவ சின்னங்களாகும். இவற்றை அணிவதால் மருத்துவ ரீதியாக பல நன்மைகளை நாம் பெறுகிறோம். விபூதி யானது பலவித ஆயுள் வேத மருந்துக்களை தயாரிப் பதற்கு பயன்படுகின்றது. அத்துடன் உடலில் தோன்றும் வியர்வையை உறிஞ்சுவதால் சளி, தலைவலி போன்றவை ஏற்படாது தடுக்கிறது. உருத்திராட்ச நீர் மேனியில் படுவதால் இருமல், தொடர்ந்த தும்மல், ஆஸ்துமா போன்ற நோய்கள் குணமாவதுடன் இரத்த அழுத்தம் சமநிலை பெறும். இதனாலேயே உருத்திராட்சம் அணிந்து




ஸ்நானம் செய்வது புனித கங்கையில் ஸ்நானம் செய்வதற்கு நிகரானதாக இந்துக்களால் கருதப் படுகின்றது.


மற்றும் நிறங்கள் சூரிய ஒளி யின் ஏழு நிறங் களையும் எடுத்துக் கொண்டால் நவீன விஞ்ஞானமானது வெள்ளொளி ஒரு அரியத்தினூடாக பாயும் போது 7 நிறங்களுடைய ஒளியாக பிரியும் எனக் கூறுகின்றது. இருப்பினும் சூரிய ஒளி 7 நிறங்களை கொண்டி ருப்பதாக இருக்கு வேதம் சொல்கிறது. அது மட்டுமன்றி சூரிய தேவன் 7 குதிரைகளை கொண்ட தேரில் பவனி வருவதாக புராணங் களில் சொல்லலப்பட் டிருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

மற்றும் பூச்சியத்தின் வலிமை அதாவது பூச்சியம் என்றால் ஒன்று மில்லை என்றே பலர் கூறுகிறார்கள். ஆனால் 0 $ 1 என்னும் துவித எண் (binary Numbers) பாஷை இல்லா விட்டால் Computer இயங்க முடியாது. இதையே ஆதி சங்கரர் பின்வருமாறு கூறுகிறார் '0 என்கிற மாயாசக்தி 1 என்ற பூரண பரமாத்மாவுடன் இணையாவிடில் உலகத்தின் இயக் கங்களாகிய தோற்றம், வளர்ச்சி, தேய்வு, அழிவு போன்ற எதுவும் நிகழாது' என சங்கரர் கூறுகின்றார்.

அதாவது தொன்மையான வேதங்கள் மட்டும் சூன்யம் என்ற எண்ணக்கருவினை கொடுத்திருக்கா விட்டால் இன்று கணிதமோ விஞ்ஞானமோ இவ்வளவு வளர்ந்திருக்காது, என்பது நிச்சயம். இந்துக்களின் அறிவியல் சிந்தனைகளுள் கணித அறிவியல் முக்கியமானதாகும். இந்து சமயத்தின் கலை, கலாசார இந்துப்பண்பாட்டின் நிலைகளாக விளங்குகின்ற ஆலய வழிபாடுகள் என்பவற்றில் கூட அறிவியல் ரீதியான விஞ்ஞான விளக்கங்கள் நிறைந்திருக் கின்றன. எமது சமய சடங்குகளில் காணப்படும் விடயங்களில் விஞ்ஞான கருத்துக்கள் காணப்படுகின்றது என்றால் மிகையாகாது. இவ்வாறு சமூகத்தை ஒன்றிணைக் கும் சாதனமாகக் காணப்படும் இந்து சமய அறிவியல் ஆனது கருத்துக்கள் நிரம்பிய கலை கலாசார, பண்பாட்டு அம்சங்களாகிய பெருங்கடலில் சிந்திக் கிடக்கும் விஞ்ஞான முத்துக்களில் சிலவற்றை இக்கட்டுரை எடுத்துக் காட்டுகிறது. இது எம்து கலை, கலாசாரம், பண்பாடு போன்றவற்றின் ஆழத்தை பறைசாற்றி நிற்கின்றன். என்றாலும் எமது கலாசாரத்தைப் பற்றியும் இனத்தைப் பற்றியும் எம் முன்னோர்கள் பற்றியும் பெருமைப்படுகின்றேன். என்னை ஓர் இந்து என்று அழைத்துக் கொள்வதில் பெருமைப்படுகின்றேன்.

# தற்கொலை என்பது அழுத்தத்தின் வெடிப்பு

பிறப்பு ஒன்று இருந்தால் இறப்பு நிச்சயம் இருக்கும். பிறப்பு இயற்கை வழிப்பட்டது. அதேபோல் இறப்பு இயற்கை வழிப்பட்டதாக இருக்க வேண்டும். இதுதான் அனைத்து உயிரினங்களின் அடிப்படைவிதி இருந்தும் சில மரணங்கள் விபத்து, இயற்கை சீற்றம், கொலை, தற்கொலை முதலிய காரணங்களாலும் நிகழ் கின்றது. விபத்தும் இயற்கைச் சீற்றமும் எதிர்பாராதவை. கொலையும் தற்கொலையும் காரண காரியம் கொண்டவை.



தற்கொலை என்பது தற்கொலையாளி தாம் செய்யும் செயலின் ஆபத்தான விளைவுகளை அறிந்தும் அச்செயலை துணிச்சலாக தாமே தமக்குச் செய்து தம் உயிரை மாய்த்துக் கொள்கின் றனர். பிற உயிரினங்களில் தற்கொலை இல்லை என்று ஆய்வுகள் தெரிவிக் கின்றன. எனினும் இது மனித இனத்தின் தனித்துவமான உணர்வாகத் திகழ்கிறது. இயற்கை விதிப்படி, அனைத்து உயிரினமும் உலகில் எஞ்சி வாழத் துடிக்கின்ற அதேவேளை மனித இனம் சாகத் துடிக்கின்றான். ஏனென்றால் அனைத்து உயிரினங்களும் இயற்கை உலகில் வாழ மனிதன் மட்டும் செயற்கை சமூக உலகை உருவாக்கிக் கொண்டு வாழ்கின்றான். இந்த செயற்கை சமூக உலகில் இயல்பு வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகள் அனைத் தும் சாமான்ய மனிதனிடத்தில் இறுக்கத்தை ஏற்படுத்து பவையாக மாறிவிட்டது. சமூக உணர்வு மனிதனின் அடிப்படைச் சுதந்திரத்தை பறித்து விடுகின்றது. மனதில் இறுக்க உணர்வை ஏற்படுத்தி விடுகின்றது. தோன்றும் பிரச்சினைகளை எதிர் கொள்ள முடியாத கோழைகளே தற்கொலைக்கு ஆளாகின்றனர்.

தற்கொலைகள் ஒரே காரணத் தினால் நிகழ்வது போல் தோன்றி னாலும், பின்னணியில் பல்வேறு சமூகக் காரணிகள் மற்றும் உயிரியல், உளவியல் காரணிகள் அமைகின்றது. சமூகக் காரணிகளாக கடன் தொல்லை (தற்போது நுண்கடன் பெறல்), சந்தோச மற்ற உறவுகள் மற்றும் உறவு முறிவு, அன்பானவரின் இறப்பு, கடுந்துயரம், வறுமை, பொருளாதாரச் சிக்கல் திடீரென நிகழல், பாரிய ஏமாற்றம், துரோகம், அநியாயத்தை எதிர்க்கும் சக்தியின்மை, தோல்வி தாங்க முடியாமை, மது மற்றும் போதைவஸ்து பாவனையும், அவற்றிற்கு அடிமையாலும் பாலியல் பிரச்சினைகள், தமது பிரச்சினைகள் மற்றும் உணர்வுகளை பகிர்ந்து கொள்ள


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நண்பர்களை பெறாது ஒதுங்கி வழ்தல் பரீட்சை பெறுபேறுகள், கணவன் மனைவியிடையே வீட்டு வன்முறைகள், பெற்றோர்கள் தமது பிள்ளைகள் கட்டிளமைப் பருவத்தின் போது எதிர்வு கொள்ளும் பிரச்சினைகள் அறியாது இருத்தலும், அதிகூடிய கட்டுப்பாடுகளை அவர்கள் மீது செலுத்து தலும், முதியோர் பராமரிப்பின்மை போன்றன அமையும்.

உயிரியல் காரணிகளாக நீண்டகால சுகாதாரப் பிரச்சினைகள் அல்லது குணப்படுத்த முடியாத நோய்க ளால் ஏற்படும் தாங்கமுடியாத வலி, உபாதை மற்றும் குடும்பத்தில் நெருங்கிய உறவினர்கள் தற்கொலை யால் இழந்தால் ஏனைய குடும்பத்தினருக்கும் அதே எண்ணம் ஏற்படுவதற்கான மரபணு சார்ந்த ஆபத்து என்பன அடங்கும்.

உளக்காரணிகளாக மனச்சோர்வு (Depression) எனப்படும் மிதமான உளநோய்க்காளாதல், மனச்சோர்வு ஒருவருக்கு கவலையை ஏற்படுத்தி வாழ்வின் மீதான பிடிப்பையும் எதிர்கால நம்பிக்கையையும் இழக்கச் செய்கிறது. மேலும் ஒருவர் பாரிய உள நோய் (உதாரணம் மனப்பிளவு - Shizophrenig) காரணமாக ஏற்படும் சிந்தனை மாற்றம் தற்கொலையை ஏற்படுத்துவதாக அமையலாம்.

மேலும் நவீன உலகில் பறக்கும் நாம், கையடக்க தொலைபேசிகளையும், கணிணிகளையும் மட்டுமே நண்பர்களாகப் பார்க்கின்றோம். சந்தோஷமான தருணங்களை சமூக வலைத்தளங்களில் பகிரும் நாம், நம்முடைய துக்கங்களையும் ஏமாற்றங்களையும் பகிர முடிகிறதா? 'Blue whale challenge மற்றும் Momo challenge என்று குழந்தைகளின் வாழ்வை கேள்வி குறியாக்கும். சவால்கள் வந்து கொண்டே இருக்கின்றன. பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகள் மீது கவனமாக இருங்கள். தம் குழந்தைகளுக்கு இல்லை என்ற சொல்லே இருக்கக்கூடாது என்று பார்த்து பார்த்து வளர்க்கும் பெற்றோர்களே! உங்கள் சிக்கல்களை எதிர்வுகொள்வதற்கான மனப்பக் குவத்தை வளர்க்க மறுக்கிறீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கணிப்பீட்டின்படி ஒரு வருடத்தில் 8,00,000 தற்கொலைகள் நிகழ்கின்றன. ஒவ்வொரு 40 நொடிகளில் நாம் ஒரு உயிரை தற்கொலை யினால் இழக்கின்றோம். இலங்கையில் தற்கொலை ஒரு பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக காணப்படுகிறது. பொலிஸ் திணைக்கள தரவுகளின் படி, கடந்த வருடம் 3263 தற்கொலைகள் இடம்பெற்றுள்ளது. (15.2% 100,000). தற்கொலையாளியின் தற்கொலை எண்ணம் திடீர் முடிவாகவோ ஏன் வருடங்களில் திட்ட மிட்டதாகவோ இருக்கலாம். எமது நாட்டில் பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்ட வடிவங்களில் தற்கொலை நிறைவேற்றப் படுகிறது. எமது பிரதேசத்தில் (பட்டிருப்பு பிரதேசம்) அண்மைக்காலமாக தற்கொலை அதிகரிப்பு கண்கூடாகத் தெரிகிறது. இளம் வயதினர், திருமணமானவர்கள், ஏன் வயோதிபர் என உள்ளடங்கலாகிறது.

தற்கொலை முறைகள் மிகவும் உக்கிரமான தொன்றாக காணப்படுகிறது. (தூக்கிலிடல் போன்றவை). இவர்கள மனோபாவத்திற்கு குற்ற உணர்வா (Sense of Guilt) அல்லது சுயதண்டிப்பா (Self Punishment) காரணமாக அமைகிறது. உன்னிப்பாக ஆராய்ந்தால் தற்கொலை ஒரு சுயநலம் ஆகும். தம்மைச் சுற்றியுள்ளோர் நலனை சற்றும் பொருட்படுத்தாது அவர்களை பிரச்சினையில் தவிக்கவிட்டு, அப்பிரச்சினையிலிருந்து தாம் தப்பித்துக் கொள்கின்ற வழியாக தற்கொலை விளங்குகிறது.

**தற்கொலைக்கு பின்னணியில் உள்ள தொடர்பு பட்ட காரணங்கள் ஏதுவாக இருந்தாலும் அடிப்படையில் தொடர்ச்சியான மன அழுத்தமே காரணமாக அமைகிறது. ஆய்வின் படி மன அழுத்தம் மட்டும் 90 சதவீத தற்கொலைக்கு காரணமாக அமைகிறது. மனித வாழ்க்கையில் ஏற்படும் இன்னல் களையும், இடர்பாடுகளையும் துணிச்சலுடன் எதிர்கொள்ளப் பழகுவதுதான் ஆராக்கிய மான உளவியல்.**

தற்கொலைக்கு பின்னணியில் உள்ள தொடர்பு பட்ட காரணங்கள் ஏதுவாக இருந்தாலும் அடிப்படையில் தொடர்ச்சியான மன அழுத்தமே காரணமாக அமைகிறது. ஆய்வின்படி மன அழுத்தம் மட்டும் 90 சதவீத தற்கொலைக்கு காரணமாக அமைகிறது. மனித வாழ்க்கை யில் ஏற்படும் இன்னல்களையும், இடர்பாடுகளையும் துணிச்சலுடன் எதிர்கொள்ளப் பழகுவதுதான் ஆரோக்கிய மான உளவியல். உலகில் உயிர்த்துடிப்பு உருவான காலத்தி லிருந்து இன்று வரையிலுமான பரிணாம வளர்ச்சியும் இந்த எதிர்நீச்சல் தத்துவத்தைத்தான் (Coping Strategy) நமக்கு உணர்த்துகிறது. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மன அழுத்தங்களை எவ்வாறு எளிதாக முறியடிக்க வேண்டும் என்பது நாம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியதொன்று. பிரச்சினைகளை தீர்த்தல் (Problem Solving) மற்றும் தகுந்த தீர்மானம் எடுத்தல் (Decisron Making) போன்ற திறன்களை மாணவ மட்டங்களில் கட்டிளமைப்பருவத்தினருக்கு வளர்த்து அவர்களது வாழ்க்கைத் திறனை (Lite Skills) மேம்படுத்துவதோடு நாமும் திறனை பெற்றுக்கொள்ள வேண்டும்.

முரண்பாடுகள் ஏற்படின் அவற்றை சமுகமான


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

முறையில் தீர்த்தல் அல்லது முரண்பாட்டிலிருந்து விலகுதல் போன்ற திறன்களும், வீட்டிலோ மற்றும் அயலவர், சமூகத்திலோ நல்ல தொடர்பாடலை வளர்த்தல் (Developing Good Communication Skill) போன்றவற்றை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். நல்ல ஆளிடைத் தொடர்பாடலையும் (Interpursonal Relationship) வளர்த்துக் கொள்ள வேண்டும். நேர முகாமைத்துவம் (Time Management) நாம் நமது நாளாந்த வாழ்க்கை முறையில் வெற்றி பெறவும் மாணவர்கள் தமது கல்வியில் முன்னேற்றமடையவும் உதவுகிறது. நாம் எவரிடமும் ஒத்துணர்வுடன் (Empathy) நடந்து கொள்வதும் ஒவ்வொருவரது கருத்தை ஏற்றுக்கொள்ளலும் (Accepting Others) மேற்கூறிய திறன்களுடன் எமது உளநலத்தை மேம்படுத்தி மனஅழுத்தத்திலிருந்து விடுபட உதவுகிறது.


தற்கொலையை தடுப்பதற்கு ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு. கூட்டுமுயற்சி தற்கொலையின் எண்ணிக்கையையும், தாக்கத்தையும் குறைக்கும் என்பதில் ஐயமில்லை. (Working together to prevent suicide) - சமூகத்தில் நண்பர்களோ உறவினர்களோ முன்பு போல உற்சாகமாக இல்லை, எதிர்காலத்தின் மீது நம்பிக்கை இழந்து போகிறார்கள் என்றால், அவர்களை விட்டு விலகாதீர்கள்.

அவர்களில் எதிர்மறை மற்றும் தற்கொலை எண்ணம் புதைந்து கிடக்கின்றதா? என அவதானியுங்கள் வாழ்க்கை இருட்டாகத் தெரிகிறதா? அச்சம் வேண்டாம் நீங்கள் புதைக்கப்படவில்லை. விதைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

வாழ்வதற்கு பூமியில் ஆயிரம் வழிகள் உண்டு. 'உலக தற்கொலை தடுப்புத்தினம்- September 10

'Hope for a better life after current problems are solved"

**திருமதி. எஸ். பரமகுருநாதன்**
MBBS. SI PG.Diploma is Psychiatry



## பூச்சியம் (Zero)

கி.பி. 5ஆம் நூற்றாண்டில் இந்திய கணித மேதையான ஆரியபட்டாவினாலேயே பூச்சியம் அறிமுகப்படுத்தப்பட்டது.


பூச்சியத்தின் வருகையினாலேயே பிற்காலத்தில் பல விஞ்ஞானிகள் இலகுவாக பல கணித சமன்பாடுகளையும் சூத்திரங்களையும் அமைத்துத் தந்தனர். சாதாரண கணிப்பான் முதல் நவீன கணனி வரை உபயோகிக்கப்படும் பைனரி முறைமை (Binary system) கூட பூச்சியத்தை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்



## யோகா (Yoga)

இன்றளவிலும் பிரசித்திபெற்றிருக்கும் யோகா எனும் உடற்பயிற்சி முறைமை இந்தியர்களினாலேயே உலகிற்கு வழங்கப்பட்டது

யோகா உடற்பயிற்சி செய்யும் முறை, அதன் நன்மைகள் பற்றி உலகளவில் இன்றும் பரவலாக பேசப்படுவதோடு, பல உடல்/உள நோய்களுக்கு யோகா ஒரு நிவாரணமாக கருதப்படுகிறது





## பொத்தான்கள் (Buttons)

இற்றைக்கு 5000 வருடங்களுக்கு முன்பே பொத்தான்கள் உபயோகிக்கப்பட்டதற்கான சான்றுகள், மொஹஞ்சதாரோ அகழ்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


கண்டுபிடிக்கப்பட்ட இப்பொத்தான்கள், கடல் சிப்பிகளை உபயோகித்து உருவாக்கப்பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்முனை தென் எருவில் பற்று பிரதேசச் செயலாளர் பிரிவில் வதியும் மக்களின் கலை கலாசார பாரம்பரியங்களை உற்று நோக்கினால் ஆலயங்களில் திருவிழாக்கள் அத்துடன் கோலாட்டம், கும்மி, கரகம், காவடி, வசந்தன், நாடகம், நாட்டுக் கூத்து, மற்றும் பாரம்பரிய மூலிகை வைத்திய முறையும், சோதிடக் கலையுமாகும். அறுபத்துனான்கு கலைகளில் மிகமுக்கிய கலையாக விளங்குவது சோதிடக் கலையாகும். இக் கலையை இறையின்பக் கலையென்றும் தெய்வீகக் கலை என்றும் எதிர்காலக் கலை என்றும் அழைக் கிறார்கள். இறைவன் உலகைப் படைத்து உயிர்களையும் படைத்து உலக உயிர்கள் உய்யும் பொருட்டு இக்கலையை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளார். இக்கலையை உலகநாடுகளில் பல வழிமுறையில் பின்பற்றி வருகின்றார்கள். எமது ஈழத் திரு நாட்டில் எமது பிரதேசம்

எமது பிரதேசத்தில் சோதிடம் எண்கணித முறையிலும் சூரியன் சந்திரனின் கிரக நிலையைக் கொண்டும் கணிக்கப்பட்டு சொல்லப்படுகிறது. சாமுந்திரிக்கா இலட்சணங்களைக் கொண்டு ஒரு மனிதனுடைய குணாதிசயங்கள் அவரது எதிர்கால வாழ்க்கையில் நடைபெறவிருக்கும் நல்லவை கெட்டவைகளை அறிந்து அதற்கான பரிகாரம் தேடுவதன் மூலமாகவும் தீயவற்றைக் குறைத்துக் கொள்ளலாம். சோதிடக் கலையானது ஒரு தெய்வீகக் கலையாகும். இதை மிக எளிதாகப் பெற்றுவிட முடியாது. யோகிகள், மகான்கள் இறையருள் பெற்ற கணித வல்லமை யுடையவர்களால் மாத்திரம் சோதிடத்தை திறம்படக் கூறமுடியும் என்று கற்றுணர்ந்த மேதைகள் கூறுகிறார்கள். இக்கலையை ரிஷிகளும் முனிவர்களும் ஏடுகள் செய்யுள்களில் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

# மண்முனை தென்எருவில்பற்று பிரதேசத்தில்



# சோதிடக்கலையின் பங்களிப்பு

மக்களும் சோதிடக் கலையைப் பின்பற்றி வருகிறார்கள். அதாவது பிறப்பு, இறப்பு, ருதுசாந்தி, திருமணம், வீடுகட்டல், ஆலய விழாக்கள் அனைத்துக்கும் ஒரு வழிகாட்டியாக விளங்குகிறது. ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்புவரை பின்பற்றப்படும் கலையாகும்.

**'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரெண்டும்**
**கண்ணென வாழும் உயிர்களுக்கு'**

என வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார்.

இத் தெய்வீகக் கலையை உற்று நோக்கினால் கணிப்பீட்டு முறையிலும், எண்சோதிட முறையிலும் கைரேகை முறையிலும் இன்னும் பலமுறைகளில் அதாவது காலக்கியான காண்டம், நிகண்டு, பஞ்சாங்கம், மற்றும் நூல்கள் மூலமாக பதினெண் சித்தர்கள், முனிவர்கள் மகான்கள் மூலமாக உலகுக்கு வெளிப்படுத்தி யுள்ளார்கள்.

காலப்போக்கில் இதில் வல்லமையுடையவர்களை தொகுத்து புத்தக வடிவில் மக்களுக்கு விளங்கக் கூடிய முறையில் வெளியீடு செய்துள்ளார்கள். இக்கலையை கற்றுத் தெரிந்து கொள்வதற்கு இறையருளும் தனிப்பட்ட ஞானமும் தீர்க்கதரிசனமும் வேண்டும். சோதிடம் சொல்பவர் இறையருள் பொருந்தியவராக இருத்தல் வேண்டும். கேட்பவர்களும் பயபக்தியுடன் வெற்றிலை பாக்கு உடன் ஜனக் குறிப்பையும் வைத்து கடந்த காலம் எதிர்காலப் பலனையறிந்து அதுக்கு ஏற்றாற்போல் நடந்து கொள்கிறார்கள் வழிபாடு பரிகாரம் செய்து தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்கிறார்கள்.

சோதிடக் கலை என்பது ஆழம்காண முடியாத பெரிய சமுத்திரமாகும். பன்னிரெண்டு இராசிகளையும் இருபத்தியேழு நட்சத்திரங்களையும் ஒன்பது கிரகங்களையும் கொண்டு அமைந்துள்ளது. ஒரு நட்சத்திரம் 4 பாதங்களைக் கொண்டுள்ளது. ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையின் பிறப்பைக் கொண்டு ஜனன ஜாதகக் குறிப்பு கணிக்கப்பட்டு அவரின் எதிர்காலம் எப்படியமையும் என்பதைக் கணிப்பீடு செய்கிறோம். அதன் பலனுக்கு ஏற்ப எமது வாழ்க்கையை நடைமுறைப்படுத்த முடியும். இக்கலையை இறை தூதர்களாகிய புத்தபெருமான், யேசுகிறிஸ்து, நபிகள்நாயகம், சத்தியசாயிபாவா, காந்தியடிகள் போன்றோர்கள் இது ஒரு தெய்வீகக்கலை என்றும் மெய்ஞானம் காணாவல்லமை உடையவர்கள் கற்றுணர முடியும் என்றும் மனித இனத்துக்கு சோதிடக் கலை மிகவும் அவசியம் என்றும் கூறியுள்ளார்கள். இக்கலையைக் கூறுபவர்கள் கீழ் குறிப்பிடப்படும் அம்சம் உடையவராக இருக்க வேண்டும்.

'சத்தியம் சாந்தம் பொறை கொடை பூசை - சகலவுயிர்கள்
வைத்திடு மெய்யன்பு சேர்ந்தவனாகி மறைவிழி
முத்தம வோரை கணிதமுடன் பிறநூல் - சுத்தமாய்
உணர்ந்தோர் இன்னிலத்தில் சோதிடனாவார்'

எமது பிரதேசத்தில் மக்கள் சோதிடக்கலையை எல்லா விடயங்களுக்கும் பஞ்சாங்கத்தைக் கொண்டு பின்பற்றி வருகிறார்கள். பஞ்சாங்கமானது ஐந்து அங்கங்களாப் பிரித்து எழுதப் பட்டுள்ளது. அவையாவன, வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் எனக் கணிப்பீடு செய்து நூல்வடிவில் வெளிவந்துள்ளது. அதைக் கொண்டு வருடப்பிறப்பு மருத்துநீர்வைத்தல், புத்தாடை அணிதல், ஆலய வழிபாடு, கைவிஷேசம், விருந்துண்ணல், நண்பர்கள் உறவினர்கள் வீட்டுக்குச் செல்லல் சுருக்கமாகக் கூறினால் பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து விடயங்களிலும் எமது பிரதேச மக்கள் பின்பற்றி வருகிறார்கள். இதுவே எங்கள் பிரதேச முக்கியத்துவங்களில் ஒன்றாகும்.

**- கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம் JP**
சோதிடர் வைத்தியர்
குருக்கள் மடம்.

---

# ஓர் எழுத்து பல பொருள்


**அ – எட்டு**
**ஆ – பசு**
**ஈ – கொடு, பறக்கும் பூச்சி**
**ஊ – இறைச்சி**
**ஏ – அம்பு**
**ஐ – அழகு, தலைவன்**
**ஓ – வினா, மதகு**
**மா – பெரிய**
**மீ – மேலே**
**மு – மூப்பு**
**மே – அன்பு, மேன்மை**
**மை – இருள்**
**மோ – முகர்தல், மோத்தல்**
**தா – கொடு**
**தீ – நெருப்பு**
**து – பிரிவு, பறவை இறகு**
**தூ – வெண்மை, தூய்மை**
**தே – நாயகன்**
**தை – தைத்திங்கள்**
**சா – மரணம்**
**சீ – இகழ்ச்சி, சீத்தல்**
**சே – எருது**
**சோ – மதில்**
**பா – பாட்டு, நிழல், அழகு**
**பூ – மலர்**
**பே – மேகம், நுரை**
**பை – பசுமை**
**போ – செல், போதல்**
**நா – நாக்கு**
**நீ – நின்னை**
**நே – அன்பு, நேயம்**
**நை – வருந்து, நைதல்**
**நொ – துன்பம்**
**நோ – நோய், வருத்தம்**
**நௌ – மரக்கலம்**
**கா – பாதுகாப்பு, சோலை**
**கூ – வெல்,பூமி, கூவுதல்**
**கை – ஒப்பனை,கரம்**
**கோ – அரசன், இறைவன்**
**வா – வருக**
**வீ – மலர்**
**வை – கூர்மை,வைத்தல்**
**வௌ – கௌவுதல்**
**யா – கட்டுதல், ஒரு மரம்**
**து – கொடு, உண், பிரிவு**

## கம்பியில்லா தகவல் தொடர்பாடல்

### (Wireless Communication)

சேர் ஜெகதீஷ் சந்திரபோஸ் (Jagdish Chandra Bose) எனும் இந்தியரே 1895 இல் கம்பியில்லா தகவல் தொடர்பாடல் (Wireless Communication) இனை முதன் முதலில் பரிசோதித்தவர்

இவரின் கண்டுபிடிப்பினை ஆதாரமாக வைத்தே பிற்காலத்தில் மார்க்கோணி வானொலியைக்கண்டு பிடித்ததாகக் கூறப்படுகின்றது




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வைகுந்த அம்மானை பாடுவது

## ஒரு மரபுவழிப் பண்பாடு



ஈழத்திலும் இந்தியாவிலும் இந்து மக்களிடையே மரபுவழியாகப் பாடப்பட்டு வரும் நாட்டார் வழக்கியலுள், கதைப்பாடல்கள் மிகவும் சிறப்பிடம் பெறுகின்றன. இவை இன்ப - துன்ப நிகழ்வுகளிலும், ஆலயங்களிலும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப பாடப்பட்டு வருகின்றன. இவற்றுள் மக்கள் மனதில் நீங்காது நின்று இன்பந்தருவன நாட்டார் கதைப்பாடல்களாகும்.

நாட்டார் கதைப்பாடல்கள் எனும் போது, வைகுந்த அம்மானை, பாரத அம்மானை, கஞ்சன் அம்மானை, கண்ணகி வழக்குரை, பவளக்கொடிமாலை, அல்லி அரசாணி மாலை, புவனேந்திரன் அம்மானை, சித்திரபுத்திர நாயனார் கதை, பிள்ளையார் கதை, நல்லதங்காள் கதை, காத்தவராயன் கதை, கரகாட்டப் பாடல்கள், நாட்டுக் கூத்து முதலான கதை தழுவிய பாடல்களைக் கூறலாம்.

வைகுந்த அம்மானை என்ற கதைப்பாடல்களை இங்கு கவனிப்போம். இது பாரதக் கதையில் யுத்த காண்டத்தை அடுத்து, பாண்டவர், விஷ்ணுபதம் நாடி வைகுந்தம் செல்லும் கதையை உன்னதமாக எடுத்தியம்புகிறது. நாட்டுப்புற மக்களால் வாய்மொழி மரபாகப் பாடப்பட்டு வந்த இவ் வைகுந்த அம்மானை பின்பு ஏட்டு வடிவம் பெற்றுப் பாடப்பட்டு வருகின்றது.

கற்பனைத் திறனுடன், சொற்சுவை, பொருட்சுவை, சந்தச்சுவை நிறைந்த சுந்தரக் காவியமாக வீடுகள் தோறும் பாடப்பட்டு வந்தன. இன்று, மரணம் ஏற்பட்ட வீடுகளில் 31ம் நாள்வரை இக் கதைப்பாடல் பாடப்பட்டு வருகின்றன. ஒருவருக்கு விபத்தோ, இயற்கை மரணமோ ஏற்பட்ட போது, ஆறாத்துயருடன் இருக்கும் உள்ளங்களினை இப்பாடல்கள் படிக்கப்படும் போது ஓரளவு ஆறுதல் அடையச் செய்கின்றன. வைகுந்தம் செல்வதற்குப் பஞ்ச பாண்டவர்கள் விடைபெறும் நேரம் குந்தியும், காந்தாரியும் படும் துயர் உள்ளத்தை உருக்கும் காட்சியாக அமைகிறது. இதுபோல் அவர்கள் வனத்தினூடே செல்லும் போது, அசுரர்களால் படும் துன்பமும் தாங்கொணாத் துன்பத்தைக் காட்டி நிற்கின்றன. இவற்றைப் பாட கேட்டுக்கொண்டிருக்கும் மக்கள், தமக்கு ஏற்பட்ட இழப்பை விட இது மிகவும் துன்பியல் நிகழ்வுகளே என உள்ளத்தை ஆறுதல் அடையச்செய்யும்.

பாரதப் போரில் கௌரவர்களைப் பஞ்ச பாண்டவர்கள் வெற்றிபெற்ற பின்பு தருமரது உள்ளம் நிலையாமையை நாடுகின்றது. அற்ப ஆசைக்காக என் சகோதரரான கௌரவர்களையும் அப்பாவி உயிர்களையும் இழந்தோமே இனி ஆசைவேண்டாம் என்று இருக்கும் வேளையில், கிருஷ்ணர் மூலம் கலியுகம் பிறக்கப் போவதை உணர்கிறார். கலியுகம் பிறந்தால் மூத்தவரை இளையோர் மதியார், பெற்றோரைப் பிள்ளைகள் பேணார் ஆதலால் இப்பேற்பட்ட உலகில் நாம் இனிமேல் இருக்கக் கூடாது என எண்ணித் தம் தம்பியர் நால்வருடனும் திரௌபதி பின்தொடர வைகுந்தம் நோக்கிச் சென்றனர். போகும் வழியில் பெரிய பாம்பாகவும், கல் மலையாகவும், நெருப்பு ஆறாகவும், அசுரர்களாகவும் வந்து கடும் துன்பத்துக் குள்ளாக்குகின்றனர் இவர்கள். இவற்றையெல்லாம் எதிர்கொண்டு வனத்தினூடே செல்லும் போது, திரௌபதி, சகாதேவன், நகுலன், அருச்சுனன், வீமன் என ஒவ்வொருவராக இயற்கை எய்துகின்றனர். இறுதியாக தருமர் மட்டுமே அழுது புலம்பிக் கொண்டு வைகுந்தம் சேர்கிறார். இக் கதையைக் கேட்போருக்கும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்போருக்கும் உள்ளத்தை உருக்கும் கதைகளாக இவை அமைகின்றன.


இதனால் மரணம் ஏற்பட்ட இந்து மக்களது வீடுகளில் இது படிக்கப்படுவது மரபாகிவிட்டது. இக் கதைப்பாடலை ஒருவர் பாட, இன்னொருவர் அதற்கு விளக்கம் கூறுவார். இதனைக் கேட்பதற்கென்றோ ஒரு கூட்டம் சூழ்ந்திருக்கும். இக்கதையில் முனிவரது சாபம், பரிசித்து மன்னன் முனி புங்கவை, சீடர்கள் ஆகியோர்கள் பட்ட துன்பங்கள் முதலான கதைகளுடன் சமய சமூகக் கதைகள் என சுமார் 45க்கு மேற்பட்டவை வகையுற வனையப்பட்டுள்ளன. அத்தோடு இக்கதையைப் படிப்போரும் கேட்போரும், கரும்பட்டு வெண்பட்டா குவது போல் பாவம் செய்தவர்களும் நல்லவர்களாக மாறுவர் என்றும் அவர்களுக்கு சுவர்க்கம் கிடைக்கும் என்றும் வாழிகூறி வாழ்த்தி முடிவுறுகின்றது.

**திரு. தா. கோபாலகிருஷ்ணன்** M.A
குமரன் வீதி, களுவாஞ்சிகுடி.


## பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை (Plastic Surgery)


சுஷ்ருதா எனப்படும் இந்திய மருத்துவ மேதையினா லேயே பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை முதன் முதலில் மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. சுஷ்ருதா வினால் மூலிகை மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சை மருத்துவம் பற்றி பல நூல்களும் எழுதப்பட்டுள்ளன

இவரின் திறம்வாய்ந்த மருத்துவப் பணியினாலும் சேவையினாலும் இந்தியாவில் இவர் சத்திரசிகிச்சை மருத்துவத்தின் தந்தை எனவும் அழைக்கப்படுகிறார்
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமூகத்தின் பாரம்பரியம் அதிகம் அறியப்படுவது உணவுக்கலாசாரம் ஊடாகவே. ஒவ்வொரு நாட்டையும், அம்மண்ணையும் அழகுறச் செய்யும் உள் அலங்காரங்களே பாரம்பரிய உணவுப் பண்டங்களாகும். உலகில் எந்த நாகரீகங்களாக இருந்தாலும் சரி அத்தனையையும் உலகிற்கே பரப்பியவர்கள் தமிழர்கள் என்பதற்கான பல சான்றாதாரங்கள் பழந்தமிழ் இலக்கியங்களிலே பரந்து விரிந்து கிடக்கின்றன. அவ்வகையில் உணவுக் கலாசாரங்கள் பற்றியும் அவை பற்பல விடயங்களைத் தன்னகத்தே தாங்கியுள்ளன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, மடைநூல், திருக்குறள் போன்றதான பல இலக்கிய நூல்கள் அவற்றை பறைசாற்றி நிற்கின்றன. சங்க காலத்தில் 3000 வகையான உணவுகள் பயன்பாட்டிலிருந்ததாக அறியக் கிடைக்கின்றது. "எது எமக்கு உணவாக இருக்கின்றதோ, அதுவே எமக்கு மருந்தாக அமைய வேண்டும்" என்கின்ற கோட்பாட்டை முற்று முழுதாக உணவின் தன்மை பற்றி பிரதிபலித்து நிற்கும் சித்தரின் நூலான "பதார்த்த குண சிந்தாமணி" நூல் தாங்கி நிற்கின்றது. இவ்வாறாக உலகிற்கே எடுத்துக் காட்டாக அமைந்த தமிழர்களது உணவுப் பாரம்பரியம் இன்றைய சூழலில் எங்கே சென்று விட்டது என்றால் அது மிக மன வேதனைக்குரிய பதிலைத்தான் எம்மிடம் விட்டுச் செல்கின்றது. "உணவே மருந்து, மருந்தே உணவு" என்றவாறு வாழ்ந்த எமது முன்னோரின் உணவுப் பாரம்பரியங்களை மெல்ல மெல்லக் கொன்று இன்றைய பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் உடனடியாகத் தயாராகும் துரித உணவுகளுக்குள் எம்மை நாம் ஆட்படுத்தி பிறந்த குழந்தை முதல் முதியவர் வரை "மருந்தே உணவு" என்கின்ற அளவிற்கு மருந்து, மாத்திரைகளுடன் உலா வருகின்றோம்.

எமது முன்னோர்களது உணவுக் கையாளுகையினை நோக்குமிடத்து சிறு தானிய வகைகளான வரகு, தினை, கேப்பை, கம்பு, குதிரைவாலி, சாமை, குரக்கன் போன்றவற்றை பயன்படுத்தினர். மாமிச உணவுகளாக நாட்டுக்கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி, மீன், நண்டு,

# பாரம்பரிய உணவின் முக்கியத்துவம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறால் முதலியவற்றையும் வாழைக்காய், வாழைப்பூ வாழைத்தண்டு, முருங்கைக்காய், முருங்கை இலை, குறிஞ்சா இலை, மாம்பாஞ்சான் இலை, பொன்னாங்கண்ணி, பாகல், பயற்றை, வெண்டிக்காய், பூசணிக்காய் போன்ற தான நாட்டுக் காய்கறிகளையும் வாழைப்பழம், பனம்பழம், பப்பாசிப்பழம், பூவன் பழம் போன்ற பல பழவகை களையும் அன்றாட உணவில் சேர்த்துக் கொண்டனர். அத்துடன் வெண் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், தேங்காய் சோறு, எள்ளுச் சோறு, தயிர்ச் சோறு, உளுந்து களி, வெந்தய களி, குரக்கன் களி என்பவையே அவர்களது அதிகப்படியாக பயன்பாட்டிலிருந்த உணவுப் பண்டங்களாக அமைந்தன. அதுமட்டுமல்லாது கடுகு இட்டு காய்கறிகளைத் தாளிப்பது, பசுவெண் ணெய்யில் பொரிப்பது, முளிதயிர் பிசைந்து தயிர்க் குழம்பு வைப்பது, மோரில் ஈயலை (அகத்தி) ஊற வைத்து புளிக்கறி சமைப்பது என்பதனைக் குறிப்பிட்டுக் காட்ட முடியும்.

இன்று ஒரு வீட்டில் களி கிண்டக்கூடிய தன்மை இருக்கின்றதா என்று பார்ப்போமானால் அதற்கான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவேயுள்ளது. அது ஏன் அன்றைய காலகட்டத்தில் நல்ல உடல்வன்மைக்கும், உடல் வலுவிற்கும் காரணம் அவர்கள் உண்ட உணவு களாகும். காலையில் தோட்ட வேலைக்கு செல் பவர்கள் வெந்தய களி, கேழ்வரகுக்களி, உளுத்தங்களி, சோளக்களி உண்டு வந்தனர். இது ஒரு திடப்பொருள் உணவு என்பதால் ஊட்டத்திறன், உண்டாற்றல், உந்து சக்தி என்பன நன்றாகக் கிடைத்தது. அதுமட்டுமல்லாது மிகப் பிரதானமான காலையுணவாக பழஞ்சாதமே காணப்பட்டது.

அன்று எமது சமையலறை அடுக்குகளை நிரப்பியவை மிளகு, சீரகம், உள்ளி, வெந்தயம், மல்லி, கடுகு, பெருங்காயம் முதலான மூலிகைப் பொருட்களே. இன்று எமது சமையலறைகளை சோஸ் வகைகளும், மசாலாக்களும், நிறப்பவுடர்களுமே அலங்கரிக்கின்றன. சமைப்பதற்காக வேறு உலோகங்களைப் பயன்படுத்தும் போதும், பரிமாறும் போதும் இரசாயன மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்த எமது முன்னோர்கள் மண்ணாலான பாத்திரங்கள், வாழையிலை, மந்தாரை இலைகளைப் பயன்படுத்தினர். காலையில் நீராகாரத் தையே உண்டார்கள். தயிரை விட மோரே முக்கிய இடம்பெற்றது. சமையலில் மஞ்சள் பொடி முக்கிய இடத்தினை வகித்தது. உணவுப் பொருட்கள் வேகும் போது சத்துக்கள் இழந்து விடாமல் இருக்கவும், குடற் புண்ணை ஆற்றவும் அது பயன்படுகிறது. அதுமட்டுமல்ல எமது மூதாதையர்கள் இரவில் செப்புப் பாத்திரத்தில் துளசி இலையை ஊற வைத்து அதிகாலையில் அந் நீரைக் குடித்து தியானத்தில் அமர்ந்திருந்தார்கள். இவற்றையெல்லாம் உற்று நோக்குமிடத்து விஞ்ஞான ரீதியாக எமது முன்னோர்கள் எமக்காக விட்டுச் சென்ற உண்மைகளாகும்.

ஆனால் இன்றைய இயந்திரமயமான சூழலில் முற்று முழுதாக "பாஸ் பூட;" எனப்படும் வேக உணவு கலாசாரத்திற்குள் நாம் ஆயுள் கைதியாகிவிட்டோம். பாரம்பரியமான சத்தான உணவுகளை மறந்து, சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து புரதம், விற்றமின்கள், கனிச் சத்துக்கள் மிக மிக குறைந்த அளவிலும், அதிகளவான உப்பையும், கொழுப்பையும் கொண்ட துரித உணவு களுக்கு பழக்கப்பட்டு விட்டோம். பாஸ்பூட் எனப்படும் வேக உணவுக் கலாசாரம் இன்று நகர்ப்புறங்களை எழுபது வீதம் ஆக்கிரமித்து விட்டதாக குறிப்பிடப் படுகின்றது. இத்துரித உணவுகளுக்கு சுவைதான் அதிகளவாக இருக்குமே தவிர இதில் சேர்க்கப்படும் நிறச் சாயங்கள் அஜினமோட் போன்ற வேதிப் பொருட்கள் குடலுக்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றது. எள்ளுச் சோறு, கொள்ளுச் சோறு, கடுகுச் சோறு, பழஞ்சாதம், வெந்தயக் கறி, உளுத்தங்களி, ரசம், பச்சடி என்று மருத்துவக்குணம் கொண்ட மூலிகைப் பொருட்களை உணவில் சேர்த்து உண்ட பரம்பரை யிலிருந்து எழுந்த நாம் இன்று அவ்வுணவுப் பொருட்களையெல்லாம் அடியோடு மறந்துவிட்டு நாளைய விருட்சங்களாக மலரும் எம் சிறார்களுக்கு நூடில்ஸ், பீசா, புரியாணி, பிறைட் றைஸ் போன்றவற்றிற்கு பழக்கப்படுத்துவது மட்டுமல்லாது நோயையும் விலைகொடுத்து வாங்குகின்றோம்.

இத்துரித உணவின் ஆக்கிரமிப்பினால் தொற்றா நோய்களான நீரிழிவு, இருதயநோய், புற்றுநோய், எலும்பு மூட்டு நோய் என்பவை உருவாகுவது மட்டுமல்லாது இன்றைய இளம் தலைமுறையினருக்கு இரண்டாம் தர நீரிழிவு நோய்க்கும் வித்திடுவதாக அறியப்பட்டுள்ளது. மேலும் ஞாபகசக்தி குறைவு, கவனக்குறைவு, திட்டமிட்டு செயற்படும் தன்மை குறைவு, மனச்சோர்வு, உடல் எடை அதிகரிப்பு, சிறுவயதில் பருவமடைதல் என இன்னோரன்ன பல பிரச்சினைகளை உருவாக்குவதாக அண்மைக்கால ஆய்வுத் தரவுகள் வெளிப்படுத்துகின்றன.


இப்பிரச்சினைகளில் இருந்து நாம் முற்றாக விடுபட வேண்டுமாயின், வெறுமனே பாரம்பரிய உணவுப் பொருட்களை காட்சிப்படுத்துவதன் வாயிலாகவோ அல்லது விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்தவத னாலோ சாத்தியமாகாது. பாரம்பரிய உணவுக்கலாசாரம் தொடர்பாக ஒவ்வொரு தனி மனிதனும் தன் மனதளவில் மாற்றங்களைக் கொண்டு வந்து பின்பற்றும் போது தான் எம்மையும் பாதுகாத்து எமது எதிர்காலத் தூண்களாக மிளிரும் இளம் சந்ததியினரையும் நோயற்ற ஒரு ஆரோக்கியமான, மலர்ச்சியான ஒரு சூழலில் வாழ்வதற் கான நிலைமையினை உருவாக்க முடியும்.

**ஏ. டிமாலினி,**
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், களுவாஞ்சிகுடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்முனை தென் எருவில் பற்று பிரதேச கலாசாரப்பேரவையினால் கௌரவிக்கப்படும் கலைஞர்கள்


# மூத்த கலைஞர் கௌரவிப்பு




திரு சின்னத்தம்பி சிவராசா



திரு கந்தவனம் தெய்வநாயகம்



திரு கணபதிப்பிள்ளை இராசசிங்கம்



திரு கதிர்காமத்தம்பி சிவபாதம்



திரு கந்தப்பன் ரவீந்திரன்

# இளங்கலைஞர் பாராட்டு



திரு இராஜறட்ணம் சபாறட்ணம்



திரு சண்முகம்பிள்ளை செல்வப்பிரகாஷ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழுப்பெயர் : **திரு சின்னத்தம்பி சிவராசா**

விலாசம் : **புலவர்மணி வீதி, குருக்கள் மடம்**

பிறந்த திகதி : **1940.07.10**

கௌரவிக்கப்படும் துறை : **கூத்து**

குருக்கள் மடத்தை பிறப்பிடமாகக் கொண்டு வசித்து வரும் மூத்த கலைஞர் திரு சின்னத்தம்பி சிவராசா கூத்துக் கலைக்கு அளப்பரிய சேவையாற்றி வருகின்ற கலைஞர்களுள் ஒருவராவார். சிறுவயதிலிருந்து கூத்து பார்ப்பதில் ஆர்வம் கொண்ட இவர் தனது 18வது வயதில் கூத்தில் பாத்திரமேற்று நடித்து தனது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார். அல்லி அருச்சுனா இராம நாடகம், குருஷேத்திரப்போர், வள்ளி திருமணம் போன்ற கூத்துக்களில் பாத்திரமேற்று தனது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

காலப்போக்கில் கூத்தில் இவருக்கு இருந்த ஆர்வம் மேலும் அதிகரிக்க அண்ணாவியார் ஒருவருடன் இணைந்து கூத்துக்கலையை ஏனைய கலைஞர்களுக்கு பழக்கும் முயற்சியில் ஈடுபட்டார். தற்காலத்திலும் கூட மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலகப் பிரிவில் அரங்கேற்றப்படும் கூத்துகளுக்கு இவர் அண்ணாவியராகவும், உதவி அண்ணாவியராகவும் செயற்பட்டு வருகிறார் அண்மையில் 20 வருடங்களுக்கு முன் குருஷேத்திரப்போர் என்ற கூத்துக்கு உதவி அண்ணாவியாராக இருந்து இக்கூத்தினை பழக்கி அரங்கேற்றியுள்ளமை இவரின் கலை ஆர்வத்திற்கு சான்றாகும். அதுமட்டுமன்றி கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் நடைபெறும் கூத்து அரங்கேற்றத்திற்கும் இவரை உதவி அண்ணாவியராக அழைப்பதும் குறிப்பிடத்தக்கது. இக்கூத்துக்கலை வளர்சசிக்கு கலைஞரின் பங்களிப்பினை பாராட்டி கௌரவிக்கும் முகமாக மண்முனை தென்எருவில் பற்று பிரதேச கலாசாரப் பேரவை இவருக்கு 2018ஆம் ஆண்டுக்கான முத்த கலைஞர் கௌரவிப்பினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றது.



முழுப்பெயர் : **திரு.கந்தவனம் தெய்வநாயகம்**

விலாசம் : **வன்னியார் வீதி - களுதாவளை மத்தி**

பிறந்த திகதி : **1942.10.27**

கௌரவிக்கப்படும் துறை : **கிராமிய நடனம், கூத்து**

களுதாவளை மத்தியை பிறப்பிடமாகக் கொண்டு வசித்துவரும் மூத்தகலைஞர் திரு. கந்தவனம் தெய்வநாயகம் அவர்கள் தனது 10வது வயதில் கலைப்பயணத்தை ஆரம்பித்தார். இவர் கிராமிய நடனம், கூத்து முதலான பாரம்பரிய கலைகளை கலைஞர்களுக்கு பழக்கி மேடையேற்றி அனைவரினதும் பாராட்டுக்களைப் பெற்று வருகின்றார். 1952, 1954ஆம் ஆண்டுகளில் வசந்தன் கூத்து, 1976ல் ஜானகி கலியாணம், 1978ல் உருப்பிணி கல்யாணம் போன்ற கூத்துக்களில் பாத்திரமேற்று நடித்துள்ளதுடன் இவர் தனது குழுவினருடன் இணைந்து கூத்துக்களை அரங்கேற்றியும், கூத்திற்கு பக்க பாட்டு பாடுபவராகவும் இருந்து வருகின்றார். இவர் தனது குழுவினருடன் இணைந்து பயிற்றுவித்த கூத்துகள் தேசிய, மாகாண ரீதியில் இடங்களை பெற்றுள்ளன. 1993.12.16ல் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நாட்டுக்கூத்து போட்டியில் சந்திரகாசன் திருணம் கூத்து தேசிய ரீதியில் 2ம் இடத்தினையும், 1999ல் சுவாமி விவேகானந்தர் நினைவு தினத்திற்காக கொழும்பு இந்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியில் இடம்பெற்ற போட்டியில் இடும்பன் வதை / வீமன் கடல் கன்னி திருமணம் கூத்து தேசிய ரீதியில் 1ம் இடத்தினையும் 2013.07.05ல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பாரம்பரிய கூத்து போட்டியில் வடமோடி கூத்து சந்திரகாசன் திருமணம் 1ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவர் தற்போது களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய அனுசரனையுடன் 2 வருடங்களுக்கு அல்லது ஒரு வருடத்திற்கு ஒரு தடவை வசந்தன் கூத்து, மாரியம்மன் கரகம் இவற்றினை பயிற்றுவித்து செட்டிபாளையம் கண்ணகியம்மன் ஆலய உற்சவத்தில் அரங்கேற்ற பேதிலும் தனது பங்களிப்பினை வழங்கி வருகின்றார்.

அத்தோடு களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலயத்தில் 22 வருடங்களுக்கும் மேலாக கந்தசஸ்டி விராதாலங்களில் கந்த புராணம் பாடி வருவதுடன் செட்டிபாளையம் கண்ணகியம்மன் ஆலயத்தில் 28 வருடங்களுக்கும் மேலாக கண்ணகியம்மன் திருக்குளிர்த்தியும் பாடியுள்ளார்.

கலைக்காக இவர் வழங்கிய சேவையை பாராட்டி களுதாவளை இந்து இளைஞர் மன்றத்தினால் 2000ல் பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன் கிராமியக் கலைக் கழகத்தினரால் 'கிராமியக் கலைத் தொண்டன்' என்ற கௌரவ விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கிராமிய நடனம் கூத்துக் கலை வளர்ச்சிக்கு கலைஞர் வழங்கிவரும் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக மண்முனை தென்எருவில் பற்று பிரதேச கலாசாரப் பேரவை இவருக்கு 2018ஆம் ஆண்டுக்கான மூத்த கலைஞர் கௌரவிப்பினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றது.



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | **திரு கணபதிப்பிள்ளை இராசசிங்கம்** |
| விலாசம் | : | **8 ஆம் வட்டாரம், துறைநீலாவணை.** |
| பிறந்த திகதி | : | **1945.10.26** |
| கௌரவிக்கப்படும் துறை | : | **நாடகம்** |

துறைநீலாவணை 8 ஆம் வட்டாரத்தில் வசித்து வருகின்ற மூத்த கலைஞர் திரு கணபதிப்பிள்ளை இராசசிங்கம் அவர்கள் நாடகத்துறையில் சிறந்த ஈடுபாடு கொண்டவர் இவர் தனது 15 வது வயதில் பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் நாடகத்தில் நடித்து வந்துள்ளார். நடிப்பு துறையில் மட்டுமன்றி நாடகங்களை தயாரிப்பதிலும், பழக்குவதிலும் சிறந்த ஈடுபாடுடையவர். இவர் இதுவரைக்கும் 50 க்கும் மேற்பட்ட நாடகங்களை மேடையேற்றியுள்ளார். கண்டிராசன் நாடகத்தில் விக்கிரமராசசிங்கனாகவும், பொன்னியின் அடிமை நாடகத்தில் கம்பராகவும், மாவீரன் தக்கன் நாடகத்தில் சிவபெருமானாகவும் பாத்திரமேற்று நடித்துள்ளார். நீலா எனும் பெயரில் என்ற பெயரில் இயங்கி வந்த நாடக மன்றத்தில் உறுப்பினராக இருந்து பல நாடகங்களை உள்ளுரிலும், வெளியூரிலும் மேடையேற்றி பலரினதும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார்.

நாடகத்துறைக்கு கலைஞர் வழங்கிய பங்களிப்பினைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச கலாசாரப் பேரவை இவருக்கு 2018 ஆம் ஆண்டுக்கான மூத்த கலைஞர் கௌரவிப்பினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றது.


Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழுப்பெயர் : **திரு.கதிர்காமத்தம்பி சிவபாதம்**
விலாசம் : **விபுலானந்தர் வீதி, களுவாஞ்சிகுடி - 08**
பிறந்த திகதி : **1949.05.15**
கௌரவிக்கப்படும் துறை : **கவிதை**

களுவாஞ்சிகுடி 8ஆம் வட்டாரத்தில் வசித்து வருகின்ற மூத்த கலைஞர் திரு கதிர்காமத்தம்பி சிவபாதம் அவர்கள் கவிதை எழுதுவதில் சிறந்த ஈடுபாடு கொண்டவர் இவர் வாழைச்சேனை காகித ஆலையில் வேலை செய்யும் போது காகித ஆலை ஊழியர்களால் வெளியிடப்பட்ட காகித மலர் எனும் புத்தகத்திற்கு பல ஆக்கங்களை எழுதியுள்ளார். நோர்வே அரசாங்கத்தினால் நடாத்தப்பட்ட சிறுகதை போட்டியில் பங்குபற்றி உலக ரீதியில் 10வது இடத்தினை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இலங்கை திரைப்படக் கூட்டுத் தாபனத்திற்கு 'அழியாத கோலங்கள்' எனும் திரைப்படக்கதை வசனங்களை எழுதி சான்றிதழ் பெற்றுள்ளார்.

தற்பொழுது ஓய்வுபெற்ற நிலையிலும் கூட பல வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும் இலக்கியத்துறைக்கு தன்னை அர்ப்பனித்து வருகின்றார். இவர் கடந்த 2017ம் ஆண்டு 'சிந்தனை முத்துக்கள்' எனும் பெயரில் கவிதை தொகுப்பு நூலினை வெளியிட்டுள்ளமை இவரின் இலக்கியப் பணிக்கு சிறந்த எடுத்தக் காட்டாகும்.

ஆக்க இலக்கியப் பணியில் கவிதை துறையில் கலைஞர் வழங்கிவரும் பங்களிப்பினை பாராட்டி கௌரவிக்கும் முகமாக மண்முனை தென்எருவில் பற்று பிரதேச கலாசாரப் பேரவை இவருக்கு 2018 ஆம் ஆண்டுக்கான மூத்த கலைஞர் கௌரவிப்பினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றது.



முழுப்பெயர் : **திரு.கந்தப்பன் ரவீந்திரன்**
விலாசம் : **விநாயகர் வீதி, பெரியகல்லாறு - 02**
பிறந்த திகதி : **1949.11.25**
கௌரவிக்கப்படும் துறை : **ஆக்க இலக்கியம்**

பெரிய கல்லாறு 02ல் வசித்து வருகின்ற திரு.கந்தப்பன் ரவீந்திரன் அவர்கள், கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், ஊடகம் போன்ற துறைகளில் மிகவும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வரும் மூத்த கலைஞர்களுள் ஒருவராவார். இவர் இதுவரைக்கும் சந்தனரோஜாக்கள், ஒரு வானவில் ரோஜாவாகின்றது, இதழ்கள் இல்லா ரோஜாக்கள் (தினகரன் வெளியீடு) போன்ற நாவல்களையும், 10க்கு மேற்பட்ட சிறுகதைகளையும், 10 சிறுவர் நாடகங்களையும் 10 மேடை நாடகங்களையும், பிறவிகள் தோறும் இருந்தா நாடகம் (25 வார வானொளி வெளியீடு) எழுதி வெளியிட்டுள்ளார்.

இவர் இலக்கியத்துறைக்கு ஆற்றிவரும் சேவைக்காக 1999ல் பிரதேச மட்டத்தில் சிறுகதையில் குறுமணிப்பட்டம் வழங்கப்பட்டது. றொசாலயா கலை கலாசார பொதுசேவை நிலையத்தினூடாக 1975ம் ஆண்டிலிருந்து நாடகம், பரதம் போன்ற செயற்பாடுகளுடன் கல்வி சமூக செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.

ஊடகத்துறையில் USAID ஊடாக INKLEENEWS பிரிவில் 6 மாத பயிற்சி, மற்றும் அரச ஊடகத்துறை தனியார், ஊடகத்துறைகள் பயிற்சியும் பெற்று ஊடகத்துறையிலும் தனது பங்களிப்பினை வழங்கி வருகின்றார்.

ஆக்க இலக்கியம், ஊடகம், நாடகம் போன்ற பல துறைகளில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் கலைஞரின் சேவையினை பாராட்டி கௌரவிக்கும் முகமாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச கலாசாரப் பேரவை இவருக்கு 2018ம் ஆண்டுக்கான மூத்த கலைஞர் கௌரவிப்பினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் பாராட்டு



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | **திரு இராஜறட்ணம் சபாறட்ணம்** |
| விலாசம் | : | **வம்மிக்கேணி வீதி, செட்டிபாளையம் தெற்கு.** |
| பிறந்த திகதி | : | **1983.03.03** |
| கௌரவிக்கப்படும் துறை | : | **கவிதை** |

செட்டிபாளையம் தெற்கை பிறப்பிடமாகக் கொண்டு வசித்து வரும் திரு.இராஜறட்ணம் சபாறட்ணம் அவர்கள் கவிதைத் துறையில் சிறந்த பங்களிப்பினை வழங்கிவரும் இளங்கலைஞர்களுள் ஒருவராவார். இவர் 23 வருடங்களாக கவிதைத் துறையில் ஈடுபட்டு வருகின்றார். 2005ல் 'இதயத் தூறல்' எனும் கவிதைத் தொகுப்பினையும், 2011ல் 'சுடுகாட்டு ரோஜா' எனும் கவிதைத் தொகுப்பினையும், 2012ல், இப்படிக்கு இதயம் எனும் கவிதைத் தொகுப்பினையும் 2013ல் 'உனை நீயே செதுக்கு' எனும் கவிதைத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார். இவர் சொற்சிற்பிசபா எனும் புனை பெயரில் கவிதைகளை எழுதி வருகின்றார். கவிதை மட்டுமன்றி சிறுகதை, குறும்படக் கலையிலும் சிறந்த ஈடுபாடு கொண்டவர்.

ஆக்க இலக்கியத்துறையில் கலைஞர் வழங்கி வரும் பங்களிப்பினை பாராட்டு முகமாக மண்முனை தென் எருவில் பற்று கலாசாரப் பேரவை இவருக்கு 2018க்கான இளங்கலைஞர் பாராட்டினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றது.



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | **திரு சண்முகம்பிள்ளை செல்வப்பிரகாஷ்** |
| விலாசம் | : | **கிழக்கு வீதி, தேற்றாத்தீவு - 02.** |
| பிறந்த திகதி | : | **1990.09.11** |
| கௌரவிக்கப்படும் துறை | : | **கிராமிய நடனம்** |

தேற்றாத்தீவு 02ஐ பிறப்பிடமாகக் கொண்டு வசித்து வரும் இளங்கலைஞர் திரு. சண்முகம்பிள்ளை செல்வப்பிரகாஷ் அவர்கள் கிராமியக் கலைக்கு அளப்பெரும் சேவையாற்றி வருகின்ற இளங்கலைஞர்களுள் ஒருவராவார் இவர் இசை, நடனம், நாடகம் ஆகிய துறைகளில் கலைஞர்களை பயிற்றுவித்து கலையரங்க செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார். இதற்கும் மேலாக கதாப்பிரசங்கம், வில்லிசை போன்ற சமய நிகழ்வுகளையும் நிகழ்த்தி வருகின்றார். தனது கிராமத்தில் தேனுகா கலைக்கழகம் எனும் பெயரில் கலைமன்றத்தினை ஸ்தாபித்து அதனை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்து அக்கலை மன்றத்தினூடாக மாணவர்களுக்கு கிராமிய நடனங்களை பழக்கி, ஆலய உற்சவ நிகழ்வுகள் மற்றும் கலாசார நிகழ்வுகளின் போது அரங்கேற்றி வருகின்றார். இவரால் நெறியாள்கை செய்யப்பட்ட வில்லிசை, கிராமியப்பாடல், மாகாண தேசிய மட்டங்களில் 1ம், 2ம் இடங்களை பெற்றுள்ளன.

கிராமிய கலை வளர்ச்சிக்கு கலைஞர் வழங்கிவரும் பங்களிப்பினை பாராட்டும் முகமாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச கலாசார பேரவை இவருக்கு 2018ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் பாராட்டினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றது.

**தொகுப்பு : திருமதி ராதிகா கருணாகரன்**
கலாசார உத்தியோகத்தர்,
மண்முனை தென் எருவில்பற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச கலாசார விழா போட்டி முடிவுகள் - 2018

## பாடசாலை மட்டம்

**கட்டுரை - கனிஷ்ட பிரிவு**

01. முதலாமிடம் - செல்வி நி.யனகாங்கி - மட்/பட் குருமண்வெளி சிவசக்தி வித்தியாலயம்
02. இரண்டாமிடம் - செல்வி கௌ.நிதர்சனா - மட்/பட் களுதாவளை ம.வி
03. மூன்றாமிடம் - செல்வி ச.ஏனுஜா - மட்/பட் களுதாவளை ம.வி

**கட்டுரை - சிரேஷ்ட பிரிவு**

01. முதலாமிடம் - செல்வி தி.லேனுகா - மட்/பட் மகிழூர் சரஸ்வதி ம.வி
02. இரண்டாமிடம் - செல்வி ஆ.குஷேணிஹா - மட்/பட் கோட்டைக்கல்லாறு ம.வி
03. மூன்றாமிடம் - செல்வி ப.இலட்சியா - மட்/பட் பட்டிருப்பு தேசிய பாடசாலை

**கவிதை - கனிஷ்ட பிரிவு**

01. முதலாமிடம் - செல்வி வி.லீனுஜா - மட்/பட் கோட்டைக்கல்லாறு ம.வி
02. இரண்டாமிடம் - செல்வி உ..துலானிகா - மட்/பட் செட்டிபாளையம் ம.வி
03. மூன்றாமிடம் - செல்வி வீ.வுறோமிகா - மட்/பட் களுதாவளை ம.வி

**கவிதை - சிரேஷ்ட பிரிவு**

01. முதலாமிடம் - செல்வி ம.கிருஷினி - மட்/பட் கோட்டைக்கல்லாறு ம.வி
02. இரண்டாமிடம் - செல்வன் வி.விதுராஜ் - மட்/பட் மகிழூர் சரஸ்வதி ம.வி

**ஓவியம் - கனிஷ்ட பிரிவு**

01. முதலாமிடம் - செல்வன் த.கயானுரன் - மட்/பட் மகிழூர் சரஸ்வதி ம.வி
02. இரண்டாமிடம் - செல்வன் ச.சபேசன் - மட்/பட் ஓந்தாச்சிமடம் ஸ்ரீ விநாயகர் ம.வி
03. மூன்றாமிடம் - செல்வன் மு..பிறவிந் - மட்/பட் கோட்டைக்கல்லாறு ம.வி

**ஓவியம் - சிரேஷ்ட பிரிவு**

01. முதலாமிடம் - செல்வன் சி.அகிலேஸ் - மட்/பட் களுதாவளை ம.வி
02. இரண்டாமிடம் - செல்வன் ஜெ.விதுர்ஜன். - மட்/பட் துறைநீலாவணை ம.வி
03. மூன்றாமிடம் - செல்வன் வி...ஜதுஷன் - மட்/பட் துறைநீலாவணை ம.வி

**கிராமிய இசை - கனிஷ்ட பிரிவு**

01. முதலாமிடம் - மட்/பட் களுதாவளை ம.வி
02. இரண்டாமிடம் - மட்/பட் பட்டிருப்பு தேசிய பாடசாலை
03. மூன்றாமிடம் - மட்/பட் ஓந்தாச்சிமடம் ஸ்ரீ விநாயகர் ம.வி

**கிராமிய இசை - சிரேஷ்ட பிரிவு**

01. முதலாமிடம் - மட்/பட் துறைநீலாவணை ம.வி

**மீனவ நடனம் - கனிஷ்ட பிரிவு**

01. முதலாமிடம் - மட்/பட் களுதாவளை ம.வி
02. இரண்டாமிடம் - மட்/பட் துறைநீலாவணை ம.வி

**அருவி வெட்டு நடனம் - கனிஷ்ட பிரிவு**

01. முதலாமிடம் - மட்/பட் செட்டிபாளையம் ம.வி

**தனி நடனம் (பரதம்) - கனிஷ்ட பிரிவு**

01. முதலாமிடம் - செல்வி க. கஜானி - மட்/பட் ஓந்தாச்சிமடம் ஸ்ரீ விநாயகர் ம.வி
02. இரண்டாமிடம் - செல்வி இ.வினிதா - மட்/பட் செட்டிபாளையம் ம.வி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## திறந்த மட்டம்

**கோலப் போட்டி (மாக்கோலம்)**

| | | |
|---|---|---|
| 01. முதலாமிடம் | - செல்வி பு.பிறேமினி | - எருவில் தெற்கு |
| 02. இரண்டாமிடம் | - செல்வி பொ.பவித்திரா | - எருவில் |
| 03. மூன்றாமிடம் | - செல்வி ம.டிலானி | - செட்டிபாளையம் |
| மூன்றாமிடம் | - செல்வி எஸ்.நிலோஜனா | - களுதாவளை |

**குறவன் குறத்தி நடனம்**

| | | |
|---|---|---|
| 01. முதலாமிடம் | - நிருத்திய கலாமன்றம் | - களுதாவளை |
| 02. இரண்டாமிடம் | - திருவருள் நுண்கலைமன்றம் | - செட்டிபாளையம் |
| 03. மூன்றாமிடம் | - கணேஷாலயா கலாமன்றம் | - பெரியகல்லாறு |

**இசை நாடகம்**

| | | |
|---|---|---|
| 01. முதலாமிடம் | - ஐங்கரா கலைக்கழகம் | - எருவில் |

சர்வதேச சுற்றாடல் தினம் - 2018 இனை முன்னிட்டு 'முறையற்ற பிளாஸ்ரிக் பாவனையினூடாக ஏற்படுகின்ற சூழல் மாசடைதலைத் தவிர்ப்போம்' எனும் தொனிப்பொருளில் பிரதேச செயலகத்தினால் பாடசாலை மற்றும் திறந்த பிரிவில் நடாத்தப்பட்ட ஓவியப்போட்டி முடிவுகள்.

### பாடசாலை மட்டம்

**கனிஷ்ட பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| 01. முதலாம் இடம் | : செல்வன் ர.வகிர்தன் | - | மட்/பட் ஓந்தாச்சிமடம் ஸ்ரீ விநாயகர் மகா வித்தியாலயம். |
| 02. இரண்டாம் இடம் | : செல்வன் இ.மதுஷான் | - | மட்/பட் ஓந்தாச்சிமடம் ஸ்ரீ விநாயகர் மகா வித்தியாலயம். |
| 03. மூன்றாம் இடம் | : செல்வன்.இ.யதுர்ஷன் | - | மட்/பட் ஓந்தாச்சிமடம் ஸ்ரீ விநாகர் மகா வித்தியாலயம். |

**சிரேஷ்ட பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| 01. முதலாம் இடம் | : செல்வன் மு. பிரவித் | - | மட்/பட் கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயம் |
| 02. இரண்டாம் இடம் | : செல்வன்.க. குகானிஷன் | - | மட்/பட் பெரியகல்லாறு மத்திய கல்லூரி |
| 03. மூன்றாம் இடம் | : உ.விபுஜானன் | - | மட்/பட் பெரியகல்லாறு மத்திய கல்லூரி. |

**திறந்த மட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 01. முதலாம் இடம் | : செல்வன்.லி. நந்தீஸ்வரன் | - | செட்டிபாளையம் |
| 02. இரண்டாம் இடம் | : செல்வி.பொ.கஸ்தூரி | - | செட்டிபாளையம் |
| 03. மூன்றாம் இடம் | : செல்வி.ச.நிலோஜனா | - | களுதாவளை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச மட்ட இலக்கிய விழா போட்டி முடிவுகள் - 2018

## பாடசாலை மட்டம்

### பாலர் பிரிவு - கையெழுத்துப் போட்டி

1. முதலாம் இடம்: செல்வி. கோ.கிரனியா- மட்/பட்/மகிழூர்முனை சக்தி வித்தியாலயம்
2. இரண்டாம் இடம்: செல்வன். மு.லிஷானுஜன்- மட்/பட்/மகிழூர்முனை சக்தி வித்தியாலயம்
3. மூன்றாம் இடம்: செல்வி. ஜீ.டேரன்ஸியா- மட்/பட்/ மகிழூர்முனை சரஸ்வதி மகா வித்தியாலயம்.

### சிறுவர் பிரிவு - கையெழுத்துப் போட்டி

1. முதலாம் இடம்: செல்வி. தி.ஜாதவி- மட்/பட்/ தேற்றாத்தீவு மகா வித்தியாலயம்
2. இரண்டாம் இடம்: செல்வி. த.கர்நிஷா- மட்/பட்/ தேற்றாத்தீவு மகா வித்தியாலயம்
3. மூன்றாம் இடம்: செல்வி. நி.ஸவில்லானி குருஸ்- மட்/பட்டிருப்பு தேசிய பாடசாலை

### சிறுவர் பிரிவு - கவிதைப் பாடல்

1. முதலாம் இடம்: செல்வி. தி.ஸிலோமிதா- மட்/பட்/எருவில்/ கண்ணகி மகா வித்தியாலயம்
2. இரண்டாம் இடம்: செல்வி. தி.ஜாதவி- மட்/பட்/ தேற்றாத்தீவு மகா வித்தியாலயம்

### கனிஷ்ட பிரிவு - கவிதைப் பாடல்

1. முதலாம் இடம்: செல்வி. ர.ரேகா- மட்/பட்/ தேற்றாத்தீவு மகா வித்தியாலயம்
2. இரண்டாம் இடம்: செல்வி. க.வோஜினி- மட்/பட்/ எருவில் கண்ணகி மகா வித்தியாலயம்
3. மூன்றாம் இடம்: செல்வன்.வ.குணால்- மட்/பட்/ எருவில் கண்ணகி மகா வித்தியாலயம்

### கனிஷ்ட பிரிவு - கட்டுரைப் போட்டி

1. முதலாம் இடம்: செல்வன். சு.பிரஜித்- மட்/பட்/பெரியகல்லாறு மத்திய கல்லூரி
2. இரண்டாம் இடம்: செல்வி. துலானிகா- மட்/பட்/செட்டிபாளையம் மகாவித்தியாலயம்
3. மூன்றாம் இடம்: செல்வி. அ.திஜாஸ்ஜினி- மட்/பட்/தேற்றாத்தீவு மகா வித்தியாலயம்

### சிரேஷ்ட பிரிவு - கட்டுரைப் போட்டி

1. முதலாம் இடம்: செல்வி. ஆ.குஷேனிஹா- மட்/பட்/கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயம்
2. இரண்டாம் இடம்: செல்வி. ப.கிறிஸ்டினா- மட்/பட்/ எருவில் கண்ணகி மகா வித்தியாலயம்
3. மூன்றாம் இடம்: செல்வன். சி.டிலக்ஷின்- மட்/பட்/ எருவில் கண்ணகி மகா வித்தியாலயம்

### சிரேஷ்ட பிரிவு - பாடல் நயத்தல் போட்டி

1. முதலாம் இடம்: செல்வி. யே.யூடித் மெர்டோனா மட்/பட்/பெரியகல்லாறு மத்திய கல்லூரி
2. இரண்டாம் இடம்: செல்வி. உ.நவேஜிதா மட்/பட்/குருமண்வெளி சிவசக்தி வித்தியாலயம்

### சிரேஷ்ட பிரிவு - நாடகப் பிரதி எழுதுதல் போட்டி

1. முதலாம் இடம்: செல்வி. பா.ஜதுர்ஷா மட்/பட்/குருமண்வெளி சிவசக்தி வித்தியாலயம்
2. இரண்டாம் இடம்: செல்வி. க.டெல்ஷிகா மட்/பட்/பெரியகல்லாறு மத்திய கல்லூரி

## திறந்த பிரிவு

### பாடல் ஆக்கப் போட்டி

1. முதலாம் இடம்: திரு. இ.கோபாலபிள்ளை- பிரதான வீதி, தேற்றாத்தீவு
2. இரண்டாம் இடம்: திரு. சி.தணிகைசீலன்- பிரதான வீதி, தேற்றாத்தீவு-2
3. மூன்றாம் இடம்: திரு. நா.நாகேந்திரன்- கடற்கரை வீதி, களுவாஞ்சிகுடி

### நாட்டார் கலை கற்றல் போட்டி

1. முதலாம் இடம்: திரு. இ.கோபாலபிள்ளை பிரதான வீதி, தேற்றாத்தீவு
2. இரண்டாம் இடம்: திரு. நா.நாகேந்திரன்- கடற்கரை வீதி, களுவாஞ்சிகுடி
3. மூன்றாம் இடம்: திரு. க.விஸ்வலிங்கம்- கடற்கரை வீதி, குருக்கள்மடம்

### இலக்கிய விவரணப் போட்டி

1. முதலாம் இடம்: திரு. இ.கோபாலபிள்ளை- பிரதான வீதி, தேற்றாத்தீவு

### சிறுகதைப் போட்டி

1. முதலாம் இடம்: திரு. தா.கோபாலகிருஷ்ணன் குமரன் கலாமன்ற வீதி, களுவாஞ்சிகுடி
2. இரண்டாம் இடம்: திரு.க.கௌசிகன் பாடசாலை வீதி,தேற்றாத்தீவு
3. மூன்றாம் இடம்: செல்வி. கு.வேணுஜா வைத்தியசாலை வீதி,பட்டிருப்பு

### சிறுவர் கதை

1. முதலாம் இடம்: செல்வி. கு.வேணுஜா- வைத்தியசாலை வீதி,பட்டிருப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பிரதேச மட்ட ஆக்கத்திறன் போட்டி முடிவுகள் - 2018

### பேச்சு - வகுப்பு (1)

01. முதலாம் இடம் : செல்வன் பி.இலக்கியன் – இந்து மேம்பாட்டு, அறநெறிப் பாடசாலை ஒந்தாச்சி மடம்
02. இரண்டாம் இடம் : செல்வன் ச.லேனுகாசனன் – சைவ மகா சபை அறநெறி பாடசாலை, களுவாஞ்சிகுடி
03. மூன்றாம் இடம் : செல்வன் தே.லேமிசாணன் – சைவ மகா சபை அறநெறி பாடசாலை, களுவாஞ்சிகுடி

### பேச்சு - வகுப்பு (2)

01. முதலாம் இடம் : செல்வன் ந.டேஸ்வின் – மண்டபத்தடி பிள்ளையார் அ.பா, பெரிய கல்லாறு.
02. இரண்டாம் இடம் : செல்வி சு.ஹர்சிகா – எருவில் அறநெறிப்பாடசாலை
03. மூன்றாம் இடம் : செல்வி நி.டெர்விஷா – தெய்வ நெறிக் கழக அ.பா, கோட்டைக்கல்லாறு.

### பேச்சு - வகுப்பு (3)

01. முதலாம் இடம் : செல்வி வே.ரிசோமிக்கா – தெய்வ நெறிக் கழகம் அ.பா, கோட்டைக்கல்லாறு.
02. இரண்டாம் இடம் : செல்வன் இ.லிஹிர்தன் – சிவநெறிமன்ற அறநெறி பாடசாலை, குருக்கள் மடம்
03. மூன்றாம் இடம் : செல்வி நி.ஸவில்லானிகுரூஸ் – வலம்புரி மண்டபத்தடி பிள்ளையார் அ.பா,மகிழூர்முனை

### பேச்சு - வகுப்பு (4)

01. முதலாம் இடம் : செல்வி ர.கர்ணிதா – சைவமகாசபை அறநெறி பாடசாலை, களுவாஞ்சிகுடி.
02. இரண்டாம் இடம் : செல்வி ஜெ.சரோமிக்கா – இந்து இளைஞர் மன்ற அ.பா, பெரியகல்லாறு
03. மூன்றாம் இடம் : செல்வி கே.மதுக்ஷிக்கா – மண்டபத்தடி பிள்ளையார் அ.பா, பெரியகல்லாறு

### பேச்சு - வகுப்பு (5)

01. முதலாம் இடம் : செல்வி ஜெ.டோமினா – சைவ மகாசபை அ.பா, களுவாஞ்சிகுடி
02. இரண்டாம் இடம் : செல்வி செ.குருபோதினி – விக்கினேஸ்வரா அ.பா, தேற்றாத்தீவு
03. மூன்றாம் இடம் : செல்வி ரெ.சஜானி – இந்து மத மேம்பாடு அ.பா, ஓந்தாச்சிமடம்

### பேச்சு - வகுப்பு (6)

01. முதலாம் இடம் : செல்வி ந.பதுமிகா – சைவமகாசபை அ.பா, களுவாஞ்சிகுடி
02. இரண்டாம் இடம் : செல்வி த.கிதுஷிகா – இந்து மத மேம்பாட்டு அ.பா, ஓந்தாச்சிமடம்
03. மூன்றாம் இடம் : செல்வி பி.டனிஷா – தெய்வநெறிக் கழகம் அ.பா, கோட்டைக்கல்லாறு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சு - வகுப்பு (7)

01. முதலாம் இடம் : செல்வி ர.கிகாந்திகா – மண்டபத்தடி வலம்புரி பிள்ளையார் அ.பா, மகிழூர்முனை

02. இரண்டாம் இடம் : செல்வி ஜீ.ஹபிலக்ஷயா – மண்டபத்தடி வலம்புரி பிள்ளையார் அ.பா, மகிழூர்முனை

03. மூன்றாம் இடம் : செல்வி அ.அனுக்ஷி – மண்டபத்தடி பிள்ளையார் அ.பா, பெரிய கல்லாறு.

## பேச்சு - வகுப்பு (8)

01. முதலாம் இடம் : செல்வி த.சுகுணா – கலைமகள் அ.பா, மாங்காடு

02. இரண்டாம் இடம் : செல்வன் ம.சஜாங்கன் – சைவ மகா சபை அ.பா, களுவாஞ்சிகுடி

03. மூன்றாம் இடம் : செல்வி ர.இதனியா – மண்டபத்தடி வலம்புரி பிள்ளையார் அ.பா, மகிழூர்முனை

## பேச்சு - வகுப்பு (9)

01. முதலாம் இடம் : செல்வன் ச.டேனுர்ஜன் – இந்துமத மேம்பாட்டு அ.பா, ஓந்தாச்சிமடம்

02. இரண்டாம் இடம் : செல்வி ர.கருணிகா – சிவநெறி மன்ற அ.பா, குருக்கள் மடம்

03. மூன்றாம் இடம் : செல்வி சு.கஜனியா – மண்டபத்தடி வலம்புரி பிள்ளையார் அ.பா, மகிழூர்முனை

## பேச்சு - வகுப்பு (10)

01. முதலாம் இடம் : செல்வன் ஜெ.பிரவீன் – சிவநெறி மன்றம் அ.பா, குருக்கள் மடம்

02. இரண்டாம் இடம் : செல்வன் க.டினுக்ஸ்க்ஷன் – கலைமகள் அ.பா, மாங்காடு

03. மூன்றாம் இடம் : செல்வன் கு.சஜீபன் – சிவன் அறநெறி பாடசாலை, எருவில்

## நாடகம்

01. முதலாம் இடம் : விக்கினேஸ்வரா அறநெறிப் பாடசாலை தேற்றாத்தீவு.

02. இரண்டாம் இடம் : ஸ்ரீ மண்டபத்தடி வலம்புரி பிள்ளையார் அ.பா, மகிழூர்முனை

03. மூன்றாம் இடம் : ஸ்ரீ மகா விஷ்ணு நாகதம்பிரான் அ.பா, குருமண்வெளி

## வில்லுப்பாட்டு

01. முதலாம் இடம் : சைவமகா சபை அ.பா, களுவாஞ்சிகுடி

02. இரண்டாம் இடம் : விக்கினேஸ்வரா அறநெறிப் பாடசாலை தேற்றாத்தீவு.

03. மூன்றாம் இடம் : சிவசுப்பிரமணியர் அ.பா, பெரிய கல்லாறு.

## பண்ணிசை

01. முதலாம் இடம் : சிவநெறி மன்ற அறநெறிப் பாடசாலை, குருக்கள் மடம்

02. இரண்டாம் இடம் : சைவ மகாசபை அறநெறிப் பாடசாலை, களுவாஞ்சிகுடி

03. மூன்றாம் இடம் : இந்து இளைஞர் மன்ற அ.நெ.பா, பெரிய கல்லாறு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பரத நாட்டியம்

01. முதலாம் இடம் : இந்து மத மேம்பாட்டு அறநெறி பாடசாலை, ஓந்தாச்சிமடம்

## கதாப்பிரசங்கம் - வகுப்பு (1)

01. முதலாம் இடம் : செல்வன் க.தரணிமிகன் – விக்கினேஸ்வரா அறநெறி பாடசாாலை, தேற்றாத்தீவு

## கதாப்பிரசங்கம் - வகுப்பு (2)

01. முதலாம் இடம் : செல்வன் வி.சாரங்கி – விக்கினேஸ்வரா அ.பா, தேற்றாத்தீவு.

02. இரண்டாம் இடம் : செல்வன் சு.கவிசத்தமன் – விக்கினேஸ்வரா அ.பா, தேற்றாத்தீவு.

03. மூன்றாம் இடம் : செல்வி நி.டேவிர்க்ஷா – தெய்வ நெறிக்கழக அ.பா – கோட்டைக்கல்லாறு.

## கதாப்பிரசங்கம் - வகுப்பு (3)

01. முதலாம் இடம் : செல்வி வி.சயூரந்தினி – விக்கினேஸ்வரா அ.பா, தேற்றாத்தீவு.

02. இரண்டாம் இடம் : செல்வி இ.வைஸ்மி – விக்கினேஸ்வரா அ.பா, தேற்றாத்தீவு.

## கதாப்பிரசங்கம் - வகுப்பு (4)

01. முதலாம் இடம் : செல்வி ச.தர்சினி – விக்கினேஸ்வரா அ.பா, தேற்றாத்தீவு.

## கதாப்பிரசங்கம் - வகுப்பு (6)

01. முதலாம் இடம் : செல்வி ச.பாணுஜா – விக்கினேஸ்வரா அ.பா, தேற்றாத்தீவு.

## கதாப்பிரசங்கம் - வகுப்பு (7)

01. முதலாம் இடம் : செல்வன் திக்ஷோர் – தெய்வ நெறிக்கழக அ.பா – கோட்டைக்கல்லாறு.

## கதாப்பிரசங்கம் - வகுப்பு (9)

01. முதலாம் இடம் : செல்வன் இ.அபிகாந் – விக்கினேஸ்வரா அ.பா, தேற்றாத்தீவு.

## கதாப்பிரசங்கம் - வகுப்பு (10)

01. முதலாம் இடம் : செல்வன் ஜெ.பிரவின் – சிவநெறி மன்ற அ.நெ.பா – குருக்கள்மடம்

## கதாப்பிரசங்கம் - வகுப்பு (11)


01. முதலாம் இடம் : செல்வன் ஜோ.நிக்சன் – விக்கினேஸ்வரா அ.பா, தேற்றாத்தீவு.

02. இரண்டாம் இடம் : செல்வன் ஞா.சஞ்ஜீவன் – ஸ்ரீ மண்டபத்தடி வலம்புரி பிள்ளையார் அ.பா. மகிழூர்முனை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சர்வதேச சுற்றாடல் தினம் - 2018 இனை முன்னிட்டு 'முறையற்ற பிளாஸ்ரிக் பாவனையினூடாக ஏற்படுகின்ற சூழல் மாசடைதலைத் தவிர்ப்போம்' எனும் தொனிப்பொருளில் பிரதேச செயலகத்தினால் திறந்த பிரிவில் நடாத்தப்பட்ட ஓவியப்போட்டியில் வெற்றிபெற்ற ஓவியங்கள்

முதலாம் இடம் : செல்வன்.லி. நந்தீஸ்வரன் - செட்டிபாளையம் (அட்டைப்பட முன்பக்க ஓவியம்)



இரண்டாம் இடம்
செல்வி.பொ.கஸ்தூரி
செட்டிபாளையம்



மூன்றாம் இடம்
செல்வி.ச.நிரோஜனா
களுதாவளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்


- எழுவான் சிறப்புமலரினை வெளியிடுவதற்கு பலரும் பல்வேறு வகையில் உதவிகளையும் , ஒத்தாசைகளையும் நல்கியுள்ளனர் அந்தவகையில்
- எழவான் சிறப்பு மலர் வெளியீட்டிற்கு ஆசிச் செய்தி வழங்கிய ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் சுவாமிகள்
- எழுவான் சிறப்பு மலருக்கான வாழ்த்துச் செய்திகளை வழங்கிய மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாண பணிப்பாளர் அவர்கள்.
- எழுவான் சிறப்பு மலர் வெளியிட ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கிய பிரதேச செயலாளர் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் அவர்கள்.
- எழுவான் சிறப்பு மலரினை சிறப்புற வடிவமைப்பதற்கு ஆக்கங்களை வழங்கிய, கலைஞர்கள், எழுத்தாளர்கள்
- எழுவான் சிறப்பு மலருக்கான அட்டைப்படத்தினை வடிவமைத்துத் தந்த திரு க. சுந்தரலிங்கம் திரு. எல். நந்தீஸ்வரன் அவர்கள்
- கலாசார விழா போட்டியில் மாணவர்களை பங்குபற்ற ஊக்கமளித்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்
- எமது அழைப்பினை ஏற்று விழாவில் கலந்து சிறப்பித்த பிரதம, சிறப்பு, விஷேட, கௌரவ அதிதிகள், கலை ஆர்வலர்கள், எழுத்தாளர்கள்.
- விழாவிற்கான நிதி அனுசரணையை ஒழுங்கு செய்து தந்த கிராமசேவை உத்தியோகத்தர்கள், தனவந்தர்கள், வர்த்தகசங்க அமைப்புக்கள், வங்கிகள், சொர்ணம் மற்றும் ஏனைய நகை மாளிகையினர்.
- விழா சிறப்புற நடைபெற எமக்கு களுதாவளை கலாசார மண்டபத்தினை தந்துதவிய ஆலய நிருவாகிகள்.
- கலை நிகழ்வுகளை வழங்கிய கலைமன்றங்கள் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்.
- மலரினை அச்சிட்டுத்தந்த வணசிங்கா அச்சகத்தினர்.
- மற்றும் விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த கலாசார பேரவை உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவிகளை வழங்கிய ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

**திருமதி ராதிகா கருணாகரன்**
கலாசார உத்தியோகத்தர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org